# அறிஞர்கள் தமிழ் அகராதி

தொகுப்பாசிரியர்

சீ. கிருஷ்ணசாமிப் பிள்ளை

பதிப்பாசிரியர்

வ. ஜெயதேவன்

CPL 710251

# அறிஞர்கள் தமிழ் அகராதி


தொகுப்பாசிரியர்

தமிழ்ப்பண்டிதர்

**சீ. கிருஷ்ணசாமிப் பிள்ளை**

பதிப்பாசிரியர்

**வ. ஜெயதேவன்**



**நோக்கு**

4/1083 நேரு நகர்

2 ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **அறிஞர்கள் தமிழ் அகராதி** |
| தொகுப்பாசிரியர் | : சீ. கிருஷ்ணசாமிப் பிள்ளை |
| பதிப்பாசிரியர் | : வ. ஜெயதேவன் |
| பதிப்பு | : முதற் பதிப்பு, 1940, கீழ்ப்பதிப்பு, 2010 |
| உரிமை | : ஆசிரியர்க்கு |
| வெளியீட்டாளர் | : **நோக்கு**<br>4/1083, நேரு நகர்<br>2 ஆவது முதன்மைச் சாலை<br>கொட்டிவாக்கம்<br>சென்னை 600 096 |
| அச்சீட்டாளர் | : மாசறு |
| அச்சிட்ட படிகள் | : 1000 |
| எழுத்துருவின் அளவு | : 13 |
| பக்கம் | : 100 |
| மொழி | : தமிழ் |
| அளவு | : 1/8 டெமி |
| விலை | : ரூ. 80/-. |

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 05 |
| 1. | பல பொருள் ஒரு சொல் தொகுதி | 09 |
| 2. | ஒரு சொல் பல்பொருள் தொகுதி | 44 |
| 3. | பெயரும் வினையும் ஆய சொல் தொகுதி | 69 |
| 4. | பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி | 90 |

# பதிப்புரை

தமிழ் அகராதியியல் வரலாற்றை உற்று நோக்கின் பெரியனவும் சிறியனவுமாக ஏராளமான அகராதிகள் வெளிவந்துள்ளமையை அறியலாம். அவற்றை ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதிகள், பொது அகராதிகள், சிறப்பகராதிகள் எனப் பலவாறு வகைப்படுத்தலாம். அகராதிகளின் தோற்றத்திற்கு ஐரோப்பியர்களே அடிகோலினர் என்பதை அனைவரும் அறிவர். அகராதிகள் அறிமுகமாவதற்கு முன்னர் நிகண்டுகள் பலநூற்றாண்டுகளாகப் பயன்பட்டன என்பதையும் அனைவரும் அறிவர்.

தமிழ்ப் பண்டிதர் சீ. கிருஷ்ணசாமிப் பிள்ளை தொகுத்த ***அறிஞர்கள் தமிழ் அகராதி*** என்னும் இந்த நூல் மரபார்ந்த நிகண்டுகளுக்கும் நவீன அகராதிகளுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறது. இவ்வகராதி ***தமிழமிழ்த அகராதி*** எனவும் வழங்கப்பெறும். வெளி அட்டையில் ***அறிஞர்கள் தமிழ் அகராதி*** எனவும் அகராதிப் பகுதி தொடங்குகையில் ***தமிழமிழ்த அகராதி*** எனவும் 1940இல் சென்னை ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் வெளியீடாக வெளிவந்தபோது அச்சிடப்பெற்றுள்ளன. இவ்வகராதியை வெளியிடுவதற்கு முன்பு 1935இல் ***நவீனதமிழ் அகராதி***, 1939 இல் ***தமிழ் அறிஞர் அகராதி*** என இரு அகராதிகளை இவ்வகராதியின் ஆசிரியர் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த அகராதி பின்வருமாறு நான்கு பகுதிகளை உடையது:

1. இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்களை உடைய சொற்களுக்கு விளக்கம் தருவது முதற் பகுதி ஆகும்.

   எ.கா.: கானம் - காடு, வாசனை, வானம்பாடி, கீதம்

இவ்வாறு ஒரு சொல்லின் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பிடுவதோடு மட்டுமன்றி, அப்பொருள்கள் பயின்றுவருமாறு எடுத்துக்காட்டை ஆசிரியர் பின்வருமாறு புனைந்துள்ளார்:

கானத்தில் கானமலர் கோதிய
கானப்புள் கானமெனப் பாடியதே

(கானத்தில் = காட்டில்; கானமலர் = வாசனை மிக்க பூ; கானப்புள் = வானம்பாடி என்னும் பறவை; கானம் = கீதம்).

ஆசிரியன் புலமைத் திறத்திற்கு இத்தகு எடுத்துக்காட்டுப் புனைவு சான்றாக விளங்குவதோடு, எடுத்துக்காட்டை மனப்பாடம் செய்து கொண்டால் சொற்பொருள்களை நினைவில் பதித்துக்கொள்வதற்கும் அது உறுதுணையாக உதவும்.

மேற்குறித்த நெறியில் முதற்பகுதியில் அகதி முதலாக வைரம் ஈறாகச் சொற்களுக்குப் பொருள் விளக்கமும் எடுத்துக்காட்டுப் புனைவும் அமைந்துள்ளன. ஒரு சில இடங்களில் ஆங்கிலத்திலும் ஆசிரியர் பொருள் கூறியுள்ளார்.

எ.கா.: வைரம் - வயிரம் diamond, வீரத்தன்மை valour.

வைரக் கடுக்கன் பூண்டோனுக்கு வைரமென்ப தில்லையே

2. இரண்டாவது பகுதி ஒரு சொல்லைப் பிரிக்கும்போது இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரும் சொற்களின் விளக்கமாக அமைந்துள்ளது.

எ.கா.: அகிவைரி - கருடன், மயில் (அகி-பாம்பு)

அசோகம் - அசோகமரம், சோகமின்மை.

இம்முறையில் அகிவைரி முதல் வைசூரி வரையிலான சொற்களுக்கு ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார். இப்பகுதியிலும் ஒரு சில இடங்களில் ஆங்கிலத்தில் பொருள் கூறியிருக்கிறார்; அரிதாக இலக்கிய மேற்கோளும் காட்டியுள்ளார்,

எ.கா.: வெங்காயம் - ஈருள்ளி onion, கொடிதாகிய உடம்பு (வெம்மை + காயம்) "வெங்காயம் சுக்கானால்" (தனிப்பாடல்).

3 மூன்றாம் பகுதியில் பெயரும் வினையுமாக வழங்குகின்ற சொற்களுக்கு ஆசிரியர் பொருள்விளக்கமும் ஆங்காங்கு இலக்கிய மேற்கோள்களும் தந்துள்ளார். இவ்வகையில் அசி முதல் வைவி வரையிலான சொற்கள் விளக்கப்பெற்றுள்ளன.

எ.கா.: அசி- அவமதிச்சிரிப்பு, வாள், மிருகவதை செய்வதிற் பிரயோகிக்கப்படும் ஆயுதம். (வி) நகை அசிப்பபோன்று (சிந்தா. நாந்த. 167); பரிகாசம் பண்ணு முசுக்கள் போலொளித்திருந்த முநிவராவி தன்னையும் - அசிக்க வீரன்விட்ட சூலமள்ளிமள்ளியுண்டதே (அருணாசலபு. திருவவ. 22).

4. பலபொருள கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியாக நான்காவது பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் கூட்டப்பெயர்களுக்கு உரிய விளக்கம் இடம்பெற்றுள்ளது. அகக்கூத்து முதல் வைணவாகமம் வரையிலான சொற்கள் இப்பகுதியில் விளக்கப்பெற்றுள்ளன.

எ.கா.:

| | |
|---|---|
| அங்கம் - 4. | தேர், கரி, பரி, காலாள்; இவை சதுரங்கமெனப்படும். |
| அங்கம் - 5. | திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்; இவை பஞ்சாங்கமெனப்படும். |

அங்கம் - 10. மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல் இவை மன்னர்க்குரிய தசாங்கம்.

மேற்குறித்தவாறு பன்னோக்கில் பலவகைப் பயன்பாடு கருதி, பலபொருள் ஒரு சொல் தொகுதி, ஒருசொல் பல்பொருள் தொகுதி, பெயரும் வினையும் ஆய சொல் தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி என்னும் நான்கு பிரிவுகளில் இவ்வகராதியினை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

மொழி கற்பாருக்கும், இலக்கியம் கற்பாருக்கும், கவிதை புனைவாருக்கும் பெரிதும் பயன்படும் இவ்வகராதியின் மீள்பதிப்பாக இந்நூல் வெளிவருகிறது.

தமிழுலகம் இதனை வரவேற்கும் என்று நம்புகிறேன்.

அன்புடன்,

வ. ஜெயதேவன்

# தமிழமிழ்த அகராதி

[List of words that have two or more meanings with their examples that come frequently in poetical shapes and occasionally in prosaic forms.]

பற்பல இடங்களில் பாக்கள் வடிவமாகவும் சிற்சில இடங்களில் உரைநடைப் பான்மையாகவும் உதாரணங்களாகக் கொண்டுவரும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைத் தரும் சொற்களின் அட்டவணை

---

**அகதி**
போக்கற்றவன். தில்லைமரம். 'அகதியொருவ னகதியின்கீழ் அந்திப்பொழுதி லமர்ந்தானே'

**அகலச்செய்தல்**
விரிவாக்குதல் (பெரியதாக்குதல்), நீக்குதல். 'அகலச்செய்யு மல்லல் தன்னை ஆத்தாளகலச் செய்யாளோ'

**அகழான்**
தோண்டமாட்டன், வயலெலி. 'பூமியை அகழானாகில்அகழானைப் பெறுகுவானோ'

**அடங்கல்**
முழுதும், குறைதல். 'செல்வன் செருக்கடங்கல் பிணிவாயடங்கல் மருந்தாமே'

**அடுப்பு**
பரணிநாள், தீவாய்ப்பக்கம்; hearth. 'அடுப்பில் பிறந்தோளடுப்பு ஆவியுள்ளளவு மணையாதே'

**அணங்கு**
அழகு, தெய்வப்பெண், ஆசை அல்லது நோய். 'அணங்குசேர் அணங்கால் அணங்குகொண்டா னொருஆடவனே'

**அணைத்தல்**
தழுவுதல், சேர்தல். 'கோவிந்த னணைத்தகாளை கோவதை அணைத்ததாமே'

**அண்டம்**
ஆகாயம், முட்டை. 'அண்டத்திழிந்த உவணப்புள் அண்டத்தையுண்ட ததிசயமோ'

**அண்டர்**
வானோர், பகைவர், இடையர். 'அண்டரை யெதிர்த்த அண்டரே அண்டர்க்கு உறவாவாரோ'

**அதரிசனன்**
குருடன், கடவுள். 'அதரிசனனோ ஒன்றுங்காணான் அதரிசனனை அறிவிலி காணான்'

**அதிரசம்**
ஒரு பண்ணிகாரம், மிக்க இனிப்புடைய பானம். 'அதிரசமுண்டாள் வாயினதிரச முண்டேன் யானே'

**அத்தான்**
அக்காள்கணவன், முடக்குற்றான் பூடு. 'அத்தான் வாதநோயகன்றிடவே அத்தான் குழம்பை அருந்தினாரே'

**அத்தி**
கொலை, யானை, எலும்பு, கடல். 'அத்தியுண்டஅத்தியினத்தியை அத்தியிலெறியில்முத்தியுறாதோ'

**அந்தம்**
அழகு, சாவு. 'முகத்திலந்த முடையாள்தான் ஐயோ அந்தமடைந் தாளே'

**அமரி**
அமிழ்து, சிறுநீர், விஷம். 'அமரியுரையா னமரியிலடைகாயை அமரியாயீந்தாளன்பனுக்கே'

**அம்பு**
மூங்கில், மேகம், நீர் கணை. 'அம்பு தோளியன்பன் அம்புபருகு மம்பிலே அம்பெய்தான்'

**அம்மை**
தாய், வைசூரி; small-pox, பார்வதி, தருமதேவதை. 'அம்மைக்கு அம்மை வார்த்த தம்மையருளா லகலாதோ'

**அயிராணி**
பார்வதி, இந்திராணி. 'பித்தன் பத்தினி அயிராணி போகிமனையா ளயிராணி'

**அரம்பை**
வாழை, தெய்வப்பெண். 'அரம்பைக் கனியை ஐராவதனுக்கே ஆர்வமொடுதந்தா ளரம்பையே'

**அரவமறா**
பாம்புகள் நீங்காத, சப்தமடங்காத. 'அரவமறாச் சிலம்பிலரியெனு மரவமறா தென்றுமே'

**அருத்தம்**
பொன், சொற்பயன், பாதி. 'அருத்தமிலா னுவலருத்தத்தி லருத்தபாகமுங் கொள்வாரோ'

**அலவன்**
சந்திரன், கற்கடகவிராசி, பூனை. 'தண்கதிரலவனுள் தலையிலலவன் தரைமீதலவனைக் கண்டதே'

**அலி**
நறுவிலிமரம், பேடி eunuch, நெருப்பு, யமன். 'அலிக்கனியுண்ட அலியினா லியகல அழலுமலியென அலியும் வந்தான்'

**அல்லி**
பூந்தாது, ஆம்பல், இரா. 'அல்லிசே ரல்லியை அல்லியில் கண்டேனே'

**அல்லியம்**
கொட்டி, இடையருர், விட்டுணுக் கூத்து. 'அல்லியம்பூத்த அல்லியத்தில் அல்லியமாடினான் ஆதிகேசவனே'

**அவல்**
ஓர் சிற்றுணவு, பள்ளம். 'அவலைத் தின்று அவலினீரருந்தினாள் அவ்வை யெம்பாட்டியே'

**அழுவம்**
கடல், நாடு, வழுக்குநிலம். 'அழுவங் கடந்து அழுவம்பெறவே அழுவத்து ளருஞ்சமர் புரிந்தான்'

**அறுகால்**
வண்டு, அறுபட்ட கால். 'அறுகாலுக் கோரறுகாலானால் மறுகாலு முளைப்பதுண்டோ'

**அறுகு**
யானை, ஓர் புல். 'அறுகானனுக்கு அழகுறவே அறுகுசாத்தினா னடியவனே' (அறுகானனன் = கணபதி).

**அற்றம்**
இல்லாமை, சமயம், சோர்வு, அச்சம். 'அற்றமுற்ற அற்றத்தி லற்றமந்த அகற்றுவையோ'

**அற்றார்**
வறியோர், முனிவர். 'பொருளற்றாரும் பற்றற்றாரும் பரவியேத்தும் பரமயோகி'

**அனந்தன்**
அட்டநாகத்தொன்று, சிவன், ஆதிசேடன், நாராயணன். 'அனந்தனை யணிந்தோ னனந்தனே அனந்தன்மீ துறங்கினோ னனந்தனே'

**அனிச்சை**
அருப்பமலர், விருப்பின்மை, நாகமல்லி. 'அனிச்சையும்பொறாத மெல்லடியா ளனிச்சையாகி அனிச்சையை எறிவளோ'

**அன்று**
அந்நாள், அல்ல. 'அவனன்று கண்டது ஆண்டியன் றென்றான்'

**அன்னம்**
சோறு, ஒரு பறவை, கவரிமா. 'அன்னநிறத்து அன்னநடையாளுக் கன்னத்தின்கண் களமைந்ததென்னே'

**ஆக்கொல்லி**
தில்லைமரம், ஓர் புழு. 'ஆக்கொல்லியி னருமலரை ஆக்கொல்லி அரித்துத் தின்னும்'

**ஆசை**
திசை, பொன், விருப்பம். 'ஆசையொட்டிலுள்ளவை ஆசையேயானாலுமவனாசை அகலாதே'

**ஆடகம்**
பொன், துவரை. 'ஆடகவிழையா ளதிஆடகமுண்பா ளார்வமுடனே'

**ஆடி**
ஆடிமாதம், கண்ணாடி. 'ஆடிமதியி லம்மனழகை ஆடியினில் கண்டேனே'

**ஆடு**
வெற்றி, ஆடென்னும் மிருகம். 'ஆடுசே ரிசையேவேண்டி அறுமுக னாடிவர்த்தான்'

**ஆடை**
சீலை, நேத்திரப்படலம். 'ஆடைகிழியக் கண்டானுக்கு ஆடையினீர் ததும்பியதே'

**ஆடை**
சித்திரைநாள், சிலை. 'ஆடைநானி லணிமிக்க ஆடையொன்றை யணிந்தானே'

**ஆட்கொல்வி**
கொலைகாரன், பணம். 'ஆறலைத் திட்டிய ஆட்கொல்வியு மாட்கொல்லியா லழிவுற்றான்'

**ஆண்டு**
அவ்விடம், வருடம். 'அன்னதான மாண்டியற்றிப் பல்லாண்டவன்தான் வதிந்தானே'

**ஆத்திசூடி**
சிவன், ஔவை இயற்றிய நூல். 'ஆத்திசூடிக் கஞ்சலிசெய்தே ஆத்திசூடியை ஓதினானே'

**ஆரணி**
ஓர் ஊர், பார்வதி. 'ஆரணி தன்னில் குடிகொண்ட ஆரணித்தாயே காப்பாயே'

**ஆரல்**
கார்த்திகைநாள், ஆரால்மீன், மதில், நெருப்பு. 'ஆரலன்று ஆரலுண்டான் ஆரல்மீதே ஆரல்வைத்தான்'

**ஆரியன்**
மிலேச்சன், அறிவுடையவன், வைத்தியன். 'சாதியிலுமாரியன் நீதியிலுமாரியன்நோய் தீராரியனே'

**ஆலம்**
மழுவாயுதம், பாம்பின் நஞ்சு, நீர், ஆலமரம். 'ஆலமேந்து மால கண்டன் வியக்கவே ஆலமீதி லாலமிலையி லுறங்குவான்'

**ஆவி**
நீராவி, பிட்டு, உயிர், குளம். 'ஆவிசே ராவியை ஆவியனை யானுக்கு ஆவியருகே படைத்தானே'

**ஆழி**
கடல், சக்கரம், மோதிரம். 'ஆழி துயின்ற ஆழியானை ஆழிவிரலின னஞ்சலிசெய்தான்'

**ஆறு**
ஒழுக்கம், நதி, ஓரெண். 'ஆறுடையானுக்கு ஆறுகடக்கவோ ஆறுகாசில்லை கைதனிலே'

**இசை**
இசைப்பாட்டு, புகழ். 'இசை வல்வானிசையும் திசையெலா மெட்டியதே'

**இஞ்சி**
மதில், வாவி, கேடகம், இஞ்சிக் கிழங்கு. 'இஞ்சிசூழ் இஞ்சியருகே இஞ்சிபூண்டோ னிஞ்சி தின்றான்'

**இடை**
சமயம், நுகப்பு, இடம். 'இடையறிந்து இடையினாரை நல்லிடையே சார்த்தானே'

**இணங்கு**
பிசாசம், உடன்படு. 'சமத்தி லிணங் கோடாட ஈசனு மிணங்குவான்'

**இணை**
உவமை, துணை, சேரென்னேவல். 'இணைதா னில்லா ஒருவனுக்கே இணையாய்இணைந்தா ளீசுவரியே'

**இந்திரன்**
மிருகசீரிடநாள், தேவேந்திரன். 'இந்திரனாளிற் றோன்றி இந்திரன் போலும் வாழ்ந்தான்'

**இந்து**
சந்திரன், கரி Charcoal. 'இந்துநேர் முகமும் சமத்திந்துவி னிறமா யாகியதே'

**இரசம்**
சாறு, பாதரசம், மிளகுநீர். 'இலையி னிரசத்தா லிரசத்தைக்கட்டா னிரசத்தின்சோறும் காணானே'

**இரணம்**
உணவு, கடன், போர், புண். 'இரணத்தையுண்டே இரணத்தைத் தீர்க்கா னிரணத்தி லிரணம்பட் டொழிவான்'

**இரதி**
காந்தள், பித்தளை, இலந்தைமரம், மன்மதன்மனைவி. 'இரதிசூடி இரதியணிந்து இரதிக்கனியுண்டா ளிரதியே'

**இரவு**
இராத்திரி, இரத்தல். 'இரவி லூர்தொறும் இரவெடுப்பா னிரஞ்சடையோன்'

**இருப்பை**
இலுப்பைமரம், இருப்பா யென்னுமுற்று. 'இருப்பைநீ ழலி லிருப்பையென்று எண்ணியெண்ணி ஏமாந்தேனே'

**இரும்பை**
குடம், பாம்பு. 'செம்பொன் னிரும் பையுள் சுருண்டிருந்த இரும்பை யாங்கே கண்டானே'

**இருளன்**
மலையில் வாழுமோர் சாதியான், ஒரு பிசாசம். 'இருளர்கூடி இடுக்கண்தீர இருளனை இறைஞ்சுவாரே'

**இருளி**
இருசி (ஓர் பெண்பிசாசு), இருளப்பெண், வெட்கம். 'இருளியே யிருளியை இருளியற் றீர்ப்பனோ ஓரிருளனே'

**இலந்தை**
குளம், ஓர் மரம். 'ஆழமிக்க இலந்தைக்குள் இலந்தைக் கனிகள் விழுந்தனவே'

**இலாடம்**
நெற்றி, ஓர் தேசம், புளியமரம், குதிரைக் குளம்பில் தைக்கும் இரும்பு. 'திலதமணி லாடமுடை லாடத்தான் லாடத்தடியில் லாடச்சுவடு கண்டானே'

**இலை**
உலோபத்தனம் பச்சிலை. 'இலை யென்பா னிலைமேய் மாட்டுக்கு மிழிஞனே'

**இல்லவை**
வீட்டிலுள்ள பொருள்கள், இல்லாதவை. 'இல்லவையெல்லாம் ஈரமிலாள்கையிடையுறினே இல்லவையாம்'

**இல்லாள்**
மனைவி, தரித்திரி. 'இல்லாளு மில்லாளாகி வீனரு மிழித் துரைப்பா ரிருநிலத்தே'

**இல்லான்**
கணவன், தரித்திரன். 'எனை மணந்த இல்லானும் என்றுமே இல்லானா னானே'

**இளநீர்**
தேங்காய்க்குண்ணீர், மணிகளின் வெள்ளொளி. 'இளநீர் கொண்டு கழுவுறினு மிளநீ ரிலகிக் காணுமோ'

**இறந்தான்**
சென்றான், செத்தான். 'கள்ளியங் காடிடை இறந்தானே கட்செவி கடித்தே இறந்தானே'

**இன்னார்**
பகைவர், இத்தன்மையர். 'ஈரமிலா இன்னார்மொழியி லின்னாரென் றறிந்தேனே'

**ஈ**
கொடுவென்னேவல், ஈ என்னும் பறவை. 'ஈயான் கையில் ஈயது மொய்க்குமோ'

**ஈட்டி**
சம்பாதித்தென்னும் வினையெச்சம், சவளம் lance. 'பணத்தை ஈட்டிய பெரும்பாவி பாதகன் ஈட்டிக் கிரையானான்'

**ஈந்து**
ஈச்சமரம், கொடுத்தென்னும் வினை யெச்சம். 'ஈந்துவின் சேந்தி ஈந்து இன்பனுக் கன்புபூண்டான்'

**ஈயை**
இஞ்சி, ஈ என்னும் பறவையை. 'ஈயைவிற்பா னீயைஓட்டான்'

**ஈரம்**
அன்பு, குளிர்ச்சி. 'ஈரமிலாளிட்ட இன்னடிசில் ஈரவினீரத்தை எரித்ததே'

**ஈழம்**
சிங்களதேசம், பொன், கள். 'ஈழத் தான் ஈழத்தைத் தொலைத்தே ஈழத்தைப்பருகி ஈனனானான்'

**உப்பு**
மகளிர் விளையாட்டு, இலவணம், இனிமை. 'உப்பாடுவாளீந்த உப்பதுவு முள்ளத்தி லுப்பைத் தருமே'

**உருக்கம்**
மனவிரக்கம், தொடை. 'உருக்கமுடைய உத்தமன்தன் உருக்க மீதே உயிர்துறந்தாள்'

**உருத்திரம்**
பெருங்கோபம், மஞ்சள். 'உருத்திர குணத்தாள் தன்னுடம்பில் உருத் திரத்தையும் பூசாளே'

**உழுவான்**
உழுபவன், பிள்ளைப்பூச்சி. 'உழு வானடியில் உழுவானொன்று வழுவழுவென ஓடியதே'

**உள்ளார்**
உடையோர், பகைவர். 'பொன்னுள்ளா ரெவரேனும் உள்ளாரும் போற்றிசெய்வர்'

**உள்ளான்**
உள்ளான் ஓர் குருவி, நினைக்க மாட்டான். 'உள்ளதை விற்று உள்ளானை வாங்க ஒருபோது முள்ளானே'

**ஊதல்**
காற்று, வீங்கல். 'ஊதலா லூத்தை வாயன் உடலமது ஊதலாச்சு'

**ஊத்தைப்பாண்டம்**
உடம்பு, அழுக்குப்பாத்திரம். 'ஊத்தைப்பாண்டத்தா லுடைமை தேடினாள் ஊத்தைப்பாண்டத்தி லுணுண்ணாளோ'

**ஊமச்சி**
ஊமைப்பெண், ஓர் நத்தை. 'ஊமச்சி தன் மூலநோய்க்கு ஊமச்சியை வறுத்துத் தின்றாள்'

**ஊமன்**
ஊமை, கூகை. 'ஊமன்வதியுங்கூரை மீதே ஊமனொன்று கூவியதே'

**எடார்**
வெளிநிலம், எடுக்கமாட்டார். 'எடாரில் வீழ்ந்தானை எடாரே ஏதுமற்றா ராவாரே'

**எண்**
எள், எண்ணொன்னுமேவல். 'செக்கி லெண்ணை எண்ணிலுமே சேரலரை எண்ணொணாதே'

**எமன்**
எம்முடையவன், யமன். 'எமனாவி கவரவந்த எமனேயோ வென்று தைத்தா னேறூர்ந்தோனே'

**எம்மை**
எப்பிறப்பு, எங்களை. 'எம்மையிலு மெம்மையாண்ட எமதுகுல தெய்வமென்பேன்'

**எரி**
கேட்டைநாள், தீ, நரகம். 'அறஞ் செய்யா னெரிநா ளிறந்தே எரிவா யெரியு ளமிழ்ந்தானே'

**எல்வி**
சூரியன், இராத்திரி. 'கதிரெல்லி யைக் கண்டஞ்கும் காரெல்லியில் கண்ணுறங்கும்' 'காரெல்வியில் கொடியுறங்கும் கதிரெல்வியில் கள்ளியுறங்காள்'

**எளியன்**
தரித்திரன், சுலபமானவன் (இரங்கப் படத்தக்கவன்). 'அறிவுடைய எளியனுக்கு ஆண்டவனு மெளியனாவன்'

**என்று**
சூரியன், எந்நாள். 'வெங்கதி ரென்றுவேகும் பாலையி லென்றுங் குளிரையடையாதே'

**என்னை**
என்தாய், என்ன. 'எளியேனை என்னையு மென்னையென்று கேட்கும்மோ'

**ஏகன்**
ஒருவன், கடவுள். 'ஏகனா யிருந்த போழ்தும் ஏகனை நினைந்தே னில்லை'

**ஏட்டை**
தளர்வு, ஆசை. 'ஏட்டைசேர் பருவத்து மேந்திழைமீ தேட்டை கொண்டாள்'

**ஏணி**
மான்கன்று, இறைவை ladder. 'ஏணியொன்று ஏணியருகு நிற்கக் கண்டேனே'

**ஏய்த்தல்**
உவமித்தல், வஞ்சித்தல். 'நாயை யேய்த்த நன்றியாளனை நவமில் பேய னேய்த்தானே'

**ஏழை**
பெண், தரித்திரன். 'எருதேறி ஏழைபங்க னிவ்வேழையை ஏனென்றுங் கேளார் கொல்லோ'

**ஏனாதி**
மறவன், தளர்ந்தன், நாவிதன். 'காடுறை ஏனாதி கடுஞ்சம ரேனாதியொடு சிரைக்கு மேனாதியு மிகவுண்டே'

**ஐயம்**
சந்தேகம், பிச்சை. 'ஐயங் கொண்டே ஐயமிட்டான் ஐயன் பதமு மெய்துவனோ'

**ஐவர்**
ஐந்துபொறி, பாண்டவர். 'போக்கிடம் ஐவர்க்குப் பொய்க் கூடேயாம் பொருதுவென்றார் போரினி லைவரேயாம்'

**ஒன்னுதல்**
ஒள்ளிய நெற்றியையுடைய பெண், கூடுதல். 'ஓயாக் கவலையுடையானுக்கு மொன்னுதலோடு ஒன்னுதலுண்டு'

**ஓடை**
நெற்றிப்பட்டம், மலைவழி, நீரோடை, ஓர்கொடி. 'ஓடையணிவானோடையருகி னோடைமீது ஓடையைக் கண்டான்'

**ஓட்டம்**
ஓடுமோட்டம், உதடு. 'ஓட்டமெடுத்த ஒள்ளலர்தம் ஓட்டம் ஒல்லையிலசைந்தனவே'

**ஓதி**
மலை, பூனை, ஓணான், அறிவு, மயிர். 'ஓதிகீழோடு மோதிக் கொதுங்கு மோதியை ஓதிசேர் கரியோதி கண்டாள்'

**ஓரம்**
பக்கம், பட்சபாதம். 'ஒலிகடலோரம் நின்றவனே ஓரமொழி யை உரைப்பானே'

**கஞ்சன்**
பிரமா, கிருஷ்ணமூர்த்தியின் மாமன். 'கஞ்சன் கருதியவாறே கஞ்சனுங் கண்ணனால் கொலை யுண்டான்'

**கஞ்சி**
காஞ்சிபுரம், அன்னப்பால். 'கஞ்சிப் பதியில் வாழ்வானுக்குக் கஞ்சி திண்டாட்டம்' 'கஞ்சிகுடியாள் கமழ்கஞ்சியைக் குடியாயென் பாளோ'

**கடை**
முடிவு, அங்காடி. 'கடையில் கடைவைத்தே காலங்கழித்தாள் கணக்கன்மகனே'

**கடம்பை**
கடம்பூர், ஓர் காட்டுமிருகம். 'கடம்பைப்பதியில் கடம்பையொன்றைக் கனிவொடும் வளர்த்தேனே'

**கட்டுரை**
உறுதிச்சொல், பொய். 'கட்டுரை கடவா ளரிச்சந்திரனெனக் கழறுதல் கட்டுரையாமோ'

**கணக்கன்**
கணக்குப் பார்க்குமொரு சாதியான், சண்பகமரம். 'கணக்கன் வைத்த கணக்கனிடம் கர்த்னுக்கே பூப்பறித்தாள்'

**கண்டமாலை**
கழுத்தில் வரும் புண், பார்த்த பூமாலை. 'கண்டமாலை உடைய் காவலன் கடையில் கண்ட மாலையையுங் கொண்டணி வானோ'

**கண்ணுக்கினியான்**
கணவன், பொன்னாங்காணி. 'கண்ணுக்கினியா னல்முறவே கண்ணுக்கினியானைக் கொணர் வாளே'

**கண்ணுதல்**
நெற்றிக்கண்ணரான சிவபிரான், கருதுதல். 'கண்ணுதலைக் கண்ணுதல் களவிலு மில்லையம்மா'

**கண்முடி**
குருடனான திருதராஷ்டிரன், அறிவீனனான துரியோதனன். 'கண்மூடிமன்னவள் காசினிக்கண் கண்மூடி மகனைப்பெற்றான்'

**கதலி**
காற்றாடி, விருதுக்கொடி, வாழை மரம். 'ககனத்தேபறக்குங் கதலியும் கதலிகீறவே கதலியில் சிக்கியதே'

**கத்தரி**
அக்கினிநட்சத்திரமுடைய வேனிற் காலம், வழுதுணை, ஓர் பாம்பு, கத்தரிக்கோல். 'கத்தரியில் கத்தரி யறுத்தானைக் கடுங்கத்தரியும் கத்தரியெனக் கடித்ததே'

**கந்துகம்**
பந்து, குறுநிலமன்னர் குதிரை. 'கன்னி கையாடுதல் கந்துகமே கடுஞ்சம ருருள்வது கந்துகமே'

**கம்பர்**
ஒரு தெய்வக்கவிஞன், பிரமக பாலத்தை யேந்தினசிவனார். 'காகுத்தனைப் பாடினார் கம்பரே காட்டிலாடினார் கம்பரே'

**கம்பு**
சங்கு, ஓர் பயிர், மரக்கொம்பு. 'கம்புடைக் கண்ணன் கம்பம் வடையை மரக்கம்பிலேறித் தின்றானே'

**கரிமுகன்**
விநாயகன், கரிபூசின முகத்தினன். 'கபாலியின்மகன் கரிமுகனே கருத்தொடு சமைப்பான் கரிமுகனே'

**கரியவன்**
கருமை நிறமுடைய திருமால், விஷத்தையுடைய சிவன், ஐராவத மேறிய இந்திரன், மக்கள் கால முடிவுக்குச் சாட்சியான யமன், மனவைரமுடைய சனி. 'ஆயன் கரியவன் ஆயமதிநதி மேயோன் கரியவன் ஆயிரங்கண்ணனும் கரியவனாயுள் கணக்கனும் கரியவன் விரிகுரல்வாயச வாகனன் கரியனே'

**கருணை**
பெருங்கிழங்கு, கிருபை. 'கருணைப் பொரியல் படைப் பாளைக் கருணைக்கடலே யென்பானே'

**கருத்தன்**
சிந்தனையுடையவன், கடவுள். 'கருத்தனாய்ப் பாடமாட்டேன் கந்தனைப்பயந்த கருத்தனே'

**கருப்பை**
கருவின்பை, ஓர்வகைப் பனைமரம், காரெலி. 'கருப்பையுடையாள் கருப்பையடியில் கருப்பையோடக் கண்டாளே'

**கருமான்**
கலைமான், கொல்லன். 'கருமானோ புல்மேயும் கருமானோ இரும் படிப்பான்'

**கருவம்**
இலட்சங் கோடி, அகங்காரம். 'கருவ நிதியுடையானும் கருவமதைக் கொளலாமோ'

**கருவை**
ஒருர், வரகுவைக்கோல். 'கருவை யிலுள காராம்பசு கருவையை நிரம்பத் தின்றதே'

**கலசம்**
பால், குடம். 'காராம்பசுவின் கலசத் தைக் கலசமுனிவன் குடித்தானே'

**கவலை**
ஓர் மீன், துன்பம், கவர்வழி (சந்தி). 'கவலையுண்ணாள் கவலை கொண்ட கவலையில்நின்று கரைகின்றாள்'

**கழை**
கரும்பு, மூங்கில். 'காமன்கைச் சாபமும் செங்கழையே கண் ணுதல் வில்லது பைங்கழையே'

**களவன்**
திருடன், நண்டு. 'களவனைப் போல் களவனும் சகதியி லெட்டிப் பார்த்ததே'

**களை**
அழகு, அயர்வு, களையென் னேவல். 'களையுடையாள் களை யுற்றே கழனிக்கண் களை கட்டாள்'

**கள்ளன்**
கள்ளச்சாதியான், திருடன். 'கள்ளர் குடியில் பிறந்தோனே கள்ளன் மகளை மணந்தானே'

**கள்ளி**
திருடி, ஓர் மரம். 'கள்ளியொருவள் கள்ளியின்கீழ் கான்முளையைக் கிடத்திட்டாள்'

**கறி**
மிளகு, பதார்த்தம். 'கறியின் பொடியைக் கலவாதால் கறிக்குக் காரம் காண்கிலையே'

**கறுத்தவன்**
கரியவன், பகைவன். 'கறுத்தவன் தலையைக் கறுத்தவனும் கதிராழி கொண்டு கொய்தானே'

**கறுப்பன்**
கரியவன், கார்நெல், ஓர் தேவதை. 'கறுப்பன் கறுப்பனையறுத்தேகறுப் பனுக்குப் பொங்கலிட் டான்'

**கற்பம்**
மூப்புவராமற் செய்யும் மருந்து, உலகமுடியுங் காலம், வேதாங்க மாறிலொன்று. 'கற்பந்தின்று கற்பமுறினுங் கவலையென்றே கற்பங்கூறுமே'

**கன்று**
கைவளையல், எருமை பசு முதலிய வற்றின் கன்று, இள மரம். 'கன்றின் கையாள் பசுவின் கன்றை மாங்கன்றில் பிணித்தானே'

**கன்னம்**
கன்னக்கோல், கதுப்பு. 'கன்னமிடுங் கள்வனைக் கன்னமீதி லறைந்தேனே'

**கன்னார்**

ஓர் சாதி, ஒரு மருந்துச்சரக்கு. *'கன்னார் காசுக்குக் கிடைப்பரிதே கன்னாருறையுந் தெருவின்கண்'*

**கன்னி**

கற்றாழை, குமரி, ஓராறு. *'கன்னி நாற்றங் கமழ்கன்னி தென்திசைக் கன்னியாடினாள்'*

**காக்கை**

அவிட்டநாள், காகம், காத்தல். *'காக்கையில் பிறந்து காக்கைபோ லலைவேளைக் காக்கையும் நினது கடனேயன்றோ'*

**காசு**

பொன் (நாணயம்), குற்றம், கோழை. *'காசைக்கருதுங் காசுடைக் குணத்தோர் காசில்சிக்கு மியாவாரே'*

**காஞ்சி**

ஓர் மரம், எண்கோவைமணி, நிலையின்மை, ஓர் பண், காஞ்சிபுரம். *'காஞ்சியடியே காஞ்சிபூண்டாள் காயத்தின் காஞ்சியைக் காஞ்சியில் பாடினாள்'*

**காடு**

ஆரணியம், சுடுகாடு. *'காட்டில் வேடனா லடியுண்டார் காட்டி லாடுங் கங்காளரே'*

**காட்சி**

அறிவு, தரிசனம். *'தெள்ளிய காட்சியின் தோன்றலுமே தேரார்காட்சிக்கு மெளியனோ'*

**காட்டான்**

நாகரிகமில்லாதவன், காண்பிக்க மாட்டான். *'காட்டானுக்குக் கனவிலுமே கண்ணடியைக் காட்டானோ'*

**காட்டெருமை**

ஓரெருமை, கள்ளிப்பால், எருக்கம் பால். *'காட்டெருமைக் கன்றும் காட்டெருமைப்பால் குடியாதே'*

**காதம்**

ஏழரைநாழிகை வழிதூரம், கள், கொலை, சதுரத்துரவு. *'காதங் கடந்து காதம்பருகிக் காதம்புரி யவான் காதத்தருகில் நின்றானே'*

**காதல்**

ஆந்தை கௌளி முதலியவைகளி னொலி, ஆசை, கொல்லல். *'கௌளியின் காதல் கேட்டே காதலனைக் காதல் தகுமோ வென்றாள்'*

**காத்தான்**

காப்பாற்றினவன், ஓர் தேவதை. *'என்று மெம்மைக் காத்தானே ஏற்றமிக்க காத்தானே'*

**காமன்**

திப்பிலி (பித்தநோய் தீர்ப்பது), மன்மதன், வண்டு. *'காமனை மெல்பவள் காமன்பால் கருங்காமனையே விடுப்பாளே'*

**காமி**

காமவெறியன், உவர்மண். *'காரிகை யரைக் கருதுபவன் காமியே கலையின்கறை நீக்குவதுங் காமியே'*

**காயம்**

அடியாலாய காயம் wound, பெருங் காயம், ஆகாயம். *'காயத்தின்மீ தப்பியகாயம் காயத்திலும் கமழலாச்சே'*

**காரி**

காக்கை, சனி, கிளி, கரிக்குருவி, நஞ்சு, இந்திரன். *'காரிமீதிவர்ந் தோன் காரியே சொன்னதைச் சொல்லும் காரியே காரிக்குப் போதித்தோன் கார்கண்டனே காரி கண்ணாயிரம் நாரியால் பெற்றான்'*

**காரிகை**

அழகு, பெண், அமுதசாகரனி யற்றிய ஓர் யாப்புநூல். *'காரிகை சேர் காரிகையும் காரிகைகற்றுக் கவிதையானாள்'*

**கார்**

கருமை, மேகம், நீர், கார்நெல். *'கார்நிறக் கார் காரைப்பொழியக் காரும் கதிரை ஈன்றதே'*

**காலாந்தகன்**

நமன், சிவன். *'கடாமிசை வந்த காலாந்தகனைக் காலா லுதைத் தான் காலாந்தகனும்'*

**காவலன்**

அரசன், மெய்காப்பாளன். *'மாநிலங் காவலனோடு காவலனுங் கானகமண்டினானே'*

**காழியர்**
பிட்டுவாணிகர், வண்ணார். 'வந்தி உதித்தது காழியர்வழியே உப்பை வளர்ந்தது காழியர் குலமே'

**காளை**
இளவெருது, கட்டிளமையோன். 'காளையொன்று தன்கொம்பால் காளையின் மார்பைக் கீண்டியதே'

**கானகம்**
காடு, காலின்நகம், கருஞ்சீரகம். 'கானகத்திற் செல்கையிலே கானகம்பெயரக் கானகமப் பினான்'

**கானம்**
காடு, வாசனை, வானம்பாடி, கீதம். 'கானத்தில் கானமலர் கோதிய கானப்புள் கானமெனப் பாடியதே'

**கானவன்**
குரங்கு, வேடன். 'கானவர்கோன் கானவனுக்குக் கனியொன்று கொடுத்தானே' கானவர்கோன் - சுக்கிரீவன்; கானவன் - குகன்.

**கிருஷ்ணவேணி**
ஒரு மாதின் பெயர், காக்கணஞ் செடி. 'கிருஷ்ணவேணியை மறவாதே கிருஷ்ணவேணியை நட்டானே'

**கிழவன்**
மூப்புடையோன், உரிமையுடைய ஆள். 'நரைத்த கிழவன் நிதியந் தனக்கே நாரியரும் கிழவரானார்'

**கிழவன்**
உரியவன், மூப்புடையோன், கணவன். 'மலைக்கிழவன் கிழவனாகிமடமயில் மாதுக்குக்கிழவனானான்'

**கிழவி**
மூப்புடையவள், தலைவி, முருங்கை மரம். 'கிழவியான இல்லக் கிழவியும் கீழைத் திசையே கிழவியை நட்டாள்'

**கிளிமூக்கன்**
கிளியின் மூக்குபோன்றவன், கற்றாழை. 'கிளிமூக்கனங்கமெலாம் கிளிமூக்கன் நாற்றம் வீசும்'

**கிளை**
மரக்கிளை, உறவு. 'கிளைவிட்ட புள்போலும் கிளைஒரீஇத் துறவுற்றான்'

**கிள்ளை**
குதிரை, கிளி. 'பாயுங்கிள்ளை மீதேறினான் பச்சைக் கிள்ளையை யேந்தினாள்'

**கீரி**
நகுலம், கள்ளிமரம். 'கானகத்துக் கீரிமிதே கடுகெனக் கீரியுமேறியதே'

**குட்டன்**
ஆட்டுக்குட்டி, மகன், குட்டரோகி. 'குட்டனைக் கவர்ந்த குட்டன் குட்டனாகிச் சீர்குலைந்தான்'

**குட்டை**
குள்ளம், சிறுகுளம். 'குட்டையன் குளித்த குட்டைக்கண் கொட்டியும் சாலப் பூத்தனவே'

**குந்தி**
பாண்டவர்தாய், கள்ளு, குந்தியிரு. 'குந்தியனையாள் குந்தியைக் குந்திக் குந்திக் குடித்தானே'

**குமரி**
குமரிநதி, பருவமுடையவள், கற்றாழை. 'குமரியாடிய குமரியினுடலில் குமரியினாற்றம் நீங்கிலையே'

**குமுதம்**
பேரொலி, படையிலொரு தொகை, வெள்ளாம்பல், அடுப்பு, தருப்பை. 'குமுதமிடு குமுதப்படை குமுதக்குழியருகே குமுதத்தெரி குமுதமாயின'

**குய்யம்**
வஞ்சகம், பெண்குறி, மறைவு. 'குய்யமில் சிந்தையாள் கூறை கொண்டே குய்யத்துக்குக் குய்யம் புரிவாள்'

**குரம்பை**
பறவைக்கூடு, முட்டை, உடம்பு. 'குரம்பையி லிடுவது குருவியின் குரம்பையே சிற்றுயிர் வதிவதோ குரம்பையு ளாமே'

**குரல்**
மிடற்றாற் பிறக்குமிசை, பயிர்க்கதிர், கொத்து. 'பெண்ணின் குரலால் பைங்குரலு முற்றிக் குரலாகித் தொங்கினவே'

**குருதி**
செவ்வாய், சிவப்பு, இரத்தம். 'குருதிநாளில் குருதிநிறத்துக் குருதி வெள்ளம் குபுகுபுவென வோடியதே'

**குருநாதன்**
துருசு, குமரக்கடவுள்.
'குருநாதனைச் சுண்ணிக்கக் குருநாத னருள்வேண்டும்'

**குளம்**
நெற்றி, தடாகம், வெல்லம். 'பிறைக்குளத்தாள் பூங்குளத்துள் பரமனுக்கே குளம்கரைத்தாள்'

**குளிர்**
குளிர்ச்சி, நண்டு, கவண், சூலம், மழு. 'குளிரில் சேற்றுக்குளிரை யுண்டோன் குளிர்கொடு புள்ளோச்சுவானே மிளிருங்குளிரு மூளுங்குளிரு முடையோனைக் கைகூப்பு வானே'

**குறவன்**
பாதரசம், ஓர் சாதியான் (இங்கு முருகப்பிரான்). 'குறவனைக் கட்டவும் குறவனருள் வேண்டுமே'

**கூடம்**
வஞ்சகம், வீட்டினுளொரு பகுதி, மலையினுச்சி. 'கூடமில்லா நெஞ்சத் தான் கூடமதி லுறங்குகின்றான்'

**கூடல்**
மதுரை, கூடுதல்.
'கூடலாளொடுங் கூடல்தானே கூத்தன்தனக்கே யுரித்தம்மா'

**கூட்டம்**
சனத்தொகுதி, போர், பிண்ணாக்கு. 'கூட்டமாய்ச் சென்றோர் கடுங்கூட்ட மதில் செக்கிலிடு கூட்டமானாரே'

**கூதல்**
கூவுதல், குளிர்.
'கூதலுக் காற்றாக் கூத்தன் கடுங்கூதலுக் குயிர்வாழ்வானா'

**கூத்தன்**
உயிர், சிவன்.
'ஆக்கையினின் றகன்றகூத்தன் ஆநந்தக்கூத்தனை யடைவானோ'

**கூத்தி**
நடனஞ்செய்பவள், (பார்வதி), வைப்பாட்டி.
'கூத்திதன் கோலத்தைக் கூத்தியின் செல்வன் கண்டு களிப்பானே'

**கூழ்**
மாவினாற் சமைத்த உணவு, பயிர், பொன்.
'கூழைப் பருகிப் பசுங்கூழ்காத்துப் பைங்கூ ழணியைப் பூண்டாளே'

**கூற்றம்**
சொல், நமன்.
'யானுரைக்குங் கடுங்கூற்றம் நின்னுயிர்க்கே கொடுங்கூற்றம்'

**கூற்று**
சொல், நமன்.
'வறுமையுடையான் வாய்க்கூற்றே உயிர்க்குங்கூற்றாய் விளையும்மே'

**கூனன்**
ஆமை, சங்கு, கூனுள்ளோன். 'கூனனைக் கூனனேந்தியதைக் கூனனென்றுங் காணானே'

**கேட்டை**
கேட்டை நட்சத்திரம், மூதேவி. 'கேட்டையில் பூத்தாள்கேள்வன் கேட்டையையே அடையலானான்'

**கை**
ஒழுக்கம், கரம்.
'கையேயில்லாள் கையினிலே கனகவளையை யணிந்தாளே'

**கைவிலங்கு**
கைக்கிடும் விலங்கு, யானை.
'கைவிலங் குடையான் கைவிலங்கைக் கொன்றா னென்பதுங் கட்டுரையே'

**கொக்கு**
மூலநாள், குதிரை, மாமரம், செந்நாய், ஓர் புள்.
'கொக்குநாளிற் கொக்குகட்டிய கொக்கின்மீதே கொக்குக் கஞ்சியே கொக்கொன் றமர்ந்தது'

**கொச்சை**
வெள்ளாடு, திருந்தாதபேச்சு.
'கொச்சை யூனுண்பான் கொச்சையாய் மொழிவானோ'

**கொடி**
படர்கொடி, துகிற்கொடி, காக்கை.
'கொடி யிடையாள்வாழ் கொடிமாடமிசை கொடியொன்று கரைந்தது'

**கொடும்பாவி**
மழையில்லாத காலத்தில்
வைக்கோற் புரியாற்
கட்டியிழுக்குமோருரு, அநீதன்.
'கொடும்பாவி யிழுப்பதற்கோர்
கொடும்பாவி வேண்டாமோ'

**கொம்பன்**
ஆண் யானை, ஒரு மீன்.
'கொம்பன் மீதேறுங் கோமகனுங்
கொம்பனை யுண்டே
களிகூர்ந்தான்'

**கொம்பு**
யானையின் தந்தம், ஊதிடுகொம்பு.
'களிற்றின்கொம் பொசித்தானுக்குக்
கொம்புகள் பலவு மியம்பினரே'

**கொள்ளை**
மிகுதி, பிறர்பொருளைக் கவர்கை.
'கொள்ளையாய கருமிப்பொருளுங்
கள்வராலே கொள்ளைபோமே'

**கோகுலம்**
இடையரூர், குரங்கு,
'கண்ணன்வளர்ந்தது கோகுலமே
காகுத்தன்தூதுவன் கோகுலமே'

**கோக்கள்**
அரசர், பசுக்கள்.
'முடியுடைக் கோக்கள் கோக்கள்
பலவும் கொடுத்தனரே'

**கோசலம்**
ஓர் தேசம், பசுமூத்திரம்.
'கோசலத்துக் கன்னியவள் குன்மந்
தீரக் கோசலம் குடித்தாள்'

**கோட்டம்**
சுடுகாடு, கோயில்.
'ஆறணிந்தோன் கோட்டத்தி
லரிச்சந்திரனார் கோட்டமுண்டு'

**கோணை**
அழிவின்மை, கொடுமை.
'கோணை கருதார் குடியென்றும்
கோணையுறாதே'

**கோதை**
பூமாலை, பெண், முன்கைத்
தோற்கட்டு, சேரன்.
'கோதையணி கோதையைக்
கோதைபிணி கோதையும்
பெற்றானே'

**கோயில்**
அரசன்மனை, தேவாலயம்.
'மன்னவன் தன்கோயில் நீங்கி
மாதவன் கோயில்புக்கான்'

**கோரம்**
குதிரை, சீக்கிரம், வட்டில்.
'கோரமிசை கோரமதாய்க்
கோரத்தைக் கவர்ந்துசென்றான்'

**கோவை**
கோத்தமாலை அல்லது அணிவடம், கொவ்வைக்கனி, ஓரூர், ஒரு பிரபந்தம். 'கோவையணிந்த கோவை வாயாள் கோவைக் கண்ணே கோவையைப் பாடுவாள்'

**கோழி**
ஓர் பறவை, உறையூர்.
'கோழிக் கொடியான் கோலத்தைக்
கோழியில் குளிரக் கண்டேனே'

**கோன்**
கடவுள், இடையன், மன்னன்.
'ஒன்று இரண்டு தொழிலுடையான்
கோனேயாவன், கன்று காலிதனைக்
காப்பான் கோனேயாவன்,
மன்னுயிரைப் புரப்பானும்
கோனே யாவன்'

**கௌசிகம்**
பட்டுச்சீலை, சாமவேதம், பாம்பு.
'கௌசிக முடீஇய குமரனைக்
கௌசிகங் கற்றோ னானையின்
கௌசிகஞ் சீறிக் கடித்ததே.'

**கௌவை**
கள், பழிச்சொல், துன்பம்.
'கௌவை பருகுவாள்
தன்கிளைக்குக் கௌவைபரவக்
கௌவை விளைப்பாள்'

**கௌவை**
எள்ளிளங்காய், ஒலி. 'முதிர் கௌவையைச் செக்கிவிட்டால் கௌவையோடு திலதமாகும்'

**சக்கிரி**
பாம்பு, திருமால், மன்னன், செக்கான், குயவன். 'சக்கிரிப் பாயல்கொள் சக்கிரிதன்னைத் தொழுதனன் மணிமுடிச் சக்கிரியே செக்கி லெண்ணெ யாட்டுவோன் சக்கிரியே சட்டியை வனைபவன் சக்கிரியே'

**சங்கரன்**
பல வருணக் கலப்பாய்ப் பிறந்தவன், சிவன்.
'சங்கரனாய்ச் செனித்தமகன்
சங்கரனையே தொழுகின்றான்'

**சடைச்சி**
சடையை யுடையவள், புளியாரை.
'நாவறட்சி தணிக்கவே
சடைச்சியுஞ் சடைச்சியைத்
தருவாளோ'

**சட்டி**
ஒரு மண்பாண்டம், தாமரை, ஆறாந்திதி. 'சட்டியை
வனைவோன் சக்கிரியே, சட்டியில்
வந்தவன் சதுமுகனே' சட்டியையே
யுகந்தான் சண்முகனே

**சண்டன்**
சூரியன், சிவன், பேடி, காலன்.
'சண்டன் பல்லைத் தகர்த்த
சண்டன் சண்டனுக்கோ சண்டனை
யுதைப்பன்'

**சத்திரம்**
அன்னசாலை, கைவிடாப்படை, வெண்குடை, யாகம். 'சத்திரத்தருகே
சத்திரக் கையன் சத்திரநிழலில்
சத்திர மியற்றினான்'

**சந்தி**
மாலைநேரம், பல தெருக்கூடுமிடம், மூங்கில், சந்தியென்னேவல்.
'சந்திப்போதில் சந்தியண்டை
சந்தியந் தோளாளைச் சந்தித்தேன்'

**சமைத்தல்**
உண்டாக்கல், உணவுசமைத்தல்.
'உலகஞ்சமைத்த விரிஞ்சிக்கு
உவப்புடன்பொங்கல்
சமைப்பதிலை'

**சம்பு**
நாவல், எலுமிச்சை, சிவன், ஓர் கோரைப்புல், நரி. 'சம்புத்தாரும்
சம்புக்கனியும் சம்புவுக்குக்
கொணர்கையிலே சம்பம்புதரில்
சம்பொன்றென்னைச் சடக்கென
வெதிர்த்ததே'

**சயம்**
சருக்கரை, ஆம்பல், வெற்றி.
'சயமொழியாள் கடுஞ்சமரில்
சயஞ்சூடிச் சயம்பெற்றாள்'

**சரசுவதி**
மனோசிலை, சரசுவதி யெனும் பெயருடையவள்.
'கலுவத்தரைத்தாள்
சரசுவதிதன்னைக் கலையறியாச்
சரசுவதியே'

**சரியை**
ஒழுக்கம், பிச்சை, சைவசாதனத்தொன்று.
'சரியை யுடையான் சரியை
யெடுத்தும் சரியை தன்னை
இயற்று வானே'

**சருவம்**
ஓர்வகைப் பாத்திரம், எல்லாம்.
'சருவம் சுரண்டவறிவானைச்
சருவமுணர்ந்தா னெனலாமோ'

**சர்க்கார்**
தாழ்வாரம், துரைத்தனத்தார்.
'செல்வன் வீட்டுச் சர்க்காரில்
சர்க்கார் பணியாள் காத்திருந்தான்'

**சாதம்**
சோறு, பூதம்.
'சாதம் வேண்டுமென்பானைத்
தழல்விழிச் சாதம்விழுங்காதோ'

**சாது**
தயிர், சற்குணத்தோன்,
'பசுஞ்சாது பருகின சாதுவும்
பிணிவாய்ப் பட்டான்'

**சாந்தம்**
சந்தனம், பொறுமை, சாணி.
'செஞ்சாந்தம்பூசுஞ் சாந்த
முடையாள் சாந்தங்கொண்டே
வீடு மெழுகினாள்'

**சாபம்**
சபிப்பு, வில்.
'முனிவன் சாபமொழிப்படியே
மூர்க்கன் சாபத்தால் மடிந்தான்'

**சாமி**
கடவுள், பொன்.
'சாமியை நினைப்பா ரெல்லோரும்
சாமியை மறப்பாரில்லையே'

**சாம்பல்**
நீறு, பழம்பூ, ஒடுங்கல்.
'சாம்பல்பூசிச் சாம்பல்சூடுஞ்
சண்டியைக்கண்டு சாம்பல்தீதே'

**சாரதி**
தேர்ப்பாகன், புலவன்.
'பார்த்தனுக்குச் சாரதியே
சாரதியாய்ப் போதித்தான்
கீதைதனை'

**சாலகம்**
சலதாரை, பலகணி, சிலந்திவலை.
'சாலகமீதுள சாலகத் திடையே
சித்திரச் சாலகம் சாலப்பிணித்ததே'

**சாவித்திரி**
சத்தியவானின் மனைவி,
பூணூலணியாதவன் (பிரமசாரி).
'சாவித்திரி விரதநோற்பவள்
தனயன்தான் சாவித்திரியே'

**சானகி**
சானகியென்ற பெயருடையாள்,
பொன்னாங்காணி.
'சானகியும் தட்பமுறச்
சானகியைச் சமைத்துண்டாள்'

**சான்றார்**
சாணாரெனுமொரு சாதியார்,
அறிஞர்.
'சான்றோராய்ப் பிறந்தாரெல்லாம்
சான்றோராவதும் சால்பாமோ'

**சிகண்டி**
ஆமணக்கு, மயில், அலி, ஓர் பண்.
'சிகண்டி மிதமர் சிகண்டிப்
புள்ளைச் சிகண்டி சிகண்டிபாடி
யோச்சுவானே'

**சிங்கி**
நஞ்சு, துட்டை. 'சிங்கிவைத்தே
சிவனைப் போக்குஞ் சிங்கியு
மிவளேயோ'

**சிதி**
கறுப்பு, வெண்மை.
'சிதிநிறத்துக் கண்டத்தான்
சிதிநீறணிந்து சிறந்தானே'

**சித்திரம்**
சித்திரித்த வடிவம், மெய்போற்
பொய்கூறல்.
'சித்திரம் தீட்டுவானிடையே
ஒருசீமான் சித்திரம்பேசினான்'

**சிரமம்**
சிலம்பம், வருத்தம்.
'சிரமங்கற்றான் சீவனுக்கே
தீராச்சிரமம் நேர்ந்ததே'

**சிலை**
ஒலி, வில், மலை.
'சிலையுடைச் சிலையால்
சிலையைத்துளைத்தான்
செஞ்சேவகனே'

**சிவப்பு**
செம்மைநிறம், சினக்குறிப்பு.
'சிவப்புநிறத்தான் தேரார்மீது
சிவப்புமிகக் கொள்வானோ'

**சிவம்**
முற்றத்துறத்தல், பாதரசம், உயர்வு.
'சிவமானோன் சிவத்தைக் கட்டிச்
சிவத்தையே பெற்றானே'

**சிவயோகி**
சிவனை வணங்கும் யோகி, வசம்பு.
'சிவயோகி யென்பவன்தான்
சிவயோகியைச் சுடுவதென்னோ'

**சிறை**
இறகு, சிறைச்சாலை.
'சிறையில்லாப் புட்போலும்
சிறைக்கண்ணே தவிக்கின்றான்'

**சினை**
கருப்பம், மரக்கொம்பு, முட்டை.
'மாதாவயிற்றுச் சினையோடு
மரத்தின் சினைக்கும்
புள்ளின்சினைக்கு முடிவுண்டு'

**சீதை**
சீராமன்பத்தினி, பொன்னாங்காணி.
'செழித்துவளர்ந்த சீதையைச்
சீதையுங்கானில் கண்ணுற்றாள்'

**சீரை**
சீலை, மரவுரி. 'ஆடகச்சீரை
யணிந்தராம னற்பொடுஞ்சீரைய
யணிந்தானே'

**சீவரம்**
துவருட்டின சீலை, காஞ்சிக்கருகேயுள
ஒரூர். 'சீவரம் போர்த்தஞானி
சீவரத் துறையலானார்'

**சீவனம்**
உயிர்வாழ்தல், நீர்.
'மக்கள்சீவனத்துக்கு மூலமாவது
மண்ணுறுசீவன மாகாதோ'

**சுகம்**
கிளி, இன்பம். 'சோலைவாய்
வாழுஞ் சிறுசுகமே சொல்லுவா
யிழந்தவென் பெருஞ்சுகமே'

**சுடலையோன்**
சிவபிரான், துரிசு.
'சுடலையோ னருளாலே
சுடலையைச் சுண்ணித்தான்'

**சுண்டி**
கள், சுக்கு. 'சுண்டியைப் பருகியே
சுண்டிபோ லுலர்தல் சூழ்மதி
யற்றார் செயல்தாமே'

**சுதை**
சுவை, வெண்மை, அமிழ்து, மகள்.
'சுதைசேர் சுதைவண்ணச்
சுதையையென்சுதையுமுண்டாளோ'

**சுந்தரன்**
மன்மதன், சுந்தரமூர்த்திநாயனார்.
'சுந்தரனும் வெட்காநின்ற
சுந்தரனுக்கே சங்கரனும் தூது
சென்றான்'

**சுந்தரி**
மூஞ்சூறு, அழகுள்ளவள்.
'சுந்தரியின் கடுநாற்றம்
சுந்தரியின் மெய்காட்டும்'

**சுரம்**
காய்ச்சல், பாலைநிலம், கள்.
'சுரநோய்கண்டான் சுரந்தன்னில்
தீஞ்சுரத்தையே தேடுகின்றான்'

**சுரிமுகம்**
நத்தை, சங்கு. 'வயலில்வாழ்
சுரிமுகமும் வாரிதியின்
சுரிமுகமு மொன்றே யாமோ'

**சுவர்க்கம்**
முலை, தேவலோகம்.
'செப்பிளஞ் சுவர்க்கத்தாளுடன்
சுந்தரன் சுவர்க்கஞ்சேர்ந்தான்'

**சூதம்**
மாமரம், வண்டு, சூது. 'சூதமலரின்
சூதத்தைச் சூதமிலானுக்கே
விடுத்தாள் சூழ்தூதாய்'

**சூதன்**
தேரோட்டுபவன், வஞ்சகன்.
'சூதன்மகனுக்கு விடளிக்கச்
சூதனாய்த்தே ரேறினான்
திருமாலே'

**சூத்திரன்**
முப்புரி நூலணிந்தோன், ஏவல்
செய்பவன். 'மார்பினூ லணிவான்
சூத்திரனே மறையவனுக்குக்
குழைப்போன் சூத்திரனே'

**சூரம்**
அச்சம், கடலை, வீரம்.
'சூரமில்லான் நற்சூரமுண்டு
நானிலம்புகழ் சூரமுற்றான்'

**சூரன்**
சூரியன், வீரன்(முருகன்),
சூரபன்மன், நாய்.
'சூரனையொத்த சூரன்தன்னால்
சூரன் மடியச் சூரன் குரைத்தது'

**சூலி**
துர்க்கை, கருப்பவதி, சிவன்.
'சூலியருளால் சூலியாகிச்
சூலியையேநிகர் செல்வனை
யீன்றாள்'

**சூளை**
சென்னையிலுள்ள ஒருபேட்டை,
வேசை, கல் முதலிய சுடுசூளை.
'சூளைவாழ் சூளையினெஞ்சம்
சுடுசூளையினுஞ் சாலக்கொடிதே'

**செந்தீவண்ணன்**
செவ்வாய், சிவன்.
'செந்தில்வாழுஞ் செந்தீவண்ணன்
தாதைதானும் செந்தீவண்ணன்'

**செய்யவள்**
இலட்சுமி, சிவந்தநிறத்தினள்.
'செய்யவளருளைச் சிறிதும்
பெறாளே தீயகுணத்துச்
செய்யவளே'

**செய்யவன்**
செவ்வாய், சிவப்பன்.
'செய்யவனருளைச்
சிறிதும்பெறானே தீயகுணத்துச்
செய்யவனே'

**செய்யாள்**
இலட்சுமி, செய்யமாட்டாள்.
'செய்யாள்கருணை பெற்றானே
தீய கருமம் செய்யானே'

**செய்யான்**
ஓர் பூரான், செய்யமாட்டான்.
'செய்யான்தீண்டாச் செல்வத்தம்பி
சேவகமுஞ் செய்யானே'

**செல்வன்**
மகன், செல்வமுடையவன்
'வறியன்பெற்ற செல்வனே
வாழ்நாள் தன்னில் செல்வ
னானான்'

**சென்னி**
சோழன், தலை.
'சென்னி தேரலன்சென்னியைக்
கொய்தான் சமர்க்களத்தே'

**சேக்கை**
மக்கட் படுக்கை, நண்டு.
'சேவகனுறங்கிய சேக்கைக்கண்
சேக்கையொன்று ஓடியதே'

**சேதாரம்**
பொன்னுரை தேய்மானம், தேமாமரம், கேடு. 'பொன்னைச் சேதாரப்
படுத்துவோன் தன்னால் பூந்துணாச்
சேதாரம் சேதார மாமோ'

**சேயான்**
முருகன், சிவப்பன், தூரத்தவன்.
'சேவற்கொடிச் சேயானுக்குத்
தீக்குணச்சேயான் சேயானே'

**சேரான்**
பகைவன், சேரான்கொட்டைமரம்,
சேரமாட்டான்.
'சேரானொருவன் சேரானடியில்
சோர்ந்துசோர்ந்துஞ் சேரானே'

**சேவகன்**
வீரன், பணிவிடைக்காரன்.
'செஞ்சேவகனார் நிலைமையு
ணரான் சிங்களத்தின் சேவகனே'

**சேற்கண்ணி**
சேல்மீன்போன்ற கண்ணுடையாள்,
அரிதாரம்.
'சேற்கண்ணி தன்முகத்தினிலே
சேற்கண்ணியைப் பூசுவளோ'

**சேனை**
மிகுதி, படை, கடைவீதி.
'சேனையாய சேனைதிரண்டு
சேனையூடே சென்றதாமே'

**சொல்**
நெல், புகழ், கள்,
சொல்லென்னேவல்.
'சொல்லறுப்பா னெடுஞ்சொல்லைச்
சொல்லருந்துவோன் சொல்லு
வனோ'

**சொறியன்**
தவளை, சொறியுள்ளவன்.
'துரவிலுறை சொறியன்போல்
தேகமுழுதுஞ் சொறியனே'

**சோங்கு**
மறதி, ஓர் மரக்கலம்.
'சோங்கில்லாச் சுரிகுழலாள்
துணைவனோடு சோங்கிவர்ந்தாள்'

**சோம்பேறி**
சுவர்ணபேதி, சோம்பலாயிருப்பவன்.
'சோம்பேறியின் தன்மையைச்
சோம்பேறியு மறிவானோ'

**சோரன்**
திருடன், ஆட்டுக்குட்டி.
'சோரனொருவன் பட்டியிலே
செந்நிறச் சோரனைக் கவர்ந்தானே'

**சோழியன்**
மண்வெட்டி, ஓர் வேளாளன்.
'சோழியன்கொண்டே பூமியைத்
தொடுகையில் சோழியன் குடுமி
சுழன்றதே'

**சோறு**
பரணிநட்சத்திரம், அன்னம்.
'சோற்றிலே பிறந்தசெல்வி
சோற்றுக்கே கையேந்திநின்றாள்'

**சௌரி**
கருடன், திருமால், கர்ணன்,
துர்க்கை, சனி, நமன்.
'சௌரிப்புள்ளேறிய சௌரியே
சௌரிக்குச் சமரில் காட்சி
தந்தான்' 'சௌரி யான்சாகையில்
சௌரிகா லொடித்துச்
சௌரியை உதைப்பானே.'

**சௌரியம்**
வீரம், களவு. 'சௌரியங்
குறையினும் சௌரியஞ்செய்யேன்
சாந்தனையுமே'

**தங்காள்**
தங்கை, தங்கமாட்டாள்.
'தங்காள் தவ்வைமாட்டுத்
தங்காளென்பது திண்ணமே'

**தங்கான்**
அரையென்னுமென்,
தங்கமாட்டான்.
'தங்கான்காசு என்பீரேல்
தாமதமின்றித் தங்கானே'

**தங்கை**
இளையாள், குவளைமலர்.
'தங்கைதன் கண்களைத்
தங்கையே யென்னலாம்'

**தச்சன்**
மரவேலைக்கம்மியன், சித்திரைநட்சத்திரம்.
'தச்சன்மகள் பிறந்தது தச்சனேயென்றார் சோதிடரே'

**தட்டான்**
கோஷ்டம், பொற்கொல்லன், கிழக்குரங்கு, ஓர் பூச்சி.
'தட்டானைத் தின்னுந் தட்டானருகே தட்டான்வரவுந் தட்டான் பறந்ததே'

**தட்டுவாணி**
வேசி, சிறுகுதிரை.
'தெருத்தொறும்சுற்றத் தட்டுவாணி தட்டுவாணிமீ தேறுவாளோ'

**தண்டம்**
வணக்கம், தண்டனை.
'தண்டமிட்ட தொண்டனுக்கே தண்டம்விதிக்கும் நீதிபரன்'

**தண்டன்**
குயவன், நமன்.
'தண்டன் வனைவது சட்டியேயாம் தண்டன் வீழ்த்துவது உடலேயாம்'

**தத்தை**
முன்பிறந்தாள், கிள்ளை.
'தத்தையாவாள் தத்தைபோல் பேசித் தன்னிலை யடைந்தாள் தரணியிலே'

**தமிழ்**
நீர்மை, இனிமை. 'கடவுளாந் தமிழுதே சிந்தைக்கோர் தமிழுதே?'

**தம்பலம்**
இந்திரகோபம், வெற்றிலைச்சாரம்.
'தம்பலத்தன்ன தாயாநற்றாசினன் தம்பலத்தைத் தின்பானோ'

**தராசு**
நிறைகோல், வெள்ளெருக்கு.
'நிறையறிவது தராசு, நிமலன்சூடுவது தராசே'

**தரிசனம்**
காட்சி, கண்ணாடி.
'தையல் தரிசனத்தைத் தன்கணவன் தரிசனத்தில் கண்டு மகிழ்வானே'

**தரித்திரி**
பூமி, வறியவள். 'தரித்திரிமீது தரித்திரியாகிச் சீவனை விட்டாள் துணைவே றில்லாள்'

**தருமக்கட்டை**
அநாதப்பிள்ளை, ஆவுறிஞ்சுதறி.
'தருமக்கட்டையைத் தேவிகாப்பாள், தருமக்கட்டையி லாவுராயும்'

**தருவாய்**
உற்றசமயம், கொடுப்பாய்.
'தருவாயில் தருவாயாகில் தருமனென் றுன்னைப் புகழ்வேனே'

**தலைசீவுதல்**
தலையின் மயிர்வகிர்தல், தலையை வெட்டுதல். 'தைலத்தாலே தலைசீவுவாள் தலைவன்தலை சீவுவானே'

**தலையில்லாச்சேவகன்**
தலையறுப்புண்ட வீரன், நண்டு.
'தலையில்லாச்சேவகன் முண்டம் தடுமாறிக் குதித்ததே தலையில்லாச்சேவகன் சேற்றுள் திடீரென நுழைந்ததே'

**தலைவிரிச்சான்**
தலைமயிர் முடியாதவன், சாரணைப்பூடு.
'தலைவிரிச்சான் தரைமீதுள்ள தலைவிரிச்சானைத் தேடினானே'

**தனம்**
பொன், முலை.
'கையில் தனத்தை நீட்டுவார்க்குக் கணிகை தனத்தைக் காட்டுவளே'

**தனு**
வில், உடல். 'தனுவால்தாக்கிய தழும்புதனைத் தன் தனுமீது காட்டினான் சாம்பவனே'

**தன்மராசன்**
உதிட்டிரன், பாலைமரம்.
'தன்மராசன் திரிந்தகானில் தன்மராசனைப் பச்செனக் கண்டேன்'

**தாங்கல்**
ஆதரித்தல், மனக்குறைவு, குளம்.
'தாங்கலில்லாத் தையலுமே தாங்க லெய்தித் தாங்கலுள் மூழ்கினாள்'

**தாசரி**
மலைப்பாம்பு, தாதன்.
'காட்டில் நகருந் தாசரிபோல்
நாட்டில் தாசரி புரள்கின்றான்'

**தாசி**
நாடகக்கணிகை, பரணிநாள்.
'திருவாரூர்த் தாசிமகள்
தாசிநாளில் பிறந்தாளே'

**தாசி**
தொண்டுசெய்பவள், மருதோன்றி.
'தாசிதன் குழலுள் தாசிப்பூச் சூடாள்'

**தாமோதரன்**
ஆமை, திருமால். 'அறிதுயிலமர்ந்தது
தாமோதரனே ஆய்ச்சியால்
கட்டுண்டான் தாமோதரனே'

**தாயைக்கொல்லி**
வாழை, மாபாவி.
'தாயைக்கொல்லியின்
திங்கனியைத் தாயைக்கொல்லி
தின்னாளோ'

**தாழை**
தென்னமரம், தாழைமரம்.
'தாழைக் கள்ளருந்தினாள்
தாழைப்பூச் சூடினாள்'

**தானம்**
யானைமதம், கொடை donation.
'தானக்களிற்றின் மீதேறித்
தானமளித்தான் தார்வேந்தன்'

**தானவன்**
அசுரன்(ராகுவெனுங்கோள்),
சந்திரன்.
'தானவனரவதாகித் தண்கதிர்த்
தானவனையே தீண்டலானான்'

**திகம்பரன்**
சிவன், நிருவாணமுடையவன்.
'திகம்பரனெனவே
சனியனென்னைத் திகம்பரனாயு
மாக்குவானோ'

**திரி**
மூன்று, விளக்குத்திரி.
'திரிசூலிக் கோயிலிலே
திரியிட்ட விளக்கெரியும்'

**திரிகை**
குலாலச்சக்கிரம், இடக்கைமேளம்.
'திரிகை சுழற்றுபவன்
திரிகையைக் கொட்டுவனோ'

**திருடன்**
விஷ்ணுகரந்தை, கள்வன்.
'தரைமீது படருந் திருடனைத்
திருடனுந் தேடியலைகின்றான்'
'திருடன்மருந்து செயவேண்டித்
திருடன்தனையே தேடுகின்றான்'

**திருடி**
கள்ளிமரம், திருட்டுக்
குணமுடையவள்.
'தீயகானின் திருடியின்கீழ்த்
திருடியொருத்தி சேயீன்றாள்'

**தீபம்**
தீவு, விளக்கு.
'இலங்கைத் தீபத்திலிரவெலா
மெரிவன ரத்தினத்தீபங்களே'

**தீயார்**
பொல்லார், வேடர்.
'மக்களைப் பழிப்பார் தீயாரே
மாக்களைக் கொல்வார் தீயாரே'

**தீவு**
தீவாந்தரம், இனிமை.
'ஈழத்தீவின் தாளியினிக்குந்
தீவியதென்றா ளிளங்கொடியே'

**துஞ்சல்**
உறங்கல், சாதல்.
'பஞ்சணைமீது துஞ்சுவோரும்
பாடைமீது துஞ்சுவரே'

**துட்டு**
நாணயம், தீமை.
'துட்டு கையில் மிஞ்சினால்
துட்டு பிறர்க்குத் தேடுவையோ'

**துப்பு**
சிவப்பு, பவளம், கறை, அறிவு.
'துப்புநிறத் துப்புதனைத்
துப்புப்பற்றுமோ துப்பிலானே'

**தும்பி**
ஓர் மீன், யானை, வண்டு, கரும்பு.
'தும்பிதின்னாத் தும்பியுமே
தும்பி பறக்குந் தும்பியைத்
திணிக்கும்'

**தும்பை**
போர்புரிவாரணியும் மாலை, ஓர்
மீன்.
'தேன்பிடித்த தும்பைத் தாரான்
திரைகடல் தும்பியைத்
தின்பானே'

**துருவல்**
தொளைத்தல், தேடிப்பார்த்தல்.
'மரத்தைத் துருவிய பகழியை
மக்கள் துருவியுங் காணாரே'

**துவரை**
ஓர் பயறு, துவாரகை (முத்திதரு
நகரேழனுளொன்று) 'துவரைவிளையுந்
துவரைப் பதியானைத்
தேடுமென் மனனே காண்'

**தூக்குதல்**
நிறுக்குதல், ஆராய்ச்சிசெய்தல்.
'நாயேனுடலின் நுண்மையைத்
தூக்குவோர் மதியின்
நுண்மையைத் தூக்குவாரோ'

**தூங்குதல்**
தொங்குதல், உறங்கல்.
'தூங்குந்தெங்கின் குலையதுவும்
தூங்குமேதிமேல் வீழ்ந்ததே'

**தூமை**
மகளிர்சூதகம், தூய்மை, வெண்மை.
'தூமையின்றித் தூமையானவள்
தூமைநிறத்துச் சேலையணிவாள்'

**தெருவிலழகி**
தெருவில் தன்னை அழகுபடுத்தி
நிற்பவள், குப்பைமேனி.
'தெருவிலழகி தெருவிலழகிதன்
பச்சைச்சாற்றைப் பிழிந்தாளே'

**தென்னவன்**
பாண்டியன், யமன். 'வேப்பந்
தொடையணி தென்னவனைத்
தென்னவன் சும்மா விடுவானோ'

**தேங்குதல்**
நிறைதல், குலைதல்.
'தேங்கு குழலரிவையும் தேங்காதே
யாழ் நரம்பைத் தெறித்தனளே'

**தேசிகன்**
வணிகன், தேசாந்தரி, குரு. 'வளையிடு
தேசிகனும் பூவலஞ்செய்
தேசிகனுமானோன் அளையுறு
மரவுநீறு மணிந்தான்தன்
தேசிகன்காண்'

**தேர்**
உரோகிணி நட்சத்திரம், இரதம்,
ஆராய் அல்லது தெளி.
'தேர்நாள்பிறந்த தேவடியாள்
தேரிலேறுவதைத் தேர்ந்தாயோ'

**தேன்குழல்**
வாசனைகமழுங் கூந்தல், ஓர்
பண்ணிகாரம்.
'தேன்குழலாள் தன்
துணைவனைக்கே தேன்குழலைத்
தந்தா ளில்லை'

**தொடுதல்**
தோண்டுதல், தீண்டல்.
'மண்தொட்ட ஒட்டன்தன்னை
மாறனும் பிரம்பால் தொட்டான்'

**தொடை**
மாலை, தொடை.
'தேன்பிடித்த மலர்த்தொடையும்
தொடைமீது தான்புரளும்'

**தொண்டி**
ஓரூர், துவாரம், கள்.
'தொண்டியூரான் தொண்டிக்
குடுவையில் தொண்டியைத்
தந்தனன்'

**தொந்தம்**
தொடர்பு, இரண்டு,
சலஞ்சாதித்தல். 'தன்னொடு
தொந்த முடையானொடு
தொந்தப் போரை
விளைவித்தான்'

**தொப்பி**
தலைக்குல்லா, நெல்லாற் சமைத்த
கள்.
'தொப்பிக்காரன் தொப்பைநிரம்பத்
தொப்பியைப் பருகினான்'

**தொழு**
பசுக்கொட்டில், தொழுமரம்.
'மாட்டுத் தொழுவுள்
ளொருமடையன் தொழுவி லேறி
மாண்டானே'

**தொள்ளை**
துளை, மரக்கலம்.
'தொள்ளையுடைய
தொள்ளையேறி னுயிர்க்குத்
தொல்லையாகாதோ'

**தோட்டி**
அழகு, யானைக்குடாரி, வாயில்,
சுத்தஞ்செய்பவன். 'தோட்டிசேர்
தோட்டியொன்றைத் தோட்டியருகே
தோட்டி கண்டான்'

**தோணி**
இரேவதி நட்சத்திரம், அம்பு, மதிலுறுப்பு, மரக்கலம்.
'தோணிநாளில் தோணி
யுடையான் தோணிக்கப்பால்
தோணியேறினான்'

**தோதகத்தி**
மரியாதையற்றவள், நூக்கமரம்,
'தோதகத்திபால் தோதகத்திப்
பேழையொன்றைக் கண்டேனே'

**தோய்தல்**
முழுகல், புணரல்.
'தெண்ணீர்த் துறையில்
தோய்ந்தானுந் தெரிவையின்
மாட்டுத் தோய்ந்தானே'

**தோற்றல்**
பிறத்தல், தோல்வி.
'மக்களாய்த்தோற்றல்
போரினிலே மானமற்றுத்
தோற்றற்காமோ'

**தோன்றல்**
பிறத்தல், ஆண்மகன்.
'சீர்த்தியுறத் தரணியில்
தோன்றல் தோன்றற் கழகாமே'

**தோன்றி**
செங்காந்தள், இரத்தம், காணப்பட்டு எனும் வினையெச்சம்.
'தோன்றிப்பூக்கள் தோன்றியெனவே
தோட்டத்தில் தோன்றினவே'

**நகுலம்**
குங்குமம், கீரி.
'நகுலம் விற்கும் நாய்கருமே
நகுலத்தை நன்கு வளர்க்கின்றார்'

**நகை**
சிரிப்பு, ஆபரணம்.
'அழகொழுகும் நகையுடையாள்
நகையதையே அணிவாளேன்'

**நக்கல்**
நாவாலெடுத்துண்ணல், சிரித்தல்.
'சாராயம் நக்குஞ் சுணங்கனைக்
கண்டே சூர்ப்பநகையும்
நக்கினளே'

**நடுவன்**
இயமன், மத்தியஸ்தன் arbitrator.
'நடுவன் வந்தழைக்குங்காலை
நடுவனாய் நிற்பானெவனேயோ'

**நட்டம்**
சேதம், கூத்து.
'நட்டத்தைத் தேட நடனசிங்காரி
நானிலத்தே நட்டம் புரிவாளோ'

**நட்டார்**
நிலைபெறச் செய்தார், சினேகிதர்.
'நச்சுவித்தை நனவில்நட்டார்
நாயேனுக்கும் நட்டாரே'

**நத்து**
பெண்களின் மூக்கணி, சங்கு, விரும்பென்னேவல்.
'நப்பின்னை நாசிநத்துக்கும்
நாரணன்தோள் நத்துக்கும்
நத்துமென் னெஞ்சே'

**நந்தி**
சிவன், நந்திதேவன், செக்கான்.
'நந்தியைத் தொழும் நந்தியெம்
வள்ளலை ஞானமில் நந்தி
யறிவானோ'

**நல்லன்**
கறுப்பன், நன்மையுடையவன்.
'வண்ணத்தினல்லன்
வாலறிவினும் நல்லனுயர் கம்பனே'

**நல்லார்**
பெண்கள், அறிஞர்.
'ஆயிழை நல்லாருள்ளும்
அருங்கலை நல்லாருண்டே'

**நறவு**
தேன், கள். 'பூவினறவு மாந்தியே
தெங்கினறவு மாந்துவார்'

**நாகம்**
புன்னைமரம், ஓர்பாம்பு, குரங்கு, யானை, தேவலோகம்.
'நாகமீதே நகருநாகத்தை
நாகமொன்று பிய்ச்சியெறிய
நாகமுறும் நாகநாடன்
கண்டுநடுக்கங் கொள்வானே'

**நாகரம்**
ஓர் பாஷை, சுக்கு.
'நாகரங் கற்கையில் நாப்படிய
நாகரந் தின்பான் நட்டுவனே'

**நாடான்**
சாணாருக்குரிய பட்டப்பெயர், விரும்பான்.
'நாகைவாழும் நாடானே
நாரியர்தம்மை நாடானே'

**நாட்டம்**
கண், வாள்.
'வனிதையினாட்ட மிரண்டுமே
வாணாளருக்கும் நாட்டமே'

**நாட்டினான்**
நாட்டையுடையவன்,
நிலைபெறச்செய்தான்.
'குடமலைநாட்டினான்
குடிகள்பால் கோதிலறத்தையே
நாட்டினான்'

**நாணயம்**
உண்மை, மதிப்புள்ள தொகை.
'வாக்கில்நாணய முடையானுக்குக்
கையில்நாணயம் காண்பரிதே'

**நாணல்**
நாணற்புல், நாணுதல்.
'நாணலறுக்கும் நுண்ணிடையே
நீயும்நாணல் நலமாமோ'

**நாண்**
கயிறு, வெட்கம்.
'மங்கலநாண் பூண்டமாது
நாண்நீங்கி நடக்கலானாள்'

**நாம்**
நாங்கள், அச்சம்.
'நாம்கொண்ட நங்கையர்க்கு
நாம்கொள்ளல் ஞாயந்தானோ

**நாயனார்**
நாயையொத்தவர்,
பெருமையிற்சிறந்த சிவனடியார்.
'நன்றியுடைய நாயனாரே
நச்சிநாம் தொழும் நாயனாரே'

**நாய்நாக்கி**
நாயின் நாக்கை யுடையவள்,
இலைக்கள்ளிப்பூடு.
'நாய்நாக்கி தன்நாதனைக்
கொல்ல நாய்நாக்கிதனைத்
தேடுவாளே'

**நாராயணம்**
அரசமரம், மீன்,
உபநிட தங்களிலொன்று.
'நாராயணத்தடியில் நாராயண
மயின்ற வொருபாராயணன்
நாராயணத் தரும்பொருளை
நவிலலுற்றான்'

**நாரி**
வாசனை, பெண், கள், பன்னாடை.
'நாரியங்குழல் நாரியும்
நாரிக்குவடிகட்ட நாரி நாடினாள்'

**நாரியங்கம்**
பெண்ணினுடல், தேன்றொடை.
'கண்ணுதல் பாதியும் நாரியங்கம்
கயிலையங்கிரியிலும் நாரியங்கம்'

**நார்**
அன்பு, கயிறு. 'நாரென்நாரால்
நாரணனடியிணையே நன்கு
பிணித்தேனே'

**நாவிதன்**
அம்பட்டன், கார்த்திகைநட்சத்திரம்.
'நாவிதன்கழித்த மயிரனையான்
செனித்தநாளும் நாவிதனே'

**நாறுதல்**
முளைத்தல், மணத்தல்.
'சேற்றில்நாறிய செங்கமலம்
சிறிதும் நாறாதெனல் பொய்யே'

**நாற்றம்**
கள், துர்க்கந்தம், வாசனை.
'நாற்றம்பருகினால் நாற்றமா
முடற்கண் நாற்றமது மணக்குமோ'

**நானம்**
கத்தூரி, கவரிமா, குளித்தல்.
'நானமுடைய நானத்துக்கு
நானமாட்டியே நங்கை வளர்க்கிறாள்'

**நிதம்பம்**
மலைப்பக்கம், பெண்குறி.
'நிதம்பங்கண்டான் நேரிழையின்
நிதம்பந்தன்னை நினையானோ'

**நிரப்பு**
தரித்திரம், நிரப்பென்னேவல்.
'நிரப்பால்நலிவேன் பண்டியை
நிரப்புவா ரில்லையே'

**நிருவாணம்**
இருக்குவேத உபநிடதங்களு
ளொன்று, உடையின்மை,
மோட்சம். 'நிருவாணங்கற்று
நிருவாணம் பெற்றால்
நிருவாணத்தை எய்தலாமோ'

**நிறுத்தல்**
நிறையறிதல், நிலைப்படுத்தல்.
'நிறுத்தற்காகா நேர்மையனை
நானிலத்தோர் நிறுத்துவரோ'

நீலம்
ஓரிரத்தினம், நீலநிறம், கருங்குவளை, பனைமரம். 'நீலக்கல் மாலையணி நீலநிறத்தாள் நீலஞ்சூடி நீலநிழல் நின்றாள்'

நீலன்
நீலியென்ற பைசாசத்தால் கொல்லப்பட்ட ஒரு வணிகன், சனி. 'நீலனுயிர்போக்க நீலியும் நீலனெனவே நேர்ந்தாளே'

நீள்சடை
(சிவனின் கபர்த்தமென்ற) நீண்டசடை, கொன்றை. 'நீள்சடை யுடையான் நீள்சடை யணிவான் நித்தமுமே'

நுண்மை
சொற்பநிறை, ஆழ்ந்த தன்மை. 'நாயேனுடலின் நுண்மையைத் தூக்குவோர் மதியின் நுண்மையைத் தூக்குவரோ'

நெடியோன்
மூக்கரட்டைப்பூடு, திருமால். 'நெடியோன் துவட்ட லுண்டதால் நெடியோ னருளால் குணமானான்'

நெடியோன்
திரிவிக்கிரமனான நாராயணன், துளசி. 'நெடியோன்தனக்கு நெடியோனையே சூட்டுவாளொரு நேரிழையே'

நெடுங்குரலன்
கனத்த தொனியுடையவன், கழுதை. 'நெடுங்குரலன் பாடினால் நெடுங்குரல னோடானோ'

நெடுந்துயில்
அயர்ந்த நித்திரை, சாவு. 'பாழும்பிணியா னெடுந்துயிலுற்றான் பரகதிக்கே நெடுந்துயி லுற்றான்'

நெடும்பிரயாணம்
நீண்ட யாத்திரை, சாவு. 'நீணிதிக்கே நெடும்பிரயாணமாகி நெடும்பிரயாண முற்றானே'

நெம்பு
விலாவெலும்பு, இருகூர் ஆணி. 'கிறிஸ்துவினெம்பில் கீழோரும் கூரியநெம்பை யறைந்தார்கள்'

நெய்
சித்திரைநட்சத்திரம், நறுநெய், புழுகு, நேயம், நிணம், இரத்தம். 'நெய்நாள் தொடுத்த நெடும்போர் தன்னில் நெய்வாள் கொண்டே நெய்யுறு குழலாள் நெய்யற்றோர் நெய்யாற் றீபமதேற்றுவாளே'

நெய்தல்
ஆம்பல், கடல்சார்ந்த இடம், ஆடை முதலிய நெய்தல், சாப்பறை. 'நெய்தல்பூக்கும் நெய்தற்பதிக்கண் நெய்தலறவே நெய்தலறைந்தனர்'

நேத்திரம்
கண், பட்டாடை. 'நேத்திரமிரண்டு மில்லாளே நேத்திரமொன்று பூண்டாளே'

நேயம்
நெய், அன்பு. 'நேயம்விற்கும் நாய்கன்மீது நாட்டார்நேயம் பூண்டார்கள்'

நோன்மை
தவம், வலிமை, பொறுமை. 'நோன்மையுளுற்று நோன்மை யுடையார் நோனார்மாட்டே நோன்மையடைவார்'

பச்சைக்கல்
வேகாத கல், மரகதம். 'பச்சைக்கல் வீடமைத்தான் பச்சைக்கல் முருகணிந்தான்'

பஞ்சம்
ஐந்து, கருப்புக்காலம். 'பிள்ளைகள்பஞ்ச முடையானுக் கென்றும் பஞ்ச முண்டாமே'

படி
பூமி, நிறையறி படி. 'படிமீதுளார்க்குப் படியளக்கும் பச்சைமேனிப் பெருமானே'

படி
வாசியென்னேவல், திருத்தமடை. 'கருவிலறிவிலான் படித்தாலு மென்றும் படியானாவானே'

பணம்
பாம்பின் படம், காசு. 'பணத்த பணத்தைப் பணமாக்கத் தேடுவா னொருபாதகனே'

**பணி**
ஆபரணம், கட்டளை, தொழில், மந்திர(மொழி), பாம்பு. 'பணிபூண்டாள் பணித்த பணியைச் செய்யானே பணியால்கட்டிய பணிபோலாவான்'

**பணை**
கிளை, அரசமரம், பறைப்பொது, பெருமை. 'பணைசேர் பணையின்கீழ் பணையை முழக்கினா னொரு பணையனே'

**பண்டம்**
பொன், பண்ணிகாரம். 'மாற்றுயர் பண்டமிக்குடையாள் மாவின் பண்டம் புசித்தறியாள்'

**பண்டாரம்**
சிவனடியான், மஞ்சட்பொடி. 'பண்டாரத்தை இழந்தாலும் பண்டாரத்தை மறக்கவில்லை'

**பண்டாரம்**
மடாதீனத்தான், பலபண்டம். 'பண்டாரத்தை மருவினாள் பண்டாரத்தை நிரப்பினாள்'

**பதார்த்தம்**
கறிகள், பதப்பொருள். 'பதார்த்தமு முண்டறியாள் பதார்த்தமும் சொலவறியாள்'

**பத்தன்**
தட்டார்க்கான பட்டப்பெயர், தேவதொண்டன். 'பொன்பணிசெய் பத்தனும் புலியூரனுக்கே மெய்ப்பத்தனோ'

**பத்தியக்காரி**
பத்தியங்காப்பவள், சிறுகீரை. 'பத்தியக்காரி புளிப்பிட்ட பத்தியக்காரிதனைப் புசிப்பாள்'

**பத்து**
ஓரெண், தேவபக்தி. 'பத்துத்தலையன் பருவதமடியில் பத்துடையனாய்ப் பாடல் பாடினான்'

**பம்பரம்**
மந்தரகிரி, ஓர் விளையாட்டுக்கருவி. 'மத்தாயமைத்த பம்பரமும் பம்பரமாய்ப் பரவையுள் மறுகியதே'

**பம்பை**
பம்பாநதி, ஓர் வாச்சியம். 'பம்பைக்கரையில் பரதர்குழு பம்பைமுழங்கப் படர்ந்தனரே'

**பயந்தாள்**
பெற்றெடுத்தாள், அச்சமுற்றாள். 'பிள்ளைகள் பலரைப்பயந்தாள் பேணுவதறியாதே பயந்தாள்'

**பயம்**
குளம், பால், நீர், அச்சம், பலன். 'பயத்துள் தீம்பயம் பயவாது பசுமடியில் தண்பயம் சுரவாதே பயத்தால் ப[illegible]கவரைப் பணிவோரே என்ன பயத்தைப் பெறுவாரே'

**பயறு**
ஓர் தானியம், சித்திரைநாள். 'பச்சைப்பயற்றைப் பங்குனிப்பயற்றி லறுப்பானொரு பார்ப்பானே'

**பரத்தை**
வேசி, ஒரு பூஞ்செடி. 'பரத்தைதன் கொண்டையிலே பரத்தைப்பூ வணியமாட்டாள்'

**பரிவு**
இன்பம், துன்பம். 'அன்று பரிவொடு வளர்த்தாள்தலைமீ தின்று பரிவொடு அரிசியிட்டேன்'

**பலகாரம்**
யானைமேற்றவிசு, தின்பண்ட முதலியன. 'பட்டுப் பலகாரத்தின்மேல் பாகன்பலகாரம் தின்றான்'

**பல்லி**
கனுவிலரும்பும் வேர், கௌளி. 'பலவின் பல்லிக்கண்ணே பால்நிறப் பல்லியைப் பார்த்தேனே'

**பவானி**
கோயம்பத்தூருக்கருகில் ஓரூர், பார்வதி. 'பவானிக்குக் குடபாலில் பவானியின் கோயில் பொலிவுறுமே'

**பழம்பொருள்**
பழைய பொருள், கடவுள். 'பழம்பொரு ளுடையோ ரெல்லோரும் பழம்பொருள் தன்னைக் காண்பாரோ'

**பழையர்**
தொல்லோர், கள்விற்போர். 'மருகன்வந்த பழையர்க்கு மாங்குடிப்பழையர் நண்பரே'

பள்ளிப்பிள்ளை
பாடசாலையில் கற்கும்பிள்ளை,
பள்ளிச்சாதியான் பெற்ற பிள்ளை.
'படிக்கும் பள்ளிப்பிள்ளைகளுள்
பள்ளிப்பிள்ளை முதலானான்'

பறந்தலை
போர்க்களம், சுடுகாடு.
'பறந்தலையில் புறந்தரவோ
பறந்தலையில் நீறானான்
பாவியேன் மகனே'

பறப்பன்
அவசரக்காரன், தேள்.
'பறப்பனெட்டிப் பார்க்கையிலே
பறப்பன்படக்கெனக் கொட்டியதே'

பறி
பொன், மீன்களை
வாரியெடுப்பதாகிய கூடை.
'செம்பறித் துண்டு செம்படவன்
பறியுள் கண்டாள் பார்ப்பனியே'

பனையேறி
ஒரு குருநோய், ஒரு பாம்பு.
'பனையேறி நோய்கண்டோன்
பனையேறி தொடமாண்டான்'

பன்றி
ஒரு கொடுந்தமிழ்நாடு, ஒரு மிருகன்.
'பன்றியில் பன்றியை மேய்ப்பான்
படியாப்பிள்ளை ஒருவன்தானே'

பாகம்
பாதி, பிச்சை.
'பெண்ணொருபாகன்
பதிகடோறும் பாகமதேற்கத்
திரிந்தானே'

பாசம்
ஆணவமலம், நமனெறியுமாயுதம்.
'பாச நீத்தோனை மீட்கவே
பசுபதி யுதைத்தான்
பாசமெறிந்தோனை'

பாசன்
நமன், சீவன்.
'பாசன்வந்தும் பாசனுக்குப்
பாசமதுவு மகலாதோ'

பாசி
கரியமணி, நீர்ப்பாசி, நமன், நாய்.
'பாசிக்கழுத்தினள் பாசிநீர்
தோய்கையில் பாசியும்
பாசியாய்க் கவ்வினானே'

பாடம்
இடையர்வீதி, படிப்பு.
'பாடத்தில்வதியு
முல்லையர்சிறார்
தமிழ்ப்பாடமது படித்தாரே'

பாண்டம்
மட்கலம், உடம்பு.
'பாண்ட முடைந்தால் குப்பைக்காம்
பாண்டங்கெட்டா லெதற்காகும்'

பாண்டில்
வாகை, நாடு, கட்டில், எருது,
வண்டி, கைத்தாளம்.
'பாண்டில்சூடிப்
பாண்டில்வென்றான்
பாண்டிலின்கண் ணுறங்குகையில்
பாண்டில்பூட்டிய பாண்டிலிலே
பாண்டிலையும் கொட்டினார்கள்'

பாதம்
கால், நாலி லொருபாகம்.
'பாதத்தே பணிந்தாலும் படுபாவி
நாட்டி லொருபாதம் நல்கானே'

பாதை
வழி, மரக்கலம்.
'வண்டியோடும் பாதையிலே
வேலையின்பாதை ஓடுமோ'

பாத்தியம்
சம்பந்தம், காலலம்பக் கொடுக்கும்நீர்.
'பாத்தியமல்லாதார்க்கும்
பாத்தியம்நல்குவாள்
பம்பரத்திமகளே'

பாத்திரம்
புரட்டாசிமாதம், உண்கலம்.
'பாத்திரமதியிலும்
பரமனையுன்னியே பாத்திரத்தி
லுண்பேனே'

பாம்புக்கண்ணி
பாம்புபோல் கடுமையாகப்
பார்ப்பவள், சங்கங்குப்பிப்பூடு.
'பாம்புக்கண்ணி
பாம்புக்கண்ணியைப்
பறித்துத்தந்தாள் பரிவுடனே'

பாரதி
சரஸ்வதி, மரக்கலம்.
'பார்புகழ் பாரதி ஞானப்பாரதி
மீதே திகழ்கின்றாள்'

**பாரிடம்**
பூதம், பூதலம். 'பாரிடத்தொடு
பாரிடத்தே பரியூர்ந்துவந்தான்
பனிச்சடையோன்'

**பாரியாள்**
பருத்தவன், மனைவி.
'பாரியாளுக்குப் பாரியாளே
புல்லில்தடுக்கி வீழ்வாளே'

**பாவியேன்**
பாவியாகிய யான், பாவனைசெய்யேன்.
'பாவியேனொருகணமும்
பரமனார்திருவுருவைப்
பாவியேனே'

**பாளிதம்**
பட்டுச்சீலை, பாற்சோறு.
'பாளிதமணிந்தாள்
தன்பாலனுக்குத் தீம்பாளித
மூட்டினாளே'

**பிச்சி**
பெண்பேயின் குணமுடையாள்,
சிறுசண்பகம்.
'பிச்சிதன் குழலில்பெய்த
பிச்சியைப் பிய்த்தெறிந்தாள்'

**பிணம்**
பிசாசம், சவம்.
'பணம்பறிப்பான் பிணநெஞ்சு
பிணமாகி லென்செய்யும்'

**பிணி**
துன்பம், கட்டு, நோய்.
'பிணியுடை மனத்தினனைப்
பிணியாம்பிணியு மென்செய்யுமே'

**பிதா**
தந்தை, பெருநாரை.
'செவ்வேள் பிதாவே செங்கால்
பிதாவுக்கு முத்தி தந்தான்'

**பித்தன்**
சிவன், ஞானப்பைத்திய
முடையவன்.
'மத்தமு மதியுஞ்சூடிய பித்தன்
மகிழுறு பெரும்பித்தன் யானே'

**பிரமதண்டு**
பிரமஞானிக்குரிய கோல், ஓர் பூடு.
'பிரமதண்டேந்தினான்
பரமயோகி பிரமதண்டுண்பான்
நோயாளி'

**பிருகு**
இளங்கிழங்கு, பிருங்கிரிஷி,
சிவன்.
'பிருகுமுண்ணாப் பிருகுவே
பிருகுவின்மார்பிடை
வண்டானான்'

**பிரேதம்**
பிணம், பிசாசம்.
'ஈயானின் பிரேதமே ஈமத்தின்
பிரேதமே'

**பிழைத்தல்**
பிழைசெய்தல், சீவனம்பண்ணல்.
'அறந்தனைப் பிழைத்தானுக்கு
அறுதியில் பிழைத்தலுண்டோ'

**பிள்ளை**
மகன், தென்னங்கன்று.
'பாபுபிள்ளை பெற்றபிள்ளை
தென்னம்பிள்ளை தேடுவானே'

**பின்னை**
தங்கை, பிறகு, இலட்சுமி.
'எனக்குப்பின்னையும் பின்னை
பின்னையருளுற்றே பேருற்றாள்'

**புகார்**
காவிரிப்பூம்பட்டினம்,
உட்செல்லார். 'புகாரம்பதிக்கே
மீண்டும்புகாரே
பொன்னுலகடைந்த புண்ணியரே'

**புண்டரீகம்**
வண்டு, தாமரை, புலி.
'புண்டரீகம்வாழ்
புண்டரீகத்தைப்
புண்டரீகக்கொடியா
னறுத்தானே'

**புண்ணியை**
புண்ணியவதி, துளசி.
'புண்ணியனைநினைந்தே
புண்ணியையும் புண்ணியை
நட்டாளே'

**புதர்**
தேவர், தூறு, புலவர்.
'பொன்னுலகப்புதர் புதருள்
நுழையும் புதரைக் கண்டார்'

**புதியர்**
விருந்தினர், புதியவர்.
'போனகம் புசிக்கவந்த
புதியர்க்கும் புதியரானார்'

புருவம்
குதிரை, கண்புருவம்.
'பிடரிசேர் புருவத்தின்
புருவத்துக்கோ இல்லையயிரே'

புரையோர்
மேலோர், திருடர்.
'கல்வியுடைய புரையோர்
பொருளைக்கல்வியில்லாப்
புரையோர் கௌவினார்'

புலவன்
கம்மியன், கவிவாணன்.
'புலவன்புதுக்கியபேழையதைப்
புலவன்கண்டு வியந்தானே'

புலி
வேங்கைமரம், வியாக்கிரம் tiger.
'புலியை வெட்டும் பொழுதினிலே
புலியொன் றென்னை எதிர்த்ததே'

புலைச்சி
பறைச்சி, பவட்டாரம். 'புலைச்சி
தொட்ட புலைச்சிதன்னைப்
பார்ப்பான் பெற்றான் பிணிதீர'

புல்
புல்லு, பனைமரம்.
'புல்லின்கட்டு வித்தோனே
புல்லின்மதுவைப் பருகுவனே'

புறவு
குறிஞ்சிநிலம், முல்லைநிலம்.
'புறவின்தேனுக்குப் புறவி
னான்பால்மாறும் வேங்கடமே'

புற்று
கன்னப்புற்று முதலிய ரோகம்,
வன்மீகம். 'புற்றுநோய் கண்டான்
புற்றுமண் ணப்பினான்'

பூ
மகளிர்சூதகம், மலர்.
'பூவுற்றமங்கை தன்குழலுள்
பூவதனைப் பெய்வாளோ'

பூசை
ஆராதனை, பூனை.
'பூசையறையுள் பூசையை
யொத்துப் பகவின் பாலைப்
பருகுவானே'

பூட்கை
யானை, சிங்கம்.
'மதம்பெய் பூட்கைமானவே
செங்கட்பூட்கை பொருதே'

பூதம்
பரணிநாள், உடம்பு, உயிர்,
ஐம்பூதம், பேய்.
'பூதத்திற் பூதம்விட்ட பூதம்
பூதமற்றுப் பூதமானதே'

பூதி
விபூதி, கொடுமை, செல்வம்,
புழுதி. 'பூதியணி பூதியனுக்குப்
பூதியனைத்தும் பூதியாச்சு'

பூந்தி
பூவந்திமரம் (பொன்னாங்காய்
மரம்), ஓரின்சுவைப் பண்டம்.
'பூந்தியடியில் பூந்திதின்றாள்
பூஞ்சற்கண்ணி யொருத்தியே'

பூருவம்
ஆதி, கிழக்கு.
'பூருவம்தொட்டே பகலவன்
புறப்படல் பூருவதிக்கேயாம்'

பூரை
நிறைவு, இன்மை.
'பூரையாய தண்கதிர்மதியம்
பூரையாய்வானி லிருண்டதுவே'

பூனைக்கண்ணன்
பூனையின் கண்ணையுடையவன்,
புருடராகமணி.
'பூனைக்கண்ணன் தன்முகத்தைப்
பூனைக்கண்தோட்டில்
பார்த்தானே'

பெண்ணை
ஓராறு, பனைமரம், மங்கை.
'பெண்ணையருகே பெண்ணையின்
கீழ்ப் பேரிளம் பெண்ணைக்
கண்டேனே'

பெயரன்
பாட்டன், பேரன்.
'பெயரனொருவன் பிறிதொருவன்
பெயரனாவது மியல்பேயாம்'

பேதை
அறிவிலான், கள், பெண், தரித்திரி.
'பேதை பேதையைப் பருகவே
பேதையும் பேதையானாளே'

பொங்கல்
சங்கிராந்தி, உயர்ச்சி, சமைத்த
சாதம். 'பொங்கலன்று
பொங்கலுடையான்
பாலின்பொங்க லருந்துவானே'

**பொட்டு**
தாலிப்பொட்டு, திலகம், தானியப்பொட்டு.
'பொட்டுக்களனுடைப் பொட்டணி நுதலாள் பொட்டுதனையே நன்கு புடைப்பாளோ'

**பொதி**
மூட்டை, பருமன், அம்பலம்.
'பொதிசுமக்கும் பொதிமாடு பொதிக்கண்ணே உறங்கியதே'

**பொத்தை**
பருமை, துவாரம்.
'பொத்தைய னுடம்பிலொன்பான் பொத்தையுமல்லா னாவானோ'

**பொருதல்**
ஒப்புதல், போர்செய்தல்.
'பேயைப்பொருதும் பெண்ணோடு பொருதான் பாவிப்பேடியே'

**பொருமல்**
வீங்கல், அழுதல்.
'உடல்பொருமவும் உற்றார் பொருமுவர் உலகின்கண்ணே'

**பொருவாய்**
ஓர் மீன், சண்டையிடுவாய்.
'பொருவாய் பொரித்துத் தருவாளோடும் பொருவாயோ இனிப் பேய்மகனே'

**பொருள்**
பொன், சொல்லின்பொருள்.
'பொருளிலான் சொற்பொருளைச் சொற்பயனு ணரா ருணர்வாரோ'

**பொல்லர்**
தையற்காரர், சக்கிலியர்.
'சட்டை தைப்பார் பொல்லரே செருப்பு தைப்பார் பொல்லரே'

**பொன்னன்**
இலட்சுமிபதி, பொன்னுடையவன், வியாழன்.
'பொன்னனருளுற்ற பொன்னனுக்குப் பொன்னனுச்சமானானே'

**போகம்**
பாம்பினுடல், செல்வம்.
'வளைவுறுபோகத்தி னழகேயாம் வழங்காதான்கண்ட போகமே'

**போதகம்**
யானைக்கன்று, சிங்கக்குட்டி.
'பைங்கட்போதகமுன் செங்கட்போதகம்போ லிருவரும் செல்லலானார்'

**போது**
மலர், காலம். 'போதுகொண்டுநின் பொன்னடியைப் புனைகுவேன் முப்போதுமே'

**போர்**
சதயநட்சத்திரம், நெற்போர், சமர்.
'போர்நாளில் போரடுக்கப் போர்வல்லான் போர்க்கெழுந்தான்'

**மக்கள்**
மனிதர், பிள்ளைகள். 'மண்டல மக்களை வெறுத்தோரும் தம்முடை மக்களை மறப்பாரோ'

**மங்கலன்**
நாவிதன், செவ்வாய்.
'மங்கலன்பெற்ற மகவுக்கு மங்கலன்மேடத்தே நின்றான்'

**மங்கலி**
கட்டுக்கழுத்தி, இலட்சுமி, பார்வதி.
'கற்போடு கணவனுடன் வாழ்பவளே மங்கலையாம் பொற்புடைய பங்கயத்தில் பொலிவுற்றாள் மங்கலையே வெற்பரையன் தவத்தாலே வந்துதித்தோள் மங்கலையே'

**மங்கை**
பதின்மூன்று வயதுப்பெண், கற்றாழை. 'மங்கையி னக்குள் மங்கையி னாற்றம்வீசியதே'

**மசிர்**
மயிர், அருகம்புல்.
'நாவிதன் சிரைப்பது மசிரேயாம் நால்வாயன் சூடுவது மசிரேயாம்'

**மச்சம்**
மீன், மறு mole, மாற்றறிய வெட்டும்பொன்.
'மச்சம்விற்கு மச்சக்கண்ணாள் மச்சத்தைப் பறிகொள்வாளோ'

**மடங்கல்**
இடி, சிங்கம், முடங்குதல்.
'மடங்கலென முழங்குமடங்கல் மடங்கல்கண்டு மருண்டேனே'

**மடையன்**
பாகஞ்செய்பவன் a cook, அறிவிலான். 'மடையன் வேலைக்கு மடையன் பயனுறான்'

**மட்டி**
மதிகேடன், பரும்படி thickness. 'மட்டிமகள் மட்டியென்றே தயிரைத் தரையில் கவிழ்த்தானே'

**மட்டு**
அளவு, கள். 'மட்டுக்கு மிஞ்சியே மட்டுவைப்பருகி மதிகெட் டலைதல் மக்களியல்போ'

**மணங்கு**
ஓர் நிறை, ஆட்டுக்குட்டி. 'மணங்கு வெல்லத்துக்கிடாக மாசில் மணங்கைக் கொண்டானே'

**மணத்தல்**
கலியாணம்பண்ணுதல், கமழ்தல். 'பெண்ணை மணத்தலால் பாவியேன்நெஞ்ச மணத்தவில்லையே'

**மணி**
முத்து, இரத்தினம். 'பணில முயிர்த்தது பால்மணியே பைந்நாகந் தரிப்பதும் நன்மணியே'

**மண்டலி**
பூனை, நாய். 'இல்லப் புலியது மண்டலியே ஈடிலா நன்றியுடையது மண்டலியே'

**மண்டை**
தலையோடு, இரப்போர்கலம். 'பிண்டியார் மண்டையையே மண்டையாய்க் கொண்டிரந்தான்'

**மண்ணுடையான்**
அரசன், குயவன். 'மண்ணுடையான் மக்களைக் காப்பான் மண்ணுடையான் பானை வனைவான்'

**மண்ணை**
இளமை, அறிவிலான், பிசாசு. 'மண்ணைப்பிராயத்தே மண்ணையை மண்ணை மருட்டியதே'

**மதம்**
வெறி, சமயம். 'பெண்மதங்கொண்ட பிறமதமாறினான் பேயினுங் கடையனாவானே'

**மதனம்**
மௌனம், காமம், கடைதல். 'மதனநிலையொடு மதனவெள்ளம் மதனம்புரிந்தான் மன்மதனே'

**மதி**
மாதம், சந்திரன், அறிவு. 'மீனமதியின் பின்மதியில் மதியற்றான் பிறந்தானே'

**மதுரம்**
இனிப்பு, செஞ்சந்தனம். 'மதுரமொழியாள் தன்மார்பில் மதுரத்தை மிகப் பூசுவளே'

**மதுரை**
ஓர் நகர், கள். 'மதுரையில் மரகதவல்லி மொந்தைமதுரையைப் பருகினாளே'

**மத்தன்**
ஊமத்தை, பித்தன், களிப்புடையவன். 'மதிசூடியமத்தன் மதிமிக்க மத்தனாயென் மதிகவர் மத்தனானான்'

**மத்தியம்**
நடு, கள். 'எல்லோர் மத்தியத்து ளோரேனவாயன் ஏற்ற மத்தியம் பருகினானே'

**மந்தன்**
அவிவேகி, சனி. 'கல்வியில்லா மந்தனுக்குக் காகமுருமந்தன் புத்தியாமே'

**மயிலை**
மீன், இருவாட்சி, மயிலாப்பூர். 'மயிலையை விற்பாள் மயிலைப்பூ வாங்க மயிலைக்குச் சென்றனளோ'

**மரு**
குற்றம், வாசனை, ஒரு வாசனைப்பூ. 'மருவில்லா மனத்தினளும் மருவீசு மருமுடித்தாள்'

**மருத்துவன்**
இந்திரன், வைத்தியன்.
'மருத்துவ னுடலின் புண்
மாற்றற்கோ
மருத்துவனுண்டேயோ'

**மருப்பு**
இஞ்சி, யானைக்கொம்பு.
'மருப்பின்சாறு மருந்துக்காம்
மருப்புத்தாலி பூணற்காம்'

**மருமான்**
மருமகன், மகன்.
'புரந்தரனுக்கு மருமானே
பொன்னம்பலவனின் மருமானே'

**மருவு**
வாசனை, ஒரு வாசனைப்பூண்டு, கலியாணத்திற்கிடும் விருந்து.
'மருவுடை மருவதனை
மருவுக்கணிந்தாள் மணமகளே'

**மருள்**
உன்மத்தம், பிசாசம்.
'மருள்கொண்ட மனத்தானை
மருள்பிடித் தாட்டியதே'

**மல்லிகை**
விளக்குத்தண்டு, ஓர் பாத்திரம், ஒரு பூச்செடி.
'மல்லிகை யெரிந்து மல்லிகை
சிதையவே மல்லிகைசூட
மறந்தாளே'

**மழுவாளி**
சிவன், பரசிராமன்.
'மழுவாளி சிலையிறுத்தானொடு
மலைந்தான் மழுவாளி'

**மறலி**
மயக்கம், இயமன்.
'மறலிவருகாலை
மறலியுண்டாதல் மன்னுயிர்க்
கியல்பேயாம்'

**மன்றல்**
விவாகம், வாசனை.
'மன்றல்புரிந்த மங்கைமேனி
மன்றல் மணக்குமே'

**மன்னவன்**
அரசன், உத்திரட்டாதிநட்சத்திரம்.
'மன்னவன் தோன்றியது
மன்னவன் நாளேயாம்'

**மாடம்**
உப்பரிகை, உழுந்து.
'மாடத்தின்மீதே மாடவடையை
மகிழ்வொடு தின்றாள் மாமியே'

**மாடு**
மாட்டின்பொது, பொன்.
'மாடுகறந்த பால் பருகற்காம்
மாற்றுயர் மாடு பணிக்காகும்'

**மாடுதின்னி**
மாட்டை மருட்டுவதற்கு வைக்கோற்புரியால் செய்த போலிமாடு, மாட்டைத் தின்னும் புலையன்.
'பைம்புனத்து மாடுதின்னிக்கு
மாடுதின்னி மருள்வானோ'

**மாண்டார்**
பெரியோர், இறந்தோர்.
'கல்வியில் மாண்டாரல்லாக்
கசடரே மாண்டாராவர்'

**மாதர்**
அழகு, பெண்கள்.
'மாதர்மிக்க மாதர்களும்
மதியில்மிக்குப் பொலிவுற்றார்'

**மாதவம்**
பெருந்தவம், வசந்தகாலம், கள்.
'மாதவம் புரிவோர்
மாதவமதியில் மாதவம் பருகுதல்
மகிழ்ச்சிக்கலவோ'

**மாதுபாகம்**
பெண்ணினுடல், புட்பராகம்.
'மாதுபாக முடையானும்
மாதுபாகத் தணிவேண்டான்'

**மாயம்**
வஞ்சம், பொய், தீமை, கறுப்பு.
'மாயங்கருதி மாயம்பேசி
மாயம்புரிந்தான் மாயநிறத்தான்'

**மாயாபுரி**
அரித்துவாரம், பித்தளை, மாயாசரீரம். 'மாயாபுரியில்
மாயாபுரிக் கோட்டையுள்
மாயாபுரியனாய் வாழ்வானோ'

**மார்க்கம்**
ஒழுக்கம், நெடுந்தெரு.
'மார்க்கங் கெட்ட மறையவனும்
மார்க்கத்தில் செல்ல
நாணுவனோ'

**மார்க்கம்**
மார்கழி, நெடுந்தெரு.
'மார்க்கமதியில் மார்க்கமெலாம்
மாக்கோலம் காணலாமே'

**மாலயம்**
புரட்டாசியில் செய்யும்
பொதுச்சிரார்த்தம், சந்தனம்.
'மாலயதினத்தன்று மார்பினில்
மாலயம் பூசினானே'

**மாறன்**
சடகோபாழ்வார், பாண்டியன்.
'குருகூர்மாற னடிப்போதைக்
கூடல்மாறன் மறவானே'

**மாற்றம்**
வேற்றுமை, சொல். 'மனமாற்ற
மில்லானுக்கு வாய்மாற்றம்
வேறாகுமோ'

**மானவர்**
மனிதர், மானமுடையவர். 'மானவ
ரனைவருள்ளும் மானவர்
சிலரேயாவர்'

**மானார்**
பகைவர், பெண்கள்.
'ஆயிரமானா ருயிர்பருக
ஆயிழைமானார் சமர்புரிந்தார்'

**மான்**
மகரமீன், ஓர் மிருகம்.
'இணைமானாழி யணிந்தானென்
னிளமென்மானை யெய்திலனே'

**மான்மகன்**
பிரமன், மன்மதன். 'மான்மகன்
பிறந்தது முண்டகமலரே
மான்மகனை யெரித்தோன்
மழுவேந்தியே'

**மித்திரன்**
சினேகிதன், சூரியன். 'எமதாருயிர்
மித்திரனுக் கேழினிலேமித்திரனு
முச்சமானான்'

**மிருத்து**
மரணம், மண்.
'மிருத்துவடையு மக்கள்மெய்
மிருத்துவுக்கே இரையாகும்'

**மிலேச்சன்**
சோனகன், மிலேச்சதேசத்தான்,
அறிவீனன். 'தென்திசை மிலேச்சனை
மிலேச்சனு மிலேச்ச னென்றிகழ்
வானோ'

**மினுக்கி**
மின்மினிப்பூச்சி, பகட்டு காட்டுபவள்.
'மினுக்கியெனவே மினுக்கிக்கு
மேனியது மின்னாதோ'

**மீன்கள்**
நட்சத்திரங்கள், மச்சங்கள்.
'வான்மீன்களைக் கண்டதுமே
வாவியின்மீன்கள்
வெருண்டனவே'

**முக்கண்ணி**
பார்வதி, தேங்காய்.
'பித்தனுடலில் பாதியானாள்
முக்கண்ணி பிடையகல
வுடைப்பது முக்கண்ணியே'

**முசலி**
பல்லி, உடும்பு, முதலை.
'நிமித்தமுரைப்பது முசலியே
நாவிரண்டுடையது முசலியே
நிமித்தமாய் நாதனாழி யரிந்தது
முசலியே'

**முடங்கல்**
மடங்கியுள்ளது, ஓலைச்சீட்டு.
'முடங்கலில்லா முடங்கலிலே
மணச்செய்தி தன்னைப்
பொறித்தானே'

**முடவன்**
சனி, நொண்டி.
'காகமேறு முடவன்திசையில்
கண்ணில்லானு முடவனானான்'

**முடிதல்**
முடிச்சுமுடிதல், சாதல்.
'பணமுடித லுடையான்
முடிதலுமே பந்துக்கள் சூழ்ந்து
புலம்புவரே'

**முட்டி**
பிச்சை, முடக்கிய கை. 'முட்டிக்கு
வந்த முடவனே முட்டிமேல்
மோதினா னொரு மூர்க்கனே'

**முட்டை**
தவிடு, அண்டம் egg.
'முட்டை தின்ற சிறுகோழி
யிட்டதொரு பெருமுட்டை'

**முண்டகம்**
தாழை, தாமரை. 'முண்டகப்
பூவதைப் பிஞ்சகன் முடிக்கணியான்
முண்டகத் தேனுமாலின் மார்பக
முறையவானான்'

**முண்டன்**
நாவிதன், மொட்டைத்தலையன்.
*'முண்டனால் முண்டனானோனுக்கு முகக்களை மாறலாச்சு'*

**முருகன்**
முருகை யணிந்தவன், குமரன்.
*'காலிற்றண்டையன் காதில் முருகன் கதிர்வேல் முருகனே'*

**முருகு**
அழகு, முருகன், காதணியினொன்று.
*'முகத்தில் முருகுடைய முருகும் முருகைக்காதி லணிவானேன்'*

**முலை**
கொங்கை, முல்லைப்பூ (முலையென்பது முல்லையென்பதன் இடைக்குறை.)
*'முலை மூன்றுடையாள் மொய்குழற்கே முலைப் பூவதனைப் பெய்தாரே'*

**முளரி**
கடைக்கொள்ளி, தீ, தாமரை.
*'முளரியான் மூண்டெரி முளரியி னாப்பண் முளரியும் பூக்குமோ'*

**முனிவர்**
இருடியர், பகைவர்.
*'முற்றத்துறந்த முனிவர்க்கு முனிவருண்டோ மூதுலகில்'*

**முன்னவன்**
அண்ணன், கடவுள்.
*'முன்னவன் போரில் முனைந்தோரை முன்னவ னருளால் வென்றானே'*

**முன்னை**
முன்னைமரம், அக்காள், முதல், மூதேவி. *'முன்னையின்கீழ் முன்னையுமுன்னை முன்னைபோல் நின்றானே'*

**மூசுதல்**
சாதல், மொய்த்தல்.
*'புலாலுடல் மூசுங்காலை பொன்னுக்கே மூசுவாரே'*

**மூடி**
மேன்மூடி, மூடப்பெண்.
*'பொன்மூடியை எறிந்தாளோ பேய்க்குண மூடியே'*

**மூத்தாள்**
அக்காள், மூதேவி.
*'மூர்க்கமுடைய மூத்தாள்மாட்டு மூத்தாள்சேர அஞ்சுவளோ'*

**மூப்பு**
முதுமை, தலைமை.
*'கூந்தல்நரைத்த மூப்புடையாள்தன் குடிமைக்கோ மூப்பில்லாள்'*

**மூரல்**
பல், சிரிப்பு, சோறு.
*'முத்தனையமூரலாள் புன்மூரலொடு பால்மூரலைப் புசித்தாளே'*

**மூர்க்கன்**
உக்கிரமுடையோன், நாகப்பாம்பு.
*'மூர்க்கனைக் கடித்த மூர்க்கன் மூர்ச்சையாய்க் கிடப்ப தியல்பேயாம்'*

**மூலம்**
மூலநட்சத்திரம், கிழங்குவேர் முதலியன, ஒரு நோய், காரணம்.
*'மூலத்தில் பிறந்தோன் மூலம்பல அயின்றும் மூலம் நீங்காததன் மூலமென்னோ வென்றான்'*

**மூழ்கல்**
முழுகுதல், கெடுதல்.
*'போகக்கடலுள் மூழ்கினார்கள் சோகக்கடலுள் மூழ்குவரே'*

**மூழ்த்தல்**
மொய்த்தல், அழுந்துதல்.
*'பூமேல்மூழ்த்த வண்டினங்கள் மதுவில்மிகவு மூழ்த்தனவே'*

**மூளி**
காதறை, நெருப்பு.
*'மூளிமகன் நொடியளவில் நீலிவீட்டில் மூளிவைத்தான்'*

**மெய்**
உடல், உண்மை.
*'நிலையில்மெய்யை நலமில்லார் நாளுமெய்யென் றெண்ணுவரே'*

**மெய்யன்**
மகன், சத்தியவான்.
*'திரிசங்கு பெற்றமெய்யன் திசைபுகழ் மெய்யனானான்'*

**மெல்லியர்**
மெலிந்தவர், மாதர்.
'வலிவிலா மெல்லியரும்
வடிவுடைய மெல்லியரும் வருந்தி
நின்றார்'

**மேகம்**
ஒருநோய், முகில்.
'காமிகாய மீதுளமேகம்
கரியமேக மொத்ததே'

**மேலவர்**
பெரியோர், வானோர்.
'அறிவுடைய மேலவரோடு
அறிவிலா மேலவரு
மொப்பாவரோ'

**மொக்கை**
பருமை, கூரின்மை.
'மொக்கையனைக் கொல்ல
மொக்கைவா ளேந்துவோன்
முழுமூடனே'

**மொட்டைச்சி**
பூநீறு, மொட்டந்தலையினள்.
'மொட்டைச்சிகொண்டு
பொன்செய்யான்
மொட்டைச்சிபோல்
முக்காடிட்டான்'

**மொண்டி**
நொண்டி, ஓர் சாமை.
'மொண்டி நடேசன்
மொய்குழலாளை மொண்டிப்
புலத்தே கண்டானாம்'

**மொந்தை**
ஒரு கட்பறை, ஓர்வகைப்
பாத்திரம். 'மொந்தை
யறைகுவானே மொந்தைக்கள்
பருகுவானே'

**மோழை**
மொட்டை, மடமை, கொம்பில்லாத
விலங்கு.
'மோழைத்தலையன்
மோழைமதியனாய் மோழைமீது
வீழ்ந்தானாம்'

**யாணர்**
புதுமை, அழகு, தச்சர்.
'யாணர்சேர் யாதனத்தை
யாணருற யாத்தனர்யாணரே'

**யாது**
என்ன, கள்.
'யாதுகாரணம் பற்றியோ
யாதுவைஅருந்தினா
ளறிகிலேனே'

**யாமினி**
காசிபன்தேவி, நாம் இனிமேல்.
'யாமினிக்கு யாமினி யுரைப்பதுவு
மென்னேயோ'

**யுத்தம்**
தகுதி, போர்.
'யுத்தமல்லாதது நீ உரைத்தால்
கொடியயுத்தம் புரியானோ'

**வகுப்பு**
கூட்டம், பிரிவு.
'சற்சமய வகுப்பாரென்றும்
சாதியின் வகுப்புப்பாரார்'

**வக்கிரநாசிகம்**
ஆந்தை, கிளி.
'வக்கிரநாசிக விழியாளுக்கு
வக்கிரநாசிகவுரைய மழகேயாம்'

**வங்கம்**
கப்பல், ஈயம், வெள்ளி.
'வங்கத்தே வந்தவங்கத்தைச்
சொக்கவங்கமதாய் வேதித்தேன்'

**வசந்தன்**
தென்றற்காற்று, மன்மதன்.
'வசந்தன்வீசுங் காலத்தே
வசந்தன்கணையால் வாடுவனே'

**வசி**
சூலம், வாள்.
'அரன் கைக்கொண்டது
மூவிலைவசியே ஆரியை
ஏந்தியதழகுடை வசியே'

**வசியம்**
கைவசம், கிராம்பு.
'வசியக்காரன் வணிகன்மாட்டு
வசியம்வாங்க வந்தானே'

**வசு**
தீர், நெருப்பு. 'தண்மைசேர்
வசுவுள் வெம்மைசேர் வசுவும்
தோன்றுமே'

**வஞ்சி**
கருவூர், ஓர் கொடி, வஞ்சனைசெய்.
'வஞ்சியிலுறையும் வஞ்சியிடையாள்
வஞ்சமிலேனை வஞ்சியாளே'

**வடம்**
ஆலமரம், கயிறு.
'வடவிலையி லுறங்கினோனே
வடத்தாலே கட்டுண்டான்'

**வடிதல்**
வற்றுதல், நீர்முதலிய பாய்தல்.
'ஆற்றினீர்வடியுமேல் அடுத்த
மடையில் நீர்வடியாதே'

**வடிவு**
அழகு, அல்குல் vagina. 'வடிவுடை
வாசவன் வனிதையால் வசையுடை
வடிவாயிரம் பெற்றான்'

**வட்டம்**
வட்டவடிவம், சீலை.
'வட்டப்பலகையி லமரவோ
வட்டமரையி லில்லையே'

**வட்டி**
முதற்பொருட்கு வருமூதியம்,
அன்னம்பரிமாறு.
'வெள்ளிவை வட்டிக்கு
விடுவானை வட்டி யென்றா
லுயிர்விடுவான்'

**வண்டு**
கரும்பு, வளையல், சங்கு.
'வண்டுசேர் குழலொடு
வண்டணிகையாள் வெள்ளை
வண்டேந்திவை
விழைகின்றாளே'

**வண்ணாத்தி**
வண்ணாரப்பெண், பூநீறு. 'ஆடை
வெளுக்கும் வண்ணாத்தி
அடவிவாழ் வண்ணாத்தியை
அறிவாளோ'

**வத்திரம்**
முகம், சீலை.
'பங்கய வத்திரத்தைப் பாடுறும்
பட்டு வத்திரத்தால் மூடுவாளே'

**வந்தனம்**
வந்தோம், வணக்கம்.
'வறியராய் வந்தனமென்றெமக்கே
வந்தனமுந்தந் தாரில்லை'

**வந்தி**
மலடி, வந்தியென்ற வணிகச்சி,
துதி. 'வந்தியாகிய
வந்தியென்பாள் வரதனையே
தினமும் வந்திப்பாள்'

**வம்பு**
புதுமை, முலைக்கச்சு bodice,
வாசனை, வீம்பு.
'வம்புசேர் வம்பணிவாள்
வம்புபூசியது வம்பேயாம்'

**வயிரவன்**
சிறுகீரை, பைரவமூர்த்தி.
'வயிரவனை வயிறாரத்தின்பான்
வயிரவன்பூசை செய்வானோ'

**வயிரி**
வன்னெஞ்சுடையவன், வல்லூறு.
'வயிரியின் வீட்டின்மேலே
வயிரியொன்று பறந்தது'

**வயிறு**
கருப்பப்பை, உதரம்.
'வயிற்றிலுலவுஞ் சிசுதன்னால்
வயிற்றுள்வேதனை
கொண்டாளே'

**வராகன்**
திருமால், ஒரு பொன்நாணயம்.
'வராகனின் திருவுருவை
வராகன்பொன் கொண்டு
செய்தான்'

**வராகி**
ஓர் சத்தி, சிற்றரத்தை.
'வராகியின் பூசைசெய்வான்
வராகியினற்சாறு வேண்டான்'

**வருவாய்**
வரும்படி, தன்னிடத்தே சேர்வாய்.
'வருவா யில்லேனை
வருவாயென்பா ரெவருமிலையே
இவ் வையகத்தே'

**வலம்**
வலப்பக்கம், வலிமை, வெற்றி.
'ஆகார் நாட்டுக்கு வலமேபோந்து
அருள் வலத்தான் வலம்பெற்றான்'

**வலியான்**
வலியுடையோன், கரிக்குருவி.
'வலியானொருவன் செல்கையிலே
வலியான் வலமாயோடியதே'

**வலைஞன்**
வேடன், செம்படவன்.
'வலைஞனிடை வளர்ந்தாள்
வள்ளியே வலைஞனை மணந்தா
ளுமையவளே'

**வல்லவன்**
கணவன், சாமர்த்தியம்.
'வல்லவன் வல்லவனல்லனே
விவ்வையக மென்னை ஏசாதோ'

**வல்லார்**
சாமர்த்தியமற்றார்,
வல்லமையுடையார்.
'வாயில்வல்லார் கையில்
வல்லாரைவெல்லாததென்
பொருட்டோ'

**வழங்கல்**
கொடுத்தல், செல்லல், சொல்லல்.
'சீமான் வழங்கியகாசு
சிங்களத்தும் வழங்காதென
வழங்கினானே'

**வள்ளல்**
வள்ளிக்கீரை, வரையாது
கொடுப்போன். 'வள்ளலுண்ட
உலோபியை வள்ளலென்று
ரைத்தல் தக்கதேயோ'

**வனம்**
ஊர்சூழ்சோலை, துளசி, சுடுகாடு.
'வனத்தின் வனமாலைசூட்டி
வனத்திலெரித்து நீறாக்குவரே'

**வன்னி**
ஓர் மரம், தீ, கிளி, பிரமசாரி.
'வன்னியடியில் வன்னிக்கு வன்னி
வெருண்டோட வன்னி கண்டான்'

**வாங்கு**
வளைவு, விலைக்குப்பெறு.
'வாங்கு வளைக்கையாளின்று
வாடாமல்லிகையை
வாங்குவாளே'

**வாசம்**
வாசனை, இருப்பிடம். 'வாசமலர்க்
குழலாள் வாசஞ்செய்வது
விண்ணவ ருலகேயோ'

**வாடை**
இடையர்வீதி, வடகாற்று, வாசனை.
'கோவலர்வாடை
வாடைவருகையில் சந்தனவாடை
மிகக்கமழும்'

**வாட்டம்**
தோட்டம், வாடல்.
'வாட்டத்துள்ள வாழையும்
வாட்டமுற்ற தென்னேயோ'

**வாணிச்சிமேனி**
செட்டிச்சியின் மேனி, மாணிக்கம்.
'வாணிச்சிமேனியில்
வாணிச்சிமேனி விளங்கியதென்று
வீணுரைத்தான்'

**வாதம்**
காற்று, மூவகைப் பிணியிலொன்று,
தருக்கம். 'வாதசேயனையான்
வாதநோயின்றி வாதம்பலவும்
பேசினான்'

**வாயிலோன்**
ஊமை, வாயில்காப்போன்.
'வாயிலோனை வழுதியர்கோன்
வாயிலோனாய் நேமித்தான்'

**வாரணம்**
கவசம், கோழி, யானை,
வராகாவதாரனான திருமால், கடல்,
சங்கு. 'வாரணம்பூண்ட
வாரணக்கொடியோன் வாரணப்
பெண்ணை மணந்தானே
வாரணமும் வாரணத்தின் வெள்
வாரண மொன் றேத்தியதே'

**வால்**
சுத்தம், மிருகத்தின் வால்,
பெருமை, மிகுதி. 'வாலறிவன்
வாலின் வாலாயசிலை வாலா
யெரித்த திலங்கையையே'

**வாள்**
ஒளி, வாளாயுதம்.
'வல்வாண்மை யுடையான்
பேணாரின் வாளெறி வாளுக்
கிரையானான்'

**வானநாடு**
பொன்னாங்காணி, தேவலோகம்.
'வானநாடு உண்பானேல்
வானநாடு காண்பானே'

**வான்மீகம்**
குங்குமப்பூ, வான்மீகி இயற்றிய
இராமாயணம்.
'வான்மீகம் தின்னும் வாயான்
வான்மீகம் விரித்துரைத்தான்'

**விசனம்**
மனிதரில்லாத இடம், துயர், விசிறி.
'விசனத்தில்வதியும்
விசனமுடையோனுக்கு விசனமும்
கிடையாதே'

**விசாரம்**
ஓரூர், மனக்கவலை. 'விசாரப்பதியி லுறைந்தா லெளியேன் விசார முற்றும் தொலையுமோ'

**விடாய்**
தாகம், விடமாட்டாய்.
'விடாயென்று வந்தேனை விடாயென்றா லுயர்வாமோ'

**விடை**
எருது, உத்தரம்.
'விடையேறிச் சென்றானொரு விடைதந்தா னில்லையே'

**விருத்தம்**
கிழத்தன்மை, வேறுபாடு, வட்டம், பாவினத்தொன்று.
'விருத்தன் மனவிருத்தமிலாது விருத்தப்பலகைமீ தமரந்து அருத்தநிரம்ப விருத்தப்பா அழகுபெறவே அமைத்தானே'

**விருத்தன்**
கிழவன், மேலோன்.
'நரையுடை விருத்தனே நானிலம்புகழும் விருத்தனோ'

**விரை**
வாசனை, வித்து. 'விரைகமழும் வில்வவிரை பித்தநோய் தீர்க்கும்மே'

**விரோதியான்**
விரோதியாண்டில் பிறந்தான், பகைக்கான்.
'விரோதியான் யாரையும் விரோதியா னெனலாமோ'

**விலங்கு**
மிருகம், குறுக்கு, குற்றவாளிக்கிடுந் தளை. 'விலங்குக்கு விலங்காக விலங்கிடுவா ரெவரேயோ'

**விழுது**
ஆலம்விழுது, வெண்ணெய், நெய்வார் கருவியினொன்று.
'விழுதால்பல்தீட்டி விழுதையுண்போன் விழுதைக் கைக்கொள்வான்'

**வீங்கி**
மெலிந்தவள், பருத்து, சேங்கொட்டைமரம்.
'வீங்கியொருவள் வீங்கியே வீங்கியினிழலில் வைகினாள்'

**வீரம்**
ஒரு மருந்து, வலிமையுடையான்.
'வீரமணிகட்டிய வீரனோ வேழத்தின்மீ திவர்ந்தானே'

**வீரி**
வீரமுடையவள், வட்டத்திருப்பு (ஆடு தின்னாப்பாளை).
'வீரியொருத்தி வெய்யகானில் வீரியைவேண்டித் திரிகின்றாள்'

**வீரியம்**
வீரம், இந்திரியம் semen.
'வீரியமுடையானுக்கு வீரியம் நீர்க்கவில்லை'

**வெங்கண்**
ஓர் மீன், பொறாமை.
'வெங்கண் பொரித்துத் தந்தவளே வெங்கண் கொண்டாள் வேட்டோன்பால்'

**வெட்டியான்**
ஒரு பூச்சி, பிணஞ்சுடுவோன்.
'வெட்டியான் மரிக்கில் வெட்டியா னென்செய்வான்'

**வெண்டேர்**
கானல் mirage. வெள்ளைநிறத்தேர்.
'வெய்யகானில் வெண்டேரும் வேந்தனேறும் வெண்டேரோ'

**வெய்யவன்**
விருப்பமுடையவன், கொடியவன்.
'மக்கள்மாட்டு வெய்யவ னல்லனேல் மாக்கள்மாட்டு வெய்யவ னாவான்'

**வெள்ளானை**
வாலைரசம், ஐராவதம் (இந்திரனேறும் யானை).
'வெள்ளானை கட்டினவன் வெள்ளானை ஏறுவானே'

**வெள்ளிக்காசு**
வெள்ளிநாணயம், ஒருவகை மீன்.
'வெள்ளிக்காசொன் றீந்தேவலையன்பால் வெள்ளிக்கா சிரண்டுபெற்றான்'

**வெறுக்கை**
செல்வம், வெறுப்புக்கொள்ளல்.
'வெறுக்கைமீது வெறுக்கைகொள்ளான் விழுமியஞானி யாவானே'

**வெற்றான்**
தரித்திரன், தனித்த ஆள்.
*'கைப்பொரு ளற்ற வெற்றான்*
*குடும்பத்தை ஒரீஇய வெற்றான்'*

**வேங்கை**
புலி, பொன்.
*'வேங்கைகண்ட ஆடுபோலும்*
*வேங்கைகண்டு மருள்வாரோ'*

**வேடம்**
ஒரு காதணி, உடை
முதலியவற்றால் வேறுவடிவமாவது.
*'கல்விழைத்த வேடந்தொங்கும்*
*வேடங்கொண்டான்*
*கள்ளத்துறவி'*

**வேட்டல்**
வேள்விசெய்தல்,
விவாகஞ்செய்தல்.
*'வேட்டலால்வந்த வல்வில்ராமன்*
*வைதேகியை வேட்டல்செய்தான்'*

**வேட்டுவன்**
வேடன், தேள்.
*'வேட்டையாடும் வேட்டுவனை*
*வெடுக்கென வேட்டுவன்*
*கொட்டியதே'*

**வேட்டை**
வேட்டல் hunting, துன்பம்.
*'வேட்டையாடு வேந்தனுளத்தே*
*வேட்டைமிகக் கொண்டானே'*

**வேண்டல்**
இரத்தல், விரும்புதல்.
*'பசுபதி பலியைவேண்டியே*
*பதுமன்தலையை வேண்டினான்'*

**வேதன்**
பிரமன், கடுக்காய்.
*'வேதன் வயிறுகழியவும்*
*வேதன்மிகவு மினியதே'*

**வேதை**
பொன்னாக்குதல், துன்பம்.
*'வேதை வித்தையால் மனத்தில்*
*மிக்க வேதையைக் கொண்டானே'*

**வேலை**
கடல், தொழில்.
*'வேலையுலகி லுயிர்வாழ*
*வேலைசெய்ய வேண்டுமே*

**வேல்**
வேலமரம், மூங்கில்மரம், கைவேல்.
*'முள்வேலு முத்தெறி*
*வேலுமுடைக் கானில்*
*வேல்கையன் திரிவானே'*

**வேழம்**
மூங்கில், யானை, கரும்பு.
*'வேழக்கோலுக்கே வெருண்ட*
*வேழம் வேழக் கழியை*
*விழுங்காதோ'*

**வேள்**
மன்மதன், முருகன்.
*'கரும்புகணையாய்க் கொண்டான்*
*வேளே கையில் வேலேந்தினான்*
*வேளே'*

**வேள்வி**
ஈகை, மகநட்சத்திரம், யாகம்.
*'வேள்வியில் மிக்கான்*
*வேள்விநாளில் வேள்வியை*
*இயற்றினான்'*

**வை**
புல், வைக்கோல்.
*'வேங்கையுண்ணாதது வையையே*
*வெம்மைக்குறங்குவது வையையே'*

**வைகுண்டம்**
தாமரை, திருமாநகரம்.
*'வைகுண்ட வுந்தியானே*
*வைகுண்ட மளிப்பானே'*

**வைதேகி**
சீதை, திப்பிலி.
*'வைதேகி வெய்யகானில்*
*வைதேகி வளரக்கண்டான்'*

**வைரம்**
வயிரம் diamond, வீரத்தன்மை
valour.
*'வைரக்கடுக்கன் பூண்டோனுக்கு*
*வைரமென்ப தில்லையே'*

## List of words that would give two or more meanings when splitted

### ஒரு சொல்லைப் பிரிக்கில் இரண்டு அல்லது மேற்பட்ட பொருள்களைத் தரும் சொற்களின் அட்டவணை

அகிவைரி
கருடன், மயில் (அகி-பாம்பு).

அக்கரை
அவசியம், அந்தக்கரை.

அக்காளை
தமக்கையை (தரும தேவதையான) அந்த ரிஷபம்.

அங்குசப்பையல்
அழகிய குசப்பையன்; புலவரது கல்வி மதத்தையடக்குவதற்கு யானைக்குடாரியை யொத்த சிறுவன்.

அசோகம்
அசோகமரம், சோகமின்மை.

அசோகன்
அருகன், சோகம் நீங்கினவன்.

அஞ்சம்பினாலெய்தி
(மன்மதன் தனது ஐந்து பாணங்களால் தொடுத்து; அன்னப்பறவையின் பிறகே அடைந்து (அஞ்சம் - அன்னப்புள்).

அஞ்சலி
கும்பிடுகை, அஞ்சுகிற அலி.

அஞ்சலிகை
கும்பிடுங்கை, வவ்வால்.

அஞ்சுகணவர்
ஐந்து புருஷன்மார், அஞ்சுகிற நாயகர்.

அஞ்சுதலை
பயப்பட்டிருத்தல், ஐந்து தலைகள்.

அஞ்சுவர்க்கம்
ஐந்து வகுப்புகள், அழகிய இந்திரலோகம்.

அடிகள்
கடவுள், குரு, சாடியினடியில் தங்கியகள்.

அடிப்பட்டகாந்தி
(பிறரால்) அடியுண்ட காந்தி யென்னும் பெயருடையார், உலகஅனுபவம் நன்குணர்ந்த காந்தி, தீ முறுகற் பாஷாணம்.

அடியாள்
அடிக்கமாட்டாள், தொண்டுபுரிபவள், திருவடியே (தஞ்சமென்ற) ஆள்.

அண்டங்காக்கை
உடல் முழுமையும் கருநிறமுடைய காகம், உலகத்தைக் காக்குதல்.

அதிகாரம்
தலைமை, மிக்க உறைப்பு.

அத்தனை
கடவுளை, அவ்வளவு.

அந்தரங்கத்தியானி
உள்ளத்தே தியானிப்பவன், அழகிய பாற்கடல்மீது தியானத்தோடிருக்குந் திருமால்.

அந்தரங்கம்
இரகசியம், அழகிய பாற்கடல்.

அந்திவண்ணன்
மாலைப்பொழுதின் சிவந்த நிறத்தினனான சிவன், இரவையொத்த கரிய நிறத்தையுடைய அரக்கன்.

அப்புலிங்கம்
தண்ணீராலாய லிங்கம், அந்த ஊர்க்குருவி.

அம்பட்டர்
நாவிதர், அழகிய பட்டர்பிரான்.

அம்பிறைக்கும்
அழகிய பிறைச்சந்திரனுக்கும், பாணத்தைச் சொரியும்.

அம்புதரங்கம்
சமுத்திரத்தின் அலை, அழகிய தேவர்களின் உடம்பு (புதர் - தேவர்).

அம்புயம்
தாமரை, அழகிய புஜம்.

அம்மணம்
நிருவாணம், அழகிய கலியாணம்.

அம்மனை
அம்மானை விளையாட்டு, அழகிய வீடு, அந்த வீடு.

அம்மான்
மாதுலன், அந்த மான்.

அம்மையாரிடம்
தாய் எவரிடத்தே, தாயாரிடம், தாயின் இடப்பாகம்.

அரம்பை
ஒரு தேவஸ்திரீ, வாழைமரம், அரமெனுங்கருவி வைக்கும்பை.

அரிசனம்
மஞ்சள், திருமாலின் தொண்டர்.

அரிதாரம்
ஒரு மருந்து, திருமாலின் தேவியான இலட்சுமி.

அரிதாள்
கதிரறுத்த தாள், மகாவிஷ்ணுவின் திருவடி.

அருணாசலம் காணவில்லை
திருவண்ணாமலையைத் தரிசிக்கவில்லை; அருள் செய்வாயாக, இவளுடைய நாவில் ஜலமும் சுரக்கவில்லை.

அருந்ததி
வசிஷ்டரின் கற்புடைய மனைவி, அருமையான தயிர்.

அருந்தினை
பருகினாய், அரியதினை.

அருந்தேன்
குடிக்கமாட்டேன், அருமையான தேன்.

அருமகன்
மன்மதன், அரிய புதல்வன்.

அரும்பாக
அரும்புபோ லுண்டாக, அருமையான பாகனே.

அரைக்காசை
அரைக்காசு பணத்தை, அரையிலுள்ள பாகத்தின்மீது இச்சை.

அரைக்காணி
நாற்றறுபதிலொருபாகம், ஒரு காணி நிலத்தில் அரைப்பங்கு, இடுப்பிலே ஆணி.

அரைக்கால்
எட்டிலொன்று, அரைப்பங்களவுடைய கால்.

அரைப்பணம்
அரைப்பணக்காசு, அரையாகிய பாம்பின் படம் (அல்குல்).

அரைவடம்
அரைஞாண், பாதியளவுடைய கயிறு.

அரைவட்டம்
அரைமுடி, வட்டத்தில் பாதி.

அலங்காரம்
பேரழகு, அசைகிற முத்துவடம் அல்லது பூ மாலை.

அலர்
அல்லாதவர், மலர்.

அவரைநட்டாள்
அவரை விதையைப் பூமியுள் நட்டாள், அவரைச் சிநேகித்தாள்.

அழுக்காறு
பொறாமை, அழுக்குநீருடைய யாறு.

அறியாமையுடையவன்
அறிவின்மையை யுடையவன், (முக்காலத்தையும்) உணரும்படியான கூர்மாவதாரனான திருமாலை மனத்தில் நினைப்பவன்.

அறிவனார்
பஞ்சமரபு நூலாசிரியர், அறிவுடையவன் யார்?

அறிவிலாதவன்
புத்தியில்லாதவன், புத்தியில் நவவியாகரண பண்டிதனான சூரியனையொத்தவன்.

அறுகால்
வண்டு, அறுபட்ட கால்.

அறுபதம்
வண்டு, அறுபட்ட பாதம், கையாந்தகரை.

அறுபதினாயிரம்
அறுபதாயிரம், பதினாயிரத்தில் அறுபட்ட அதாவது ஐயாயிரம்.

அறுமுகன்
குமரன், அறுபட்ட முகத்தையுடையவன்.

அன்பாலாக்குவித்தான்
அன்பினாலே சமைத்தவன், அன்பாலே பகக்கூட்டத்தை ஒன்று சேர்த்தவனான கிருஷ்ணமூர்த்தி.

**அன்று**
அல்ல, அந்தத் தினம் (உ-ம்.) வந்தது அவனன்று = வந்தது அவனல்ல, அவன் வந்தது அற்றையதினம்.

**அன்னையாரிடம்**
தாயிடம், தாய் எவரிடம், தாயின் இடது பக்கம்.

**ஆகாதனம்**
(காலத்துக்குப்) பயனுறாத காசு, கொலைக்களம்.

**ஆகாது**
முடிவுறாது, பசுவின் செவி.

**ஆடகம்**
பொன், விளையாடுமிடம்.

**ஆடரி**
சுப்பிரமணியன், ஆடுங்குதிரை, அசையும் நெற்கதிர்.

**ஆடவை**
ஆடும்படி செய், நிருத்த சபை.

**ஆட்டுக்கம்பலம் வேண்டினான்**
நடனம் புரிவதற்குப் பொற்சபையை இச்சித்தவன், ஆட்டுமயிராலான கம்பளியை இச்சித்தான்.

**ஆட்டுக்கால்**
அடம்பங்கொடி, ஆட்டின் கால்.

**ஆட்டுத்தலை**
ஆட்டின் தலை, ஆடுதலமைந்த சிரம்.

**ஆணாய்**
ஆண் நாய், ஆண்பிறவியெடுத்து.

**ஆண்டகை**
வீரன், ஆளுகை செய்த கரம்.

**ஆண்டவனில்லையா**
கடவுள் இல்லையா? அங்கு அம்மனிதன் இல்லையா?

**ஆத்தான்**
தன்னைப்பெற்றவள், பசுவின் கால்.

**ஆந்தை**
பஞ்ச பட்சியினொன்று, ஆதன் தந்தை.

**ஆபத்து**
துன்பம், பத்துப் பசுக்கள்.

**ஆரணி**
ஒரூர், வேதசொருபியான பார்வதி, நிறைந்த அழகு.

**ஆரத்தினையே**
முத்துவடத்தையே, முழுமையும் தினைப்பயிரையே.

**ஆலம்பால்**
ஆலமரத்துப் பால், விஷமுடைய பால்.

**ஆலயம்**
சீவனென்ற பசுவின் மனம் அடங்கியிருக்கும் தானம், ஆலமரமும் குளமும்.

**ஆவணி**
ஒரு மாதம், பசுவையலங்கரி.

**ஆவுடையார்**
பசுவையுடையவர், சிவமாகிய லிங்கத்தோடு ஒன்றித்துள சத்தியாகிய வட்டப்பீடம்.

**ஆழ்வார்**
கருடப்புள், திருமாலின் பன்னிரு தொண்டர்க்குள்ளதொரு பெயர் (பக்தியில்) அழுந்துபவர்.

**ஆள்வணங்கி**
தொட்டால் வாடி, அரசமரம், ஆளை வணங்குபவன் 'கோவிந்தன் பணம்தேட ஆள்வணங்கியாய்ப் பிறந்தான்'.

**ஆறரை**
ஆறில் அரைப்பங்கு கொண்ட மூன்று(3), ஆறோடு அரையுங் கொண்ட தொகை (6 1/2).

**ஆறுதலை**
ஆறு சிரங்கள், பிரளயவெள்ளம் உறைவிடம், தேறுதல், கங்காநதியுடைய சிரசு.

**ஆறேகால்**
ஆறோடு கால் கொண்டது (6 1/4), கால்கள் ஆறே.

**ஆற்றுவாய்**
தனிப்பாய், ஆற்றின் பிறப்பிடம்.

**ஆற்றுவானை**
ஒரு மீன், துயரையொழிப்பவனை.

**ஆனைக்கன்று**
அத்திமரம், யானைக்கு அந்நாள்.

**இக்கரை**
இந்துப்பு, இந்தக்கரை.

**இச்சகம்**
முகமன், இந்த உலகம்.

இடக்கை
வாச்சிய வகுப்புளொன்று, இடதுகரம்.

இடாரொன்று தருவாரோ
உலோபிகள் ஒன்றை ஈவாரோ? இறைகூடை ஒன்றைத்தருவாரோ?

இடும்பை
துன்பம், (ஒரு பொருளை) வைக்கும் பை.

இதை
கலப்பை, காராமணி, இந்தப் பொருளை.

இந்திரனூர்
பொன்னாங்காணி, இந்திரனுடைய ஊராகிய அமராவதி.

இந்திராணி
இந்திரன் மனைவி, பூனைக்கூட்டத்துக்கு அரசி (இந்தி = பூனை) 'இராஜாம்பாள் தனது ஆசைநாயகனுக்குக் காரியத்தில் இந்திராணியானாள்'.

இரண்டெட்டில்வா
இரண்டு எடுத்தடி வைக்கும் போதில்வா, இறந்து பதினாறு நாள்களான கருமாந்தரத்தன்று வா.

இரண்டேகால்
இரண்டுடன் கால் கொண்டது (2 1/4), கால்கள் இரண்டே.

இராகவனே
இரகு குலத்தில் தோன்றின சீமானே, இராகு என்ற அரக்கன் அவனேயாவன்.

இராசாவை ஒழிப்பின் பிறகு துன்பமில்லை
இராப்பொழுது மரணாவத்தை யினின்றும் விலகினால் அப்பால் துன்பம் யாதுமில்லை, மன்னவனை அரசினின்றும் நீக்கினால் பிறகு குடிமக்களுக்கு யாதொரு துன்பமுமில்லை.

இராமாநுசன்
ஸ்ரீராமனுக்குத் தம்பியான லக்ஷ்மணப் பெருமான். அவரே கலியுகத்தில் உடையவராய்த் திருவவதாரஞ் செய்தவர், மனத்தில்(பாவ) இருளையுடைய மனிதன் "இரத்தினசபாபதி முதலி துர்மார்க்கத்தில் இராமாநுசனேயானான்"

இருகால்
இரண்டு கால்கள், இருமுறை, அரை (1/2).

இருகுரங்கின்கை
இரண்டு குரங்குகளினுடைய கைகள், முசுமுசுக்கைக்கொடி.

இருப்பை
இலுப்பைமரம், இருப்பாயென்னும் வினைமுற்று.

இருமா
இரண்டு மாமரங்கள், பெரிய குதிரை, இருபதில் இரண்டு பங்கு (2/20), இருமல் நோய்கொள் 'இருமாமுன் ஒருமாகீழ் நின்றாரை நீயோது (காளமேகப்புலவர்).

இருவில்
பெரிய வில், கரியவொளி (சீவ. சிந். 339)

இலங்கையில்
இலங்காபுரியில், கையில் ஒன்று மில்லா தவரேம்.

இல்லாள்
மனைவி, தரித்திரி, வீட்டிலிருக்கிற ஆள்.

இல்லான்
கணவன், தரித்திரன், வீட்டுப்பக.

இவ்வையம்
இந்த உலகம், இந்தச் சந்தேகம்.

இனிதாக்கு
நன்மையுறச்செய், நன்றாகச் சமையல்செய்.

இனியது
இனிமையானது, பிறகு அது.

இனியான்
மேன்மையானவன், பிறகு நான்.

ஈகையன்
கொடையாளன், ஈ மொய்க்கும் கையையுடையவன்.

ஈயை
ஈ என்ற செந்தை, இஞ்சி.

ஈவாய்
கொடுப்பாய், ஈயின்வாய், ஈ மொய்க்கும் வாய்.

உடம்பாடு
சம்மதம், உடம்பானது அசைகிற.

**உடம்பை**
தேகத்தை, கலங்கலான நீர்.

**உப்புக்கண்டம் பெற்றாள்**
உப்புச் சேர்த்துக் காயவைத்த இறைச்சித் துண்டை வாங்கினாள், உப்புக்கு ஈடாக அண்டத்தைப் பெற்றாள் (அண்டம் - உலகம், முட்டை.)

**உமையாள்வோன்**
உங்களை ஆள்பவன், பார்வதி, கொழுநன்.

**உம்பல்**
உமது பல், யானை (உ-ம்), உம்பல் நிறம் கருமை.

**உம்மைவினைவருத்தாதோ**
உம்மைக் கருமபலன் வாட்டாதிருக்குமோ, பிராரத்தவினை தொல்லைப் படுத்தாதோ.

**உள்ளவன்**
பணமுடையவன், உள்ளேயுள்ள அந்த மனிதன்.

**உள்ளான்**
ஒரு பட்சி, நினைக்கமாட்டான், உள்ளேயுள்ள பசு.

**உன்மணி**
உனது மணி, உயர்ந்த மணி.

**உன்மத்தம்**
பைத்தியம், உனது களிப்பு.

**உன்முகம்**
நினது முகம், மேனோக்கிய முகம்.

**உன்னாலயம்**
இதயம், உனது கோயில்.

**ஊகையன்**
விவேகமுடையவன், ஊனைக் கையிலுடையவன்.

**ஊக்கமது கைவிடேல்**
ஊக்கத்தைக் கைவிடாதே, ஊக்கத்தைத் தருகிற கள்ளைக் கைவிடாதே.

**ஊமன்**
ஊமை, ஊனைத் தின்கிற அரசன்.

**ஊரண்டினார்**
ஊரிடத்தே சேர்ந்தார், கள்ளிமரம்.

**ஊருடைமுதலியார்**
ஊரையுடைய முதலியார், முருங்கை மரம்.

**ஊற்றுவாய்**
நீரூற்றின் பிறப்பிடம், பெய்வாய் அல்லது சொரிவாயென்னும் வினைமுற்று.

**எங்கை**
எனது கை, எனது தங்கை.

**எட்டக்கரத்தார்**
எட்டெழுத்துக்கு அதிதேவதையான திருமால், எட்டும்படியான அந்தக் கையையுடையவர்.

**எட்டரை**
எட்டுடன் அரை கொண்ட எண் (8 1/2), எட்டிலரைப்பங்கு (4).

**எட்டுமுலை**
எட்டு முலைகள், (கைக்கு) எட்டுகிற முல்லை மலர் [முல்லையென்பது முலையென இடைக்குறைந்தது].

**எண்ணுதற்கும்**
நினைப்பதற்கும், எட்டுப் புருவங்கள் அல்லது நான்கு முகமுடைய பிரமனுக்கும்.

**எம்மான்**
எமது தெய்வம், எமது மான், எந்தமான், என் மகன்.

**எம்மை**
எப்பிறப்பு, எங்களை.

**எவ்வனம்**
இளமை (யௌவனம் என்பது இவ்வாறு வழங்குகிறது), எந்தக் காடு.

**எழுபிறப்பு**
ஏழு பிறவிகள், உயர்பிறப்பு.

**என்கை**
என்றுசொல்லுதல், எனது கை

**என்செய்வாய்**
என்ன காரியம் செய்யப்போகின்றனை, எனது சிவந்த வாய்.

**என்பரவாமை**
எலும்பு, அரவு, ஆமையும்; தொழாதிருத்தல் யாது காரணம் பற்றி?

**என்றலைவை**
எந்நாளில் அலைவாய்? எனக்கூறியே அலைவாய், என் தலைமீது வை.

என்றவன்
என்று கூறினவன், எந்நாளில் அந்த மனிதன், சூரியன்.

என்றுவந்தான்
எந்த நாளையில் வந்தான்? எனக்கூறி மகிழ்வுற்றான், சூரியன் உதித்தான்.

என்னை
என்ன? என் தாய், எனது தந்தை, நான் என்பதன் இரண்டாம் வேற்றுமை.

ஏகபாவம்
ஒரே தன்மை, ஒரே பாவச்செய்கை.

ஏழரை
ஏழும் அரையுங்கொண்டது (7 1/2), ஏழிலரைப்பங்கு (3 1/2).

ஐயமிட்டார்கெட்டார்
பிச்சையிட்டதால் எவரே தீங்கையடைந்தார்? பிச்சையிட்டவர்கள் கெட்டுப்போனார்கள்.

ஐயம்பொழியும்
ஏற்பார்க்குப் பிச்சையிடும், மன்மதனின் ஐந்துபாணங்களி னவத்தையினின்றும் விலகும்.

ஐயன்
தந்தை, குரு, மூத்தோன், அரசன், இருமல்நோயுடையவன்.

ஒருகால்
ஒருமுறை, ஒற்றைக்கால்.

ஒருமரம்
செம்மரம், ஒரே மரம்.

ஒருமா
இருபதி லொருபங்கு (1/20), மாமரமொன்று.

ஒற்றுமை
ஐக்கியம், ஒற்றும்படியான மை.

ஒன்பதரை
ஒன்பதுடன் அரையும் கொண்டது (9 1/2), ஒன்பதிலரைப்பங்கு (4 1/4).

ஒன்று மற்றவனால் முடியுமா?
செயற்கரிய ஒரு காரியம் என்னைத் தவிர வேறொருவனால் முடிவுறுமா? உபயோகமில்லாதவனால் முடிவாகுமா?

ஓங்காரம்
பிரணவம், பெருமையுறு முத்துவடம்.

ஓமப்பொடி
ஓமம் கலந்துள்ள ஒரு தின்பண்டம், திருநீறு (ஓமம் - யாகம்).

ஓரான்
ஒரு மனிதன், தெளிவுறான்.

கங்கைநீர்கமந்தீர்
கங்காசலத்தைத் தாங்கினீர், பிரம கபாலத்தைக் கையிலே நீர் ஏந்தினீர்.

கஞ்சிகுடி
கஞ்சியைக் குடிப்பாய், காஞ்சிபுரம் இருப்பிடம்.

கடலை
கடலையென்ற தானியம், சமுத்திரத்தை, கடுமையான அலை.

கடிதடம்
பெண்குறி, நறுமணமுள்ள இடம்.

கடைமீன்
கடையில் விற்கும் மீன், இரேவதிநாள்.

கடைவாய்
தயிர்முதலிய கடைவாய், வாயினடிப்பாகம்.

கட்டிமை
கட்டுப்பாடு, பிகனத்தனம், இறுகின மை.

கண்டத்தோசை
குரலோசை, துண்டங்களாகிய தோசை.

கண்டிதமாய்ப்பேசு
கண்டிப்பாய்ப் பேசு, பார்த்து இதமாகப் பேசு.

கண்டியாள்
கண்டிப்பதியிலுள்ள ஆள், கண்டிக்கமாட்டாள்.

கண்ணீர்
கண்ணிலிருந்து சொரியும் நீர், கள்ளாகிய நீர்.

கண்மை
கண்ணுக் கிடுமை, கண்ணோட்டம்.

கத்திகை
கத்தியோடு கூடிய கரம், சிறுகொடி.

கந்தனை
சிற்றரத்தைப்பூடு, முருகனை.

கம்பத்தான்
வேளாண்மைத் தொழிலான், சிரசுகள் பத்துடைய இராவணன் (கம்-சிரசு).

கம்பீரம்
ஆர்ப்பரிப்பு, கம்பென்னுந் தானியத்தின் ஈரம்.

கம்மாளன்
ஒரு சாதியான், கபாலத்தை யேந்தின சிவபிரான்.

கரிக்கை
கரிசலாங்கண்ணி, கரிக்கறையுடைய கரம்.

கரிமுகன்
யானைமுகத்தையுடைய கணபதி, கரிபூசின முகத்தினன்.

கரியமால்
காய்ச்சற் பாஷாணம், கரிய நிறமுடைய திருமால்.

கருக்கோட்டை
ஓரூர், கருவாலாய கோட்டை, கரிய நிறமுடைய கோட்டை, கூர்மமுக்கம்.

கருங்கண்ணி
மைதீட்டின கரிய கண்ணையுடையவள், ஒரு மீன்.

கருங்காலி
ஒரு மரம், கருமையான காலையுடையவள்.

கருந்தலை
கரிய தலை, நாலிலொரு பங்கு (1/4).

கருப்பநீர்
கருப்பையிலுள்ள நீர், பனையின் சாறு (பதனி).

கருமான்
கொல்லன், கருவுற்ற மான், கரிய மான்.

கருமை
பெருமை, கரிய மை, கருவினாலாகிய மை.

கரும்பிறைக்கும்
கரும்பை இறைக்கும், வெள்ளிய பிறைச்சந்திரனுக்கும், கரும்பு வில்லையுடைய காமதேவனுக்கும்.

கரும்புல்
பனைமரம், கரிய புல்.

கரும்பேய்க்கும்
கரிய நிறமுடைய பேய்க்கும், கரும்புக்கு ஒப்பாகும்.

கருவாடு
உலர்ந்த மீன், சினை கொண்ட ஆடு.

கருவாளி
கருத்துடையோன், கருவைக் கையாள்பவன்.

கருவிற்படையார்
கரிய வில்லை ஆயுதமாகக் கொண்டவர், கருப்பத்தில் தோன்றச்செய்யாதவர்.

கருவை
வரகுவைக்கோல், ஒரு சிவஸ்தலம், கருவை நீ வை, தாயின் கருப்பத்தில் வைப்பாய்.

கலசபாக்கம்
ஓரூர், கலசம் போன்ற ஸ்தனம்.

கல்லறை
பிரேதக்குழி, கல் வீடு.

கல்லாமை
கற்றுக்கொள்ளாமை, கல்லாலாகிய ஆமை.

கல்லானை
கற்கவறியாதவனை, கல்லினாலாய் யானை.

கல்லான்
தோண்டான், படிக்காதவன், கல்லினாலான பசு.

கல்லுப்புப்படி
கல்லுப்பும் படியளவு, கல்லானது வீங்குமாறு.

கல்லை
கவர்வழி, கல் என்பதன் இரண்டாம் வேற்றுமை.

கவிகை
குடை, குரங்கின் கை, புலவனது கரம், கவிழ்ந்த கை.

கவிராயன்
புலவன், குரங்குகளுக்கு அரசனான சுக்கிரீவன்.

கழுதை
கர்த்தபம், சூலத்தால் (பகைவருடம்பைத்) துளை.

கழுநீர்
ஆம்பல் மலர், அரிசி களைந்த நீர்.

கழுவாள்
சுத்திபண்ணாள், கழுமரத்தில் செருகிய வாள், கழுவிலேற்றின ஆள்.

களிகை
இளம் பூவரும்பு, களியையுடைய கை.

களித்தின்றுபோ
களியை உண்டுபோவாய், இன்றைய தினம் களிப்புற்றுச் செல்வாய்.

களிப்பாக்கு
அவித்துக் காய்ந்த பாக்கு, களிப்பையுண்டாக்கு.

கள்ளச்சரக்கு
திருட்டுத்தனமாக வந்த பொருள், கள் அல்லது மதுவையுடைய அந்தப் பொருள்.

கள்ளிக்காக்கையைத்தந்தான்
கள்ளிக்காக்கையைக் கொடுத்தான், திருடிக்கு உடலைத் தந்தான்.

கள்ளிக்கோட்டை வீடு
கள்ளிக்கோட்டையிலுள்ள வீடு, கள்ளிக்கு ஓட்டைவீடு.

கள்ளிமுளையான்
ஈழத்தலரி, கள்ளி பெற்ற மகன்.

கற்பகம்
பஞ்ச தருக்களிலொன்று, கற்புடைய மனம்.

கற்பனை
இல்லதை உள்ளதாக உண்டு பண்ணல், கல்லாலாகிய பனைமரம்.

கற்பில்லாள்
கற்புக்குணத்தை இல்லாத விபசாரி, கற்புடைய மனைவி.

கற்புரம்
பொன், கற்புக்குணமென்னும் வலிமை.

கற்றார்
படித்தவர், கல்லாலான மாலை.

கற்றேன்
படித்தேன், மலையில் வைத்த தேன்.

களிகரம்
அன்பு, களியையுடைய கை.

கன்னார்
ஒரு சாதியார், ஒரு மருந்துச் சரக்கு, கல்லிலுரித்த நார்.

கன்னிகை
கன்னியின் கரம், பூவரும்பு, குமரி.

கன்னிச்செவ்வாய்
கன்னியின் சிவந்த வாய், கன்னியாராசியிலேறிய அங்காரகன்.

காக்காய்மூக்கி
கருமுகிற் பாஷாணம், காக்கையின் மூக்குபோன்ற நாசியையுடையவள்.

காசறை
மணி, மயிர்ச்சாந்து, காசுடைய அறை.

காசிலான்
குற்றமில்லாதவன், (கையில்) பொருளில்லாதவன்.

காட்டாள்
காண்பிக்கமாட்டாள், காட்டு மனிதன்.

காட்டான்
காண்பிக்கமாட்டான், காட்டுப்பசு.

காட்டெருமை
சதுரக்கள்ளி, காட்டிலுள்ள எருமை.

காட்டேரி
ஒரூர், ஒரு துஷ்டதேவதை, காட்டிலுள்ள ஏரி.

காதறுப்பான்
காதை அறுப்பவன், காதைச் சுற்றிவரும் இரணம்.

காமரம்
சோலையிலுள்ள மரம், வண்டு, இசைப்பாட்டு.

காமன்
மன்மதன், கற்பகத்தருவுக்கு இறைவனான புரந்தரன்.

காமுகன்
தூர்த்தன், (பிறரைக்) காத்த முகத்தினன்.

காரிகை
பெண், சனியனின் கை.

காவேரி
ஒரு தெய்வநதி, (சுற்றிலும்) சோலை, சூழ்ந்த ஏரி.

காற்றண்டை
காற்று வீசும் பக்கம், காலிலணியும் தண்டை.

கானக்குறத்தி
தேன், காட்டில் வாழ் குறமாது.

கானிலிந்திரன்
கொடுவேலி, காட்டிலுள்ள இந்திரன்.

கிழங்கெடுக்கும்
கிழங்கைப் பூமியின் கண்ணிருந்து தோண்டும், விருத்தாப்பியத்தை ஒழிக்கும்.

கிளைவிட்ட
மரத்தின் கிளையை நழுவவிட்ட, மரத்தில் கிளைகளுண்டாகிய, சுற்றத்தாரைத் துறந்த.

குடலை
பூக்குடலை, குடல் என்பதன் இரண்டாம் வேற்றுமை.

குடியாள்
குடிக்கமாட்டாள், பண்ணையாள், குடிக்கிற ஆள், தாளகம்.

குணமது கைவிடேல்
(நற்)குணத்தைக் கைவிடாதே, குணத்தைத் தருகிற கள்ளை நீக்காதே.

குமரன்
சிவனிளைய புதல்வன், அற்ப அல்லது பயன் தராத மரம் (கு + மரன்) மரமென்பது மரனெனப் போலியாயிற்று.

குரங்குமவனே
வானரமும் அவனேயாவன், வளைகிற அல்லது தாழ்கிற அந்த மனிதனே.

குருகை
ஆழ்வார்திருநகரி, குருவின் கரம்.

குருவிச்சை
ஒரு மரம், குருவுக்குள்ள ஆசை.

கெடுவை
கெடுவாயென்னும் வினைமுற்று, தவணை ஏற்படுத்து.

கைகூடு
சித்தியாகு, (அறுபட்ட) கையானது ஒன்றுசேர்.

கைக்கும்பூ
கரத்துக்கும் பூ, வேப்பமலர்

கையன்
வஞ்சகமுடையவன், கையையுடையவன்.

கையை
தங்கை, கரத்தை.

கைவிலங்கு
கைக்கிடுந்தளை handcuff, தும்பிக்கையுடைய யானை.

கொடியன்
பொல்லாதவன், கொடியை மேலே தூக்குபவன்.

கொல்லாள்
கொல்லமாட்டாள், கொல்லுகிற ஆள்.

கொல்லான்
கொல்லமாட்டான், கொல்லுகிற பசு.

கொல்லிடம்
ஒரு யாறு, கொல்லுகிற இடம்.

கோடிக்கரை
ஒரூர், ஏரிகரையின் முனை.

கோடிதீர்த்தம்
தனுக்கோடி, கோடிக் கணக்கான தீர்த்தங்கள்.

கோடியில்லாமை
புதுச்சீலை இல்லாமை, நூறுலட்சம் பொருளில்லாமை.

கோடியுடையான்
புதுச்சீலையை உடுத்தினவன், நூறுலட்சம் பொருளுடையவன்.

கோடிவயது
பதினாறு வயதுக்குள்ளான பெண்பருவம், கோடிக் கணக்கான ஆயுள்.

கோபாலன்
பசுக்களைக் காக்கும் ஸ்ரீ கிருஷ்ணன், நெற்றியில் கண்ணையுடைய சிவன் (கோ - கண் ; பாலம் - நெற்றி), இடையன்.

கோமலம்
இளமை, பசுவின் சாணம்

கோயிலான்
கோயிலையுடையவன், கோயிலாகவுடையவன், கண்ணில்லாதவன்.

கோரட்சகன்
இடையன், ஸ்ரீ கிருஷ்ணபகவான்.

கோவலன்
கண்ணகியின் கணவன், பசுக்களைக் காப்பதில் வல்லவனான இடையன்.

கோனல்லன்
அரசன் நல்லவன், மன்னனல்லாதவன்.

சக்கரநெறிநில்
(அரசனது) ஆஞ்ஞைப்படி நடப்பாய், பணமுலாவும் வழியிலே நிற்பாய்.

சக்கிரிகை
முழந்தாள், குயவன் அரசன் அல்லது திருமாலின் கை.

சக்கிலி
செம்மான், கண்ணில்லாதவன் (சக்கு - கண்).

சக்கிலிச்சி
சக்கிலிப்பெண், கண்ணில்லாதவள்.

சங்கரி
(பாவத்தைத் தொலைக்கிற) பார்வதி, சங்கையேந்தின திருமால்.

சங்காரம்
அழித்தல், சங்கினால் செய்த ஆரம்.

சங்கை
சந்தேகம், சங்கமென்னும் ஆயுதத்தை.

சடைமுடியாள்
சடையை முடியிலுடைய பார்வதி, அவிழ்த்த கூந்தலை முடிக்கமாட்டாள்.

சண்டிகை
துர்க்கை, கோபமுடையவளின் கை.

சதிபதி
அர்த்தநாரீசுரன், வஞ்சனையை யுடைய கணவன், கற்புடையாளும் கணவனும்.

சத்தகன்னிகை
ஏழு மாதர்கள், சப்தமிடுகிற பெண்கள்.

சந்தில்
சனி, குறுந்தெருவில்.

சரக்குப்பை
பாணங்களின் குவியல், சரக்குவைக்கும் பை.

சரக்கை
பண்டத்தை, வில்லையுடைய கை.

சருவகோபாலன், சர்வகோபாலன்
அனைத்தும் தானேயான கிருஷ்ணமூர்த்தி, ஒருவகை அகன்ற பாத்திரங்கொண்டு பிச்சையெடுக்குங் கொள்கையுடையவன் [சருவம் - வாயகன்ற பாத்திரம் (உ-ம்.) சருவச்சட்டி; கோபாலம் - புரட்டாசியில் சனிக்கிழமைதோறும் பிச்சையெடுக்கும் நியமம்] (உ-ம்.) கிருஷ்ணன் கோபிகா ஸ்திரீகள் ஒவ்வொருவர் முன்னேயும் சர்வகோபாலனாகி நின்றான்; திண்டிவனத்துக் கணக்கன் முடிவில் பட்டணத்து வேசிவீட்டில் சருவ கோபாலனாய் வந்தான்.

சலங்கை
சதங்கை, சலத்தையுடைய கை.

சலமுற்றாவிக்குருகீரே
தனியாக் கோபமுற்றுப் பிராணனுக்காக வருந்துகின்றிலையே, குளத்தின் நீரிடத்தெய்திய நாரைகளே [சலம்-தணியாக்கோபம், நீர்; ஆவி = பிராணன், குளம்].

சனிநீராடு
சனிக்கிழமைதோறும் ஸ்நானம்செய், சனிக்கிற நீரிலே (ஊற்று நீரிலே) குளிப்பாய்.

சன்னிநாயகம்
தும்பைப்பூடு, கருஞ்சீரகம்.

சாகாமக்கள்
இலை காய் கனி முதலியவை தின்னுகிற மனிதர், இறவாத மனிதர்.

சாகைக்குந்தத்து
கிளைகளையுடைய குருந்தமரத்தின் மீது (குந்தம்-குருந்தமரம்), சாவதற்கும் ஒரு கண்டம்.

சாசனம்
இறந்த மக்கள், உறுதிப்பத்திரம் "இந்திராணி அநீதியாய்த்தேடிய ஆஸ்திக்கு ஒரு சாசனம் வேண்டாமோ?"

சாணிற்குறைந்தான்
ஓட்டைச்செடி, ஒரு சாணிற்கும் குறைந்த உயரமுடையவன்.

சாபனை
சாபம் Malediction, பட்டுப்போன பனைமரம்.

சாமந்தி
ஒரு பூஞ்செடி, சாகுந்தறுவாயிலிருக்கும் பெண் குரங்கு.

சாமரை
சாமரம், இறக்குந் தறுவாயிலுள்ள மான்.

சாம்பிராணி
சாகுஞ் சீவன், ஒரு வாசனைப்பொருள் Benzoin.

சாரதி
தேர்ப்பாகன், சாகிற இரதிதேவி.

சாருபம்
கடவுளது உருப்பெற்றிருத்தல், சாக்குறியுடைய உருவம்.

சாலக்கொடியாரம்மணலே
மிகவும் கொடியவராவார் அந்த அண்ணலே, மிகுதியும் கொடிகள் நிறைந்துள்ள அந்த மணலிடத்தே (அண்ணல் - பெருமையிற் சிறந்தோன்).

சாவரம்
பாவம், செத்துப் போவதற்குரிய வரம்.

சாவனம்
ஒரு கருவி, நாணற் புல், ஓமச்சடங்கை நிறைவேற்றுங் கடைசியாகுதி, பிணஞ்சேர் காடு.

சாவாளை
ஒரு மீன், மெலிந்தது, இறந்துபோம வளை, செத்த வாளைமீன்.

சிங்கநாதம்
மான்கொம்பினாற் செய்ததோர் வாத்தியம் (சிங்கம் - சிருங்கமென்பதன் திரிபு), சிங்கத்தின் கெர்ச்சனை.

சிதம்பரம்
ஒரு சிவஸ்தலம், பதனழிந்த அரமென்னுங் கருவி.

சிதறி
பாடலமரம், சிந்தியென்னும் வினையெச்சம்.

சித்தசாதனம்
மனத்திற்கு உறுதி, வெண்கடுகு.

சித்திரக்காலி
ஒரு நெல், அழகிய காலையுடையவள்.

சித்திரவதை
கண்ட துண்டமாய் வெட்டிக் கொல்லல், அழகிய தேன்கூடு.

சிந்தாகுலம்
மனக்கலக்கம், சிதறிய பகக்கூட்டம்.

சிந்துபுட்பம்
சங்கு (சிந்து-கடல்), சிந்துகிற மலர்.

சிரத்தை
அன்பு, தலையை.

சில்லிகை
நல்லாடை, துவாரத்தையுடைய கை.

சிவந்தவேசை
செம்பரத்தைப் பூடு, சிவந்த நிறமுடைய தாசி.

சிறப்பில்லாள்
மேன்மையுடைய மனைவி, மூதேவி.

சிறுகா
குறையா, சிறிய சோலை.

சிறுகால்
சிறிய கால், தென்றல்.

சீமான்
தனவான், நச்சுக்குணமுடைய மாரீசனென்ற மான் (சீ-நஞ்சு).

சீரகம்
கறிக்கிடும் ஒரு சரக்கு, சிறப்புற்ற இடம்.

சீழ்க்கை
சீழ்வடியுங்கரம், வாயாலூதும் ஒரு சத்தம்.

சுக்கிலை
புளியமரம், சுக்கு இல்லை.

சுத்திகரம்
சுத்தஞ்செய்தல், சுத்தியென்னுங்கருவியுடைய கை.

சுமங்கலை
கற்பழியாது கணவன்கீழ் வாழ்பவள், நல்ல அம்பட்டத்தி.

சுயம்பாகி
சமையற்காரன், தானாயுண்டாகி.

சுயோகி
கள், நல்லயோகி.

சுவடி
புத்தகம், நற்பாதம்.

சுவாசம்
உயிர்ப்பு, நல்லிருப்பிடம், சுவட்டுமண்.

சுவைத்தேன்
சுவையுடைய தேன், அனுபவித்தேன்.

**சூதகம்**
ஆகுசம், மகளிர்சூதகம், சூதான மனம்.

**சூதராட்சசன்**
பொன்னம்பர் amber, சூது நெஞ்சினனான அரக்கன்.

**சூதன்கொல்லையிலே மாடுமேயும்**
சூதுடைய நெஞ்சினன் கொல்லையிலுள்ள பயிரைப் பட்டிமாடு மேய்ந்துவிடும், பாதரசத்தைச் செவ்வனே கட்டுகையில் பொன்மயமாகி விடும்.

**செங்கண்ணி**
ஒரு மீன், (சினத்தீயால்) சிவந்த கண்ணையுடையவள்.

**செங்கல்பட்டு**
ஓர் ஊர், செங்கல்லா லடியுண்டு.

**செங்கை**
ஆதிரைநாள், சிவந்த கை.

**செஞ்சொல்**
வெளிப்படையான மொழி, செந்நெல்.

**செட்டிபெண்டாட்டி**
செட்டியாருடைய மனைவி, முருகனின் தேவியான வள்ளி.

**செந்தலை**
எட்டிலொரு பங்கு, சிவந்த தலை.

**செந்திரு**
தாளகம், திருமகள்.

**செந்தோட்டி**
சிவந்த நிறத்தினனான தோட்டி, சிறுகாஞ்சொறி பெருகாஞ்சொறி.

**செப்படிவித்தை**
ஒரு தந்திர வித்தை, வித்தையைச் சொல்லுவாயடி.

**செம்பரத்தை**
சிவந்த வேசி, சப்பாத்துச்செடி.

**செம்பாலாச்சு**
செம்பினாலாயிற்று, சிவந்த நிறமுடைய பாலாகியது.

**செம்பால்**
சிவந்த நிறமுடைய பால், செம்பென்னும் லோகத்தாலே.

**செம்புறா**
ஒரு மீன், சிவப்பு நிறமுடைய புறா.

**செம்பை**
சிற்றகத்திச்செடி, தாம்பிரலோகத்தை.

**செம்மலை**
ஆவிரைச்செடி, சிவந்த நிறமுடைய மலை, பெருமையிற் சிறந்தோனை.

**செம்மான்**
சக்கிலியன், சிவந்த நிறமுடைய மான்.

**செம்மை**
செவ்வை, சிவப்பான மை.

**செயவானை**
வெற்றியுடையவனை, பட்டத்தியானை state elephant.

**செய்யவளை**
திருமகளை, கழனியிலுள்ள சங்கு (செய்-கழனி; வளை - சங்கு), செந்நிறமுடைய வளையல்.

**செய்யாள்**
இலட்சுமி, செய்ய மாட்டாள், செய்கிற ஆள்.

**செய்யான்**
செய்யமாட்டான், பூராணெனுஞ் செந்து.

**செருப்புக்கு**
செருப்பின் பொருட்டு, போர்க்களத்தே புகுந்து (செரு-சமர்விளை பூமி) "செருப்புக்குத் தோல் வாங்குஞ் சென்னி யகளங்கன்" (தனிப்பாடல்).

**செவ்வாய்**
சிவந்த வாய், அங்காரகன்.

**சேனியன்**
ஒரு சாதியான், சுவர்க்க லோகாதிபனான இந்திரன்.

**சேயிலம்**
இலுப்பைமரம், குழந்தை இல்லாதவரேம்.

**சேத்கண்ணி**
அரிதாரம், சேல் மீன் போன்ற கண்ணையுடையவள்.

**சைவாசாரம்**
சிவசமய வொழுங்கு, இயற்சியுடைய ஆசாரம் (சை இகழ்ச்சி).

சொத்தை
புழுவண்டு முதலியன அரித்தது, உடைமையை.

சோற்றிலை
கற்றாழை, உண்பதற்குச் சோறுவைக்கும் இலை.

தங்காள்
தங்கை, தங்கமாட்டாள்.

தங்கான்
அரையென்னுமெண்ணின் குறி (1/2), தங்கமாட்டான், தங்குகிற பசு.

தங்கையை
தமது கையை, இளையாளை.

தங்கையைக்கொல்லி
தங்கையைக் கொன்றவள், சிறியாணங்கை.

தசரதராமன்
தசரதன் குமாரனான சீராமன், பல்லக்கும் தேருமுடைய இருள் நிறத்தினனான இலங்கை மன்னன் (தசம் - பல்லக்கு) "தசரதராமன் புகழ் பிணத்தின்மீ திட்ட பூமணமே யொக்கும்"

தடிகை
மின்னல், தடியேந்தின கை.

தட்டுவாணி
வேசி, சிறுகுதிரை, குற்றம் அல்லது தந்திரமுடைய சொல், தட்டுப்போன்ற வெண்டாமரை யாசனத்திலுறையும் சரஸ்வதி.

தந்தபலம்
விளாமரம், கொடுத்த பழம்.

தம்மில்லம்
தமது இல்லம், மயிர்முடி (சூடா -நிக.).

தருமநீதி
தருமமுறை, தீர்மானம் தரப்பெற்ற அநியாயம், 'அவன் தருமநீதி கடவுளுக்கும் பொறுக்குமோ?' (தரும் + அநீதி).

தலைமகன்
பெருமையிற் சிறந்தோன், முதற் புதல்வன்.

தலைவிரிச்சான்
சாரணைப்பூடு, தலைமயிர் முடியாதவன்.

தழுவாள்
கட்டியணைக்க மாட்டாள், தழுவுகிற ஆள்.

தனபாரம்
பருத்த கொங்கை, பணச்சுமை "ஆணும் பெண்ணுந் தனபாரமுடைய திந்நாடே"

தனிகை
இளம்பெண், தனித்த கை.

தன்முன்
தனக்கு முன்பாக, தனது தமையன்.

தாதா
தருவாய் தருவாய், ஈகையாளன், பாட்டன், பிரமா.

தாமரை
கமலம், தாவுகின்ற மான்.

தாமோதரனார்
தாம்பை அடி வயிற்றில் கட்டப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணன், தாமாகவே (தாரக மந்திரத்தை) ஓதுகின்ற சங்கரன்.

தாயைக்கொல்லி
வாழை, தாயைக்கொல்பவள்.

தாரணியார்
பூதலத்தை ஆள்பவர், பூதலத்துள்ளவர்கள், கிண்கிணி மாலையை ஆபரணமாகப் பூண்டவர், பூமாலையைச் சூட்டிக்கொள்ளார்.

தாழம்பூ
ஓலைப்பூ Keora flower, ஆழ்ந்த பாற்கடலி லுண்டாகிய தாமரை போலும் முகத்தையுடைய இலட்சுமி (தாழ் + அம் + பூ).

தாழாமை
இறுமாப்பு, நீரிலமுழ்ந்திய ஆமை.

தானமது கைவிடேல்
தானஞ் செய்வதைக் கைவிட்டு விடாதே, தானமாகத் தரும் தேனை அல்லது கள்ளை நீக்காதே.

தானவன்
அசுரன், (அனைத்தும்) தானேயான ஆண்டவன்.

திரிகூலி
காளி, கற்றாழை.

திரிபுரமெரித்தான்
முப்புரத்தை எரித்த சிவன், (உலகில்) திரிகிற உடலை யெரித்த வெட்டியான்.

திருக்காட்சி
தேவதரிசனம், வஞ்சகத்தை ஆளுதல் (திருக்கு + ஆட்சி).

திருக்குளம்
கோயிற்குளம், வஞ்சகமுடைய மனம் (உள்ளமென்பது உளமென இடைக்குறைந்தது).

திருக்கை
ஒரு மீன், வஞ்சகத்தை, செல்வமுடைய கை.

திருக்கொன்றைத்தாரான்
வஞ்சகமான காரியமொன்றைச் செய்யான், அழகிய கொன்றைப் பூமாலையணிந்த சிவன்.

திருக்கோயில்
தேவாலயம், வஞ்சகச் செய்கை தொலைவுற்றால் (திருக்கு + ஒயில்).

திருப்பாதஞ்சிவந்தார்
அழகிய திருவடிக ளிரண்டும் சிவந்திருக்கப் பெற்றவர் (திரு + பாதம் + சிவந்தார்), சேனையைத் திருப்பாது அஞ்சி வந்தார்.

திருமுகம்
(ஸ்ரீமுகம் என்பதன் திரிபு) - வரைந்தனுப்புமோலை, அழகிய முகம்.

திருவல்லிக்கேணி
அழகிய அல்லிமலரையுடைய குளம், அழகிய கொடிக்கு ஏணி.

திருவாளர்
இலக்குமியை ஆள்பவரான மகாவிஷ்ணு, செல்வத்தை (அறுப்பதற்கான) வாளாயுதமுடைய நெஞ்சினர் (இஃதை இக்காலத்தே மூதேவிக்கு இருப்பிடமாயுள்ளவர் தமது பெயருக்கு அடைமொழியாகப் பயன்படுத்துகின்றனர்).

தின்னாமை
உண்ணாதிருத்தல், தின்னுகிற ஆமை.

துடைவை
உழவுகொல்லை, பூந்தோட்டம், துடையை வை, துடைமீது வை.

துணிகரம்
தைரியம், வேஷ்டியையுடைய கை.

தூமை
மகளிர்சூதகம், பரிசுத்தமான மை.

தேவடியாள்
தெய்வத்துக்கு அடிமையானவள், தேவடி காக்கிற ஆள்.

தேற்றுவித்து
தேற்றாமரத்தின் வித்து, தெளிவுறச் செய்து.

தொடுவாய்
யாறுங்கடலுங் கூடுமிடம், தீண்டுவாய்.

தொடுவான்
தீண்டுவான், அடிவானிடம்.

தொட்டவிரல்தறித்தான்
தொட்டவிரலை வெட்டினான், பெருங்குறிஞ்சாக்கொடி.

தொழுமரம்
(மக்கள்) வணங்கும் அரசமரம், தண்டனைக்காரருக்குரிய மரம்.

தோற்கடித்தான்
தோலைக்கடித்தான், தோல்வியுறச்செய்தான்.

தோற்பாய்
தோலாலாகிய பாய், தோல்வியுறுவாய்.

நகத்தான்
நகத்தையுடையவள், தெய்வீகம் பொலிகிற அந்தத் திருவடி (நகு + அ + தாள்).

நங்கை
பெண்ணிற் சிறந்தாள், நமது கை (நம் + கை).

நச்சப்பார்வை
மோகப் பார்வை, விடப்பார்வை.

நச்சுவாய்
விரும்புவாய், தீச்சொல்.

நஞ்சறுப்பான்
விஷத்தை நீக்குபவன், படுவங்கீரை.

நடுகை
நடுதல், நடுவேயுள்ள கை.

நடுங்கல்
பயப்படல், நடும்படியான கல்

நந்தனம்
பூந்தோட்டம், நம்முடைய தனம்.

நல்லதனம்
சிநேகத்தன்மை, நல்ல திரவியம்

நல்லம்மான்
தாயின் சகோதரன், கருப்புமான்.

நல்லவேளை
ஒரு பச்சிலைப் பூடு, நற்சமயம்.

நல்லவை
மேன்மையானவை, நல்ல சபை.

நல்லான்
நற்குணமுடையவன், நல்லபசு.

நல்லூர்
ஓரூர், நல்ல ஊர்.

நவநீதம்
வெண்ணெய், புதிய நீதி.

நன்குடையார்
நல்ல குடையையுடையவர், நன்மை யாகவுடையவர் (நன்கு + உடையார்.

நன்குறிஞ்சி
நல்ல குறிஞ்சி நிலம் (நல் + குறிஞ்சி), நன்மை பயக்க உறிஞ்சி (நன்கு + உறிஞ்சி).

நாகூரான்
ஓரூரான், நாக்குக் கூர்மையுடையவன்.

நாகையான்
நாகபட்டினத்தான், பேசுவதில் நாவன்மையோடு எழுதுவதிலும் ஆற்றல் மிக்கவன்.

நாங்கள்அருந்தினோம்
நாம் கள்ளைக் குடித்தோம், நாங்கள் உண்டோம்.

நாட்டினான்
நாட்டிலுள்ளவன், நாட்டையுடையவன், நிலை நிறுத்தினான்.

நாயகம்
நடத்துந்தன்மை தலைமை, நாய் இருக்குமிடம்.

நாயனார்
பெருமையிற் சிறந்தோன், நாயை யொத்தவர்.

நாய்நாக்கி
இலைக்கள்ளிப்பூடு, நாயினது நாக்கையுடையவன்.

நாலடி
சங்கமருவிய நூலிலொன்று, நான்கு அடிகொண்டது.

நாலரை
நாலும் அரையும் கொண்ட எண் (41/2), நாலிலரைப்பாகம் (2).

நாலுமுலை
முலைகள் நான்கு, தொங்குகிற முலை அல்லது முல்லை மலர்.

நால்வாயன்
நான்கு வாயையுடைய பிரமன், விநாயகன்.

நாவலர்
புலவர், அமைச்சர்.

நாவலனல்லன்
நாவலன் நற்குணமுடையவன், நாவில் வல்லமை இல்லாதவன்.

நாவாய்
நாக்குடைய வாய், கப்பல்.

நாவிதன்
நாவால் இதமுறப்பேசுபவன், அம்பட்டன் (நாவால் இனிமையாக நாகசுரத்தில் பாடுபவன்).

நாழிகை
விநாடி அறுபது கொண்டது, (தானியமளக்கும்) படியையுடைய கை.

நானிலம்
நால்வகை நிலம், நான் நிலத்தை.

நானூறு
நாலுநூறு, நான்நூறு.

நான்கல்லாது வாளா இறப்பேனோ
நான் கற்காமல் வீணாகச் சாவேனோ? அறம் பொருள் இன்பம் வீடென்கிற நான்கு பொருள்கள் பெறாது சும்மா உயிர்விடுவேனோ?

நான்மணிமாலை
ஒரு பிரபந்தம், நான் ஒரு மணிமாலையை.

நிராகாரம்
அருபம், உணவின்மை.

நின்மலம்
அழுக்கின்மை, நினது பாவம்.

நின்றாய்
நீ ஓரிடத்தே நின்றனை, நினது தாய்.

நின்னடியார்பணிந்தார்
உமது திருவடியை எவரே பணிந்தனர்? உமது தொண்டர்கள் தொழுதனர்.

நின்னடி யான் பணிந்தேன்
மது தொண்டனாகிய நான் தொழுதேன், உமது திருவடியை நான் தொழுதேன்.

நீகாமன்
மாலுமி, நீ மன்மதனுக்கு நிகரானவன்.

**நீதா**
நீ தருவாய், நீதியையுடையவனே.

**நீரதி**
கடல், நீரதிக்குச் சமானமானவள்.

**நீராகாரம் சாப்பிட்டீரோ**
சோற்றிலூறிய நீரை அருந்தினையோ?
நீர் உணவைப் புசித்தீரோ?.

**நீரிழிவு**
ஒரு நோய், நீர் இழிவான காரியம்.

**நீரிறக்க ஆசுபத்திரி வைத்தியன் யாது செய்வன்**
நீர் சாதற்கு ஆசுபத்திரி வைத்தியன் என்ன செய்வான்? உடம்பிலுள்ள கெட்டநீரை இறக்குவதற்கு ஆசுபத்திரி வைத்தியன் என்ன செய்வான்?

**நீர்நிலை**
தண்ணீரின் மட்டு, நீர் நிலையான காரியம்.

**நீர்வாழைக்காய் உண்டீரோ**
நீர் வாழைக்காய்க் கறியை உண்டீரோ? மீனை உண்டீரோ? (நீர்வாழைக்காய் = மீன்).

**நீர்விளையாடேல்**
(குளத்தின்) தண்ணீரிலே விளையாடாதே, நீங்கள் விளையாடாதேயுங்கள்.

**நீலகண்டன்**
துரிசு, சிவன்.

**நுங்கைவெட்டுவான்**
பனையினிளங்காயை வெட்டுவான், நுமது கையை வெட்டுவான்.

**நூற்றாறு**
நூனாழிகை (நாடா), நூறோடு ஆறுகொண்ட எண்.

**நெல்லூர்**
வடக்கேயுள்ள ஓர் ஊர், நெற்கழனி மிகுந்த ஊர்.

**பகங்கதிர்**
பயிரினிளங்கதிர், குளிர்மையான கிரணங்களையுடைய சந்திரன்.

**பசுங்கால்**
பசிய நிறமுடைய கால், தென்றல் (பசுமை + கால்).

**பசுநரம்பு**
பசுவின் தேகத்திலுள்ள நரம்பு, பச்சைநிற நரம்பு.

**பச்சையுடம்பு**
பலமில்லாத உடம்பு, பச்சைநிறமுடைய உடம்பு

**பஞ்சாயுதம்**
திருமாலினாயுதங்கள், பஞ்சினாலாகிய ஆயுதம்.

**படியாள்**
கணவனுக்கு அடங்கி வாழமாட்டாள், வாசிக்கமாட்டாள், கூலிக்குப் பயிரிடும் ஆள்.

**படையான்**
சிஷ்ருடிக்கமாட்டான், சேனையை யுடையவன்.

**பட்டமங்கை**
ஒரு சிவஸ்தலம் (திருவிளையா- புரா-அட்டமா. உபதேச. 9), இராஜனின் மனைவி.

**பணியாரமும்**
அப்பவருக்கத்தொன்றும், சர்ப்பத்தாலாய மாலையும், ஆபரணமாகிய மாலையும்.

**பதார்த்தம்**
கறிவகை, பதத்துக்குப் பொருள்.

**பதினேழேகால்**
பதினேழும் காலும் கொண்ட எண் (17 1/4), நான்கேகால் (4 1/4), கால்கள் நான்கேயாகும்.

**பத்தியக்காரி**
சிறுகீரை, பத்தியம் காப்பவள்.

**பத்தினியாகிலும் தருவானோ**
பத்தாகிய பொருளை இதற்குப் பிறகாகிலும் கொடுப்பானோ? பத்தியை இந்தத் தற்பரைமுதற் கொண்டாகிலும் (கடவுளிடத்துச்) செலுத்தாதிருப்பானோ? பத்து-பக்தி (உ-ம்.) 'பத்துடை அடியவர்க்கெளியன்' (திருவா-மொழி), அவனுக்கு உரியவளான மனைவியையாகிலும் இதன்பிறகாகிலும் கொடுப்பானோ?

**பரத்தை**
வேசி, மேலுலகத்தை.

**பருக்கை**
சோறு, பருவையுடைய கை.

**பலகை**
கற்பலகை, பல கைகள் அல்லது மனிதர்.

பலதானம்
அநேக தானங்கள், கருப்பதானம் nuptial.

பலராமன்
புஜபலமுள்ள ஸ்ரீராமன், கிருஷ்ணமூர்த்தியின் தமையன்.

பல்லவர்
பலர், பல்லவ மன்னர்.

பல்லாண்டு
பல வருஷங்கள், பல் முளைக்கும் வருஷம்.

பல்வினர்
சதுரக்கள்ளி, பல்லையுடையவர்.

பழங்கண்
மெலிவு, பழைய கண்.

பழங்கள்
பழமையான கள், கனிகள்.

பழமலை
விருத்தாசலம், பழம் (மிகுதியாயுள்ள) மலை, பழத்தாலாகிய மலை.

பழமொழி
பழமையான சொல், பழச்சுவையையொத்த சொல்.

பழவடியார்
வழித்தொண்டர், (கையில்) பழத்தையுடைய அடியார்.

பள்ளாடு
ஒரு வெள்ளாடு, பள்ளச்சாதியான் வளர்த்த ஆடு.

பறந்தலை
(நாலுதிக்குகளிலும்) பறந்து திரி, சுடுகாடு, போர்க்களம்.

பன்னகம்
பாம்பு, பல மலைகள், பலமரங்கள் (நகம்-மலை, மரம்).

பன்னாகம்
துளசி, பல்லையுடைய நாகம்.

பாகனார்
ஊர்தியைச் செலுத்துபவர், சர்க்கரைபோலுமினிய சொல்லை யுடையவர்.

பாடகம்
பெண்கள் காலணியிலொன்று, பாடுகின்ற இடம் (பாடு + அகம்).

பாடைகுலைத்தான்
பாடையைச் சிதைத்தவன், பாகற்கொடி.

பாடைக்குத்தோள்கொடுத்தேன்
(ஒப்புயர்வில்லாத) தாய்மொழியின் பொருட்டுத் துணைசெய்தேன், (பிணம் வைத்த) பாடையைத் தூக்க எனது தோளைக்கொடுத்தேன் 'தீவினை தொலைய வேசியின் பாடைக்குத் தோள்கொடுத்தேன்'

பாம்புகண்டசித்தன்
கரடி, பாம்பைக் கண்ட சித்தன்.

பாம்புக்கண்ணி
பாம்புபோலுங் கொடிய பார்வையுடையவள், சங்கங்குப்பிப்பூடு, பாம்பு போன்ற குணத்தாளுக்கு அண்ணி.

பாம்புதின்னி
முண்ணாயகிச்செடி, பாம்பைத் தின்னும் பிராணி.

பாயசம்
இன்சுவைத்தாய ஒரு பானவகை, பாய்கிற ஆடு (அசம்-ஆடு).

பாரிசாதம்
ஐந்தருவினொன்று, பாரி என்னும் வள்ளலளித்த சோறு.

பாரியாள்
மனைவி, பருத்த ஆள்.

பார்த்தசாரதி
கண்ட தேர்ப்பாகன், அருச்சுனன் சாரதியான ஸ்ரீகிருஷ்ணன்.

பார்வையான்
நோக்கையுடையவன், பூமிமீது வைக்கமாட்டான்.

பாலனம்
காத்தல், பாற்சோறு, பாலைப்பருகும் அன்னப்புள்.

பாலாடை
பாலிற்பிடிக்குமாடை, பால்போலும் நிறத்தையுடைய துணி.

பாலைக்கிழத்தி
துர்க்கை, பாலையுடைய மனைவி.

பால்மாறுதல்
சோம்பலாயிருத்தல், பால் மற்றொன்றாக வேறுபடுதல்.

பாவியாள்
(ஒன்றைப்) பாவிக்கமாட்டாள் பாவத்தைச் செய்த ஆள்.

பிடியாள்
பிடிக்கமாட்டாள், பிடியளவுடைய ஆள்.

பிணிமுகமுடையான்
நோய் கொண்ட முகத்தையுடையவன், மயிலை வாகனமாகவுடைய முருகன்.

பின்னாக்கு
என்ணெய் கக்கின எள்ளின்கட்டி, பிளவாகிய நாக்கையுடைய பாம்பு.

பிரேதராட்சஸி
துளசி, பிணத்தைத் தின்னுகிற அரக்கி.

பிள்ளைக்கறியாதுசெய்தான்?
பிள்ளைக்கறியை என்ன செய்தான்? பிள்ளைக்கு அறியாமல் செய்தான்.

பிள்ளையார்
விநாயகர், குமாரன் யாவனேயாவன்.

பின்னவன்
தனக்குப் பிறகு பிறந்தவன், பிறகு அந்த மனிதன்.

பின்னைகேள்வன்
லக்ஷ்மியின் கணவனான நாராயணன், (ஒருத்தி தன்னை மணந்தவனுக்குப்) பிறகு தேடிக்கொண்ட புருஷன் 'இந்திராணி பின்னைகேள்வன் பொற்பதமுற்றாள்.'

பீதலம்
பித்தளை, மலமிருக்குமிடம்.

பீமரம்
யுத்தம், பீயாலாகிய மரம்.

பீவரி
பசு, பருவப்பெண், பெண்கிளி, துரைத்தனத்தார் மலத்துக்கு வாங்கும் தீர்வை.

பீவரை
பருத்தவன், பீயாலாகிய மலை.

பீவை
நீர் the water, மலத்தை ஓரிடத்தில் வை.

புதுச்சேரி
புதுவைநகர், புதிய ஊர்.

புதுமை
நூதனம், புதிய மை.

புத்தியில்லாதவன்
அறிவு இல்லாதவன், அறிவில் நவவி யாகரணப் பண்டிதனான சூரியனை யொத்தவன் (புத்தியில் + ஆதவன்.).

புரந்தனை
சரீரத்தை, இரட்சித்தாய்.

புருடராகம்
நவமணியிலொன்று, ஆணுக்குரிய இசை.

புலியூர்
சிதம்பரம், புலிவாழ்கிற ஊர்.

புல்லாங்குழல்
ஒருதுகுழல், புல்போன்ற (பெண்ணின்) மயிர், புல்லாலாகிய மயிர்.

புழுக்கை
அடிமை, புழுவையுடைய கையினன்.

புளிமா
புளிப்புள்ள மாமரம், புளித்த மா.

புற்கை
(சினையாகுபெயர்) சோறு, அற்பத்தையுடைமை, புல்லையுடைய கை.

புனலிறை
நீரை இறை, வருணன்.

பூசனம்
பூசை, மன்தலத்தார்.

பூசாபலன்
பூசையின் பலன், வாடிய பூவின்பலன்.

பூசிலன்
தேவன், சந்தன முதலியவற்றைப் பூசவில்லை.

பூதவம்
ஆலமரம், மருதமரம், பூதலம் செய்த தவம்.

பூதவேசி
வெண்ணொச்சில், பூதக்கூட்டத்துக்கு வேசி.

பூதை
அம்பு, பூக்கொண்டு தை.

பூத்தானம்
அருமைபண்ணல், பூவாலலங்கரித்த இடம்.

பூபாலன்
அரசன், வேளாளன் (பூ = பூமி, பாலன் = காப்பாற்றுபவன். இங்குப் பூமி மீதுள்ளாரை: பூ - பூமியில் விளையும் பயிர்), பூவாலாகிய குழந்தை.

பூமகள், பூமாது
இலட்சுமி, பூவால்செய்த பெண்.

பூமான்
அரசன், புருஷன், பூவாலாகிய மான்.

பூவிலான்
மலரை இல்லாதவன், பூக்கள் கொண்டு எய்யும் வில்லையுடைய மன்மதன்.

பூவை
பெண், நாகணவாய்ப்புள், மலரை, மலரை வை.

பூவையாள்
பெண், பூவைக்குழலிலணியாள்.

பூவையான்
காயாம்பூ மேனியனான ஸ்ரீ கிருஷ்ணன், மலரை (கூந்தலில்) வையான், பூமிமீது (உயிரோடு) வைக்கமாட்டான்.

பூனைக்கண்ணன்
பூனையின் கண்களையுடையவன், புட்பராகத்தை யணிந்தவன்.

பூனைக்காலி
ஒரு செடி, அரவமிடாது மெதுவாக நடப்பவள்.

பெண்ணவன்
ஆண்மையுடையவன் (பெண் + அல்லன்), பெண்ணாலுண்டாகுமின்பம் (பெண் + நலன்).

பெண்ணாய்
பெண்நாய் bitch, பெண்பிறவியெய்தி.

பெண்ணை
பனைமரம், அநுடநாள், ஓர் யாறு, சிறுமியை.

பெண்ணைக்கண்டாடினேன்
பெண்ணையாற்றைக் கண்டு குளித்தேன், மாதொருத்தியைப் பார்த்து மருவினேன்.

பெரியதனம்
பெருந்தன்மை, பெண்ணின் பெரியமார்பகம், மிகுந்த திரவியம்.

பெருங்காயம்
ஒரு மருந்து, பருத்த உடல், பலத்த காயம் serious wound.

பெருஞ்செருப்படி
ஒருமருந்துப்பூடு, பெரிய செருப்பாலே (தாக்கிய) அடி.

பெருமான்
பெருமையிற் சிறந்தோன், பெரிய மான்.

பெரும்பாடு
தீட்டுதிரப்பெருக்கு, கடினமான வேலை 'வயிறு வளர்க்க அரும்பாடு பெரும்பாடு படுகிறாள்'.

பெருவியாதி
குஷ்டம், பெரிய நோய்.

பேசாமை
மோனம், பேசுகிற ஆமை.

பேடிகை
கூடை, பேடியினுடைய கை.

பேய்க்குமட்டி
ஒரு கொடி, பிசாசுக்கும் கேவலமான புத்தியுடையவன்.

பேராசை
மிக்க ஆசை, பெயருக்கு மட்டும் ஆசை.

பேரானை
பெயருடையவனை, இடம் விட்டு நீங்காதவனை, பெரிய யானை.

பேரின்பம்
முத்தி, பெயருக்கு அல்லது பெருமைக்குமட்டும் இன்பம்.

பேரூர்
மேலைச்சிதம்பரம், (ஒருவனது) பேரும் ஊரும்.

பையுள்
சிறுமை, துன்பம், பைக்குள் in the bag.

பொதியில்
பொதிய மலை, மூட்டையில், சபை, திணிக்கில்.

பொதுவில்
அம்பலம், மத்தியஸ்தமாக

பொய்கை
குளம், கோட்டான், போலியான கை.

**பொய்கையார்**
ஒரு தமிழ்ப்புலவர், செய்கையா லமைத்த கையையுடையவர், குளத்தில் தோன்றியவர், குளத்தையுடையவர்.

**பொய்யாமை**
பொய்மொழி கூறாமை, போலியான ஆமை.

**பொருளில்பெரியன்**
(கையிலுள்ள) செல்வத்தால் மிகுந்தவன், பொருளில்லாத பெருங்குணத்தான் 'விபசாரியின் சொத்துக்குக் கொடிகட்டிவந்த தசரதனும் பொருளில் பெரியவனாவானோ'.

**பொன்னன்**
பொன்னையுடையவன், திருமகள்கேள்வன், வியாழன்

**பொன்னிலம்**
தேவலோகம், பொன்னையுடையராயில்லோம்.

**பொன்னேரி**
சென்னையையடுத்த ஒரூர். இலக்குமியென்னு மழகியை மனைவியாகவுடையவனாய்.

**போசனப்பிரியன்**
மிகுதியாய்த் தின்பவன், போகும் ஜனத்தின்மீது பிரியமுடையவன்.

**மகராசன்**
பாக்கியவான், யாகத்தில் அல்லது மக நட்சத்திரத்தில் பிறந்த மன்னன்.

**மகராசி**
பாக்கியவதி, மகமென்னும் ராசி.

**மகாகர்வம்**
பத்திலட்சங்கோடி, மிக்க செருக்கு.

**மகாபகை**
பெரும்பகை, பெரிய நதி (ஆபகை-நதி).

**மச்சிகை**
மோர், மச்சுளியின் கை.

**மடியில்லான்**
சோம்பலில்லாதவன் (மடி-சோம்பல்), வஸ்திரம் இல்லாதவன், முலை மேற்றிரள் இல்லாத பசு (மடி + இல் + ஆன்), கூடாரத்திலேயுள்ள பசு (மடியில் - கூடாரம்) (சேதுபுராணம்).

**மணமகன்**
கலியாண மாப்பிள்ளை, வாசனைவீசும் மேனியுடைய மகன்.

**மணலை**
ஒரு மீன், மணல் என்பதன் இரண்டாம்வேற்றுமை.

**மணாளன்**
கணவன், மன்னை ஆள்பவன்.

**மணிமான்**
சூரியன், மணிகட்டியுள்ள மான்.

**மண்ணுடையான்**
அரசன், குயவன்.

**மதனாலயம்**
குய்யம், அழகிய கோயில்.

**மதிமகன்**
அறிவுடைய புதல்வன், புதன்.

**மதியாதவன்**
மதிக்கமாட்டாதவன், அறிவுடைய யாதவன் (யாதவன் யதுகுலத்தவன்).

**மதுகை**
வலி, தேன் அல்லது கள் ஒழுகுகிற கரம்.

**மயிர்க்கொன்றை**
ஒரு பூமரம், மயிர்க்கு ஒருபொருளை, மயிர் மீது வைத்த கொன்றைமலர்.

**மயிலை**
மயிலாப்பூர், இருவாட்சி மரம், ஒரு மீன், மயிற்பட்சியை.

**மரக்கலம்**
கப்பல், மரத்தினாலாகிய பாத்திரம்.

**மரக்கால்**
எட்டுப்படி கொண்டது, மரத்தினாலாகிய கால்.

**மரியம்மாள்**
இயேசுநாதரின் தாயார், இறந்த அன்னையார்.

**மரியாள்**
இயேசுவின் தாயார், சாகமாட்டாள், செத்த மனிதன்.

**மருமகள்**
மகனின் மனைவி, மருவுகிற (சேர்கிற) மகள், வாசனைவீசும் மேனியுடைய மகள்.

மருமகன்
மகளின் கணவன், குற்றமுடைய மகன், அணைகிற மகன், மருவணிந்த மகன்.

மருமான்
மருமகன், மகன், மருவணிந்த மான்.

மருவாடுவதேன்
(என்னைக்) கலப்பாய், நீ ஏன் வருத்தமுற்றிருக்கின்றனை? மரு வென்னும் வாசனையையுடைய பூவேர் ஏன் வாடியிருக்கிறது?

மலைத்தேன்
தடுமாறினேன், மயங்கினேன், போர்புரிந்தேன், மலைமீது (தேனீக்கள் சேர்த்துவைத்த) தேன்.

மலைமகள்
பருவதராஜன் புத்திரி, எதிர்த்த பெண்.

மறந்திகழ்
வீரம் பொலிகின்ற (மறம் + திகழ்), மறதியுற்று நிந்தனைபேசு (மறந்து + இகழ்).

மறுகை
நுங்கு, மற்றப்பக்கம், பிறிதொரு கை.

மறைவிடம்
மறைவான இடம், மறைந்துள்ள நஞ்சு, விஷத்தை மறை.

மன்றாடினான்
இரந்துகேட்டான், கனகசபையி லாடிய சிவன்.

மாகாணி
பதினாறி லொரு பங்கு (1/16), முடிமன்னரும் அடங்குமிடம்.

மாகாளி
மகத்துவமுடைய காளிகாதேவி, களாவிழுது, மாவலிக்கிழங்கு.

மாண்டார்
இறந்தார், மாட்சிமையுடையோர், மாட்சிமையுடைய மாலை.

மாதங்கத்தானை
மாதைத் தனது திருமேனியி லுடைய சிவனை (மாது + அங்கத்தானை), யானைகளோடு கூடிய சேனை (மாதங்கம் + தானை), சிறந்த பொன்மயமான ஆடை (மா + தங்கம் + தானை).

மாதங்கமலையேந்தி
பெரிய பொன்மலையாகிற மேருகிரியைத் திருக்கரத் தேந்தின சிவபிரான் (மா + தங்கமலை + ஏந்தி), (மணிமேகலை யென்கிற) தவமாது அங்குச் சோற்றைக் கையிலேந்தி (மாது + அங்கு + அமலை + ஏந்தி).

மாதங்கர்
உமாமகேசுரர்(மாது + அங்கர்), சண்டாளர்.

மாதூரம்
மகளிர்சூதகம், மாத அளவிலேற் படும் தூரம்.

மாதம்பத்தில் தோன்றினார்
பத்து மாதங்கொண்ட காலத்தில் பிறந்தார், பெருமை பொருந்திய தூணிலே திருவவதாரஞ் செய்த நரசிம்ம மூர்த்தி.

மாதரைநட்டான்
பெண்களை நேசித்தான், பெரிய பூதலத்துள்ளாரை நேசித்தான், பெரிய பூமிமீது (மரத்தை) நடுவித்தான்.

மாதவம்
கள், வைகாசி மாதம், வசந்தகாலம், பெருந்தவம்.

மாதவன்
பெருந் தவத்தினையுடையவன், வசந்தன், லக்ஷ்மியை மார்பகத்தே யுடைய மகாவிஷ்ணு.

மாதவிடாய்
மாதத்தீட்டு menstruation, மாதத்திலேற்படும் தாகம்.

மாதா
அன்னை, மாவைக்கொடு, குதிரையைத் தா.

மாதுபாகத்தான்
புட்பராகத்தையுடையவன், மாதை ஒரு பக்கலில் வைத்த சிவன்.

மாதுளம்
மாதளை, மாதினுடைய மனம்

மாப்பிள்ளை
மணஞ்செய்து கொண்டவன், மாவாற்செய்த பிள்ளை.

மாமனைக்கொன்றார்
மாதுலனான கம்சனைக் கொன்ற ஸ்ரீகிருஷ்ணன், அழகிய வீட்டிடத்தே சேரமாட்டார் (மா + மனைக்கு + ஒன்றார்).

மாமன்
மாதுலன், பெரிய அரசன், குதிரைக் கிறைவனான நகுலன்.

மாயாதவர்
மரணமடையாதவர், இறவாத தவபுருஷர், மாயவனே! முனிவர்கள்.

மாயாபுரி
சத்தபுரியி லொன்றாகிய அரித்துவாரம், மாயாத சரீரம் (புரி-சரீரம்), பித்தளை.

மாரணம்
சாவு, பெரிய புண்.

மால்தொடை
திருமாலின் தொடை, துளசி.

மாவெட்டு
அஷ்ட கஜங்கள், மாமரத்தை வெட்டு, குதிரையைப் (பட்டாக்கத்தியால்) வெட்டு.

மாற்றான்
பகைவன், ஒரு பொருளைப் பிறிதொரு பொருளாக மாற்றமாட்டான்.

மானத்து
மானத்தால் (மானம்-வெட்கம்), பெரிய சங்கு (நத்து-சங்கு).

மானாகம்
மானின் உடல், மயக்கத்தை யுண்டுபண்ணுஞ் சர்ப்பம் (மால் + நாகம்), பெரிய புன்னைமரம், பெருமை பொருந்தியசுவர்க்கம் (மா + நாகம்).

மானிடவர்
மனிதர், மானை இடப்புறத்தேயுடைய சிவனார்.

மீனாட்சி
பொன்னாங்காணிக்கீரை [கண்களுக்கு நன்மையைத் தருவது], அங்கயற்கண்ணம்மையார்.

முக்கணன்
திரிநேத்திரமுடைய சிவன், உன்னுகிற அன்னன் (முக்கு + அன்னன்).

முக்கால்
நாலில் மூன்று பங்கு (3/4), மூன்று கால்கள், மூன்றாவது கால்.

முக்கோல்
திருவோண நட்சத்திரம், சன்னியாசிக்குரிய திரிதண்டம்.

முடியாதவன்
(காரியத்தை) நிறைவேற்றாதவன், முடியையுடைய யாதவன்.

முடிவிடம்
முடியுமிடம், தலையில் விஷம்.

முட்டாள்
மூடன், இடுக்கண்ணுடைய மனிதன் [முட்டு + ஆள்] முள்ளையுடைய அடிப்பாகம் [முள் + தாள்], எதிர்க்கமாட்டாள்.

முட்டைக்கும்
கோழி முதலியவற்றின் முட்டைக்கும், முள் தைக்கும் (தைத்தல்-பொத்துதல்).

முதுகாடு
சுடுகாடு, முதுகின் பக்கமானது அசைகிற.

மும்மரம்
உக்கிரம், மூன்று மரங்கள்.

முயலாமை
முயற்சி செய்யாதிருத்தல், முயலும் ஆமையும்.

முயல்வார்
முயற்சிசெய்வார், யோகியர், முயல்தோலின் வார்.

முள்ளங்கி
ஒரு கிழங்கு, முள்ளாலான அங்கி (அங்கி-சட்டை), முள்ளையுடைய அங்கத்தையுடையது (முள்ளம்பன்றி).

முனிந்துரை
வெந்தயச்செடி, சினமுற்றுக் கூறு.

முன்பிறந்தாள்
அக்காள், முன்பு இறந்தாள்

முன்னடி
முன்னதாக, முன்னங்கால்.

மூக்கிரட்டை
ஒரு பூடு, இரண்டு மூக்குகள்.

மூன்றரை
மூன்றுடன் அரையும் சேர்ந்த எண் (3 1/2). மூன்றில் அரைப்பங்கு கொண்டது (1 1/2).

மெய்க்கவசம் உடம்பின்மீது பாதுகாப்புக்காக அணியும் இரும்பு முதலியவற்றாலாய சட்டை (மெய் + கவசம்), உடம்பிற்கு மயக்கம் (மெய்க்கு + அவசம்).

மெல்லியாள்
பெண், மெலிந்த ஆள்.

மேகவாயு
ஒரு நோய், மேகத்தோடெழுந்த காற்று.

மேலூர்
மேற்கேயுள்ள ஊர், ஆகாயத்தேயுள்ள ஊர்.

மேற்கத்தியானை
மேற்குத்தேயத்தானை, மேற்குத்தேயத்துள்ள யானை (மேற்கத்து + யானை).

மேனாடு
பொன்னாங்காணி, மேலேயுள்ள உலகம் (மேல் + நாடு), மேலைப்பக்கமாகத் தேடு.

மேன்மக்கள்
அறிவிற் பெரியார், மேலிடத்தே வசிக்கிற மக்கள்.

மொய்கதிர்
முலை, அடர்ந்த கதிர்.

யாதவன்செய்தான் (ஒரு காரியத்தை) யதுகுலத்தவன் ஒருவன் செய்தான், என்ன காரியம் அவன் செய்தான்?

ராமன்
ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி (யாவரையும் ரமிக்கச் செய்பவன்), இராத்திரிக்கு இறைவனான சந்திரன்.

ராவணன்
ஸ்ரீராமரால் கொலையுண்ட இலங்கைமன்னன், இராத்திரி நிறமுள்ள மன்மதன் அல்லது தசக்கிரீவன்.

வச்சிரதுண்டம்
வயிரமணியின் துண்டு, கருடன், கொக்கு.

வஞ்சியாள்
வஞ்சிக்கமாட்டாள், கருரிலிருக்கும் ஆள்.

வடமலை
வடக்கேயுள்ள திருவேங்கடமலை, முத்துவடம் அசைகிற.

வட்டிகை
பந்தயப்பொருள், கூடை, எழுது கோல், வட்டி வாங்குகிற கை.

வணங்கரியார்
திருமேனி நிறங் கருமையுடையவர் (வண்ணம் + கரியார்), வணங்குதற்கு அருமையானவர்.

வன்னத்தான்
நிறத்தையுடையவன், வன்மையுடைய சங்கை அணிந்த திருமால் (வல் + நத்தான்).

வண்ணாத்தி
வண்ணாரப்பெண், வளம்பொருந்திய ஆத்திமரம்.

வம்புத்தனம்
துர்மார்க்கம், வம்பை விளைவிக்கும் பொருள் 'வியசாரி தேடிய வம்புத்தனம் மேன்மையடையாது', கச்சணிந்த மார்பகம் 'வம்புத்தனத்து இந்திராணிக்கு வெம்பியமுதான் ஒரு பாவி'.

வரபலம்
வரத்தாலேற்பட்ட வலிமை, தென்னமரம்.

வல்லாரை
ஒரு கீரை, கேட்டை நாள், சமர்த்துடையாரை.

வல்லான்
சமர்த்தன், வல்லமையுடைய பசு

வள்ளியின்னமுது
வள்ளிக்கிழங்கு, வள்ளியென்பவளளித்த இனிய அமுதம்.

வனசோபனம்
தாமரை, காட்டில் நடக்கும் சுபமான காரியம்.

வாணிச்சிமேனி
மாணிக்கம், வாணியப்பெண்ணின் நிறம்.

**வாணியன்**
ஒரு சாதியான், சரஸ்வதியை மனைவியாக உடையவனான பிரமன்.

**வாயிலோன்**
வாயில்காப்பவன், பேசமாட்டாதவன்.

**வாராநிதி**
கடல், வாராத்திரவியம்.

**வாலாமை**
அசுத்தம், வாலுடைய ஆமை.

**வாலிகை**
மணல், வாலியின் கை.

**வாலிபம்**
இளவயது, வாலையுடைய யானை.

**வாளரி**
சிங்கம், வாளையேந்தின திருமால்.

**வானரன்**
குரங்குகளுக்கு மன்னனான சுக்கிரீவன், வாலையுடைய மனிதன், பெருமையுடைய மனிதன், வெண்மை நிறமுடைய மனிதன், (வால் = வால், பெருமை, வெண்மை).

**வான்மீன்**
பெரிய மீன், நட்சத்திரங்கள.

**விதிக்கு**
கோணத்திசை, வினைப்பயனுக்கு, பிரமாவுக்கு.

**விருந்திலோர்**
அதிதிகளை (guests) இல்லாதவர், அதிதியை வீட்டிலுடையவர், புதுமை இல்லாதவர், புதுமையான வீட்டையுடையவர்.

**விளக்குமாறு**
துடைப்பம், தெளிவிக்கும் வழி அல்லது வகை "விளக்குமாற்றால் விளக்கினான்".

**விற்போர்**
விற்பனைசெய்பவர், வில்லான்மைப்போர்.

**வீமன்**
பாண்டவரு ளொருவன், கருடனுக்கிறைவனான திருமால்.

**வெகுமதி**
சம்மானம், பேரறிவு.

**வெகுமானம்**
சம்மானம், மிக்க வெட்கம்.

**வெங்காயம்**
ஈருள்ளி onion, கொடிதாகிய உடம்பு (வெம்மை + காயம்) "வெங்காயம் சுக்கானால்" (தனிப்பாடல்).

**வெட்டுவாள்**
ஒரு வாள், (ஒரு கருவிகொண்டு) தறிப்பாள்.

**வெண்மை**
அறிவின்மை, வெள்ளை நிறமுடைய மை.

**வெந்தயத்தால்**
கறிக்கிடுமொரு சரக்கால், வெய்ய வினையால் (அயம்-வினை).

**வெந்நீரளித்தால்**
முதுகை(நீ) காட்டினால் (வெந்நீர்-முதுகு), வெப்பமான நீரைத் தந்தால் (வெந்நீர் - வெந்தநீர்).

**வெவ்விடரினீங்கி**
கொடிய தீவினையினின்றும் விலகி (வெம்மை + இடரின் + நீங்கி), கொடியமலைப் பிளப்பினின்று மகன்று (விடர்-மலைப்பிளப்பு).

**வெளியார்**
பந்துக்களல்லாத புறத்தினர், அறியாமையுடையவர் (வெண்மை-அறியாமை).

**வெள்ளாளன்**
உழுது பயிரிடுபவன், வெண்மையாகிய பாற்கடலை யுடையவனான திருமால்.

**வெள்ளியகல்**
வெண்மை நிறமுடைய கல், வெள்ளியாலாகிய அகல்.

**வெள்ளையன்**
வெண்மை நிறத்தினன், ஆழ்ந்த கருத்தில்லாதவன் (வெண்மை அறியாமை).

**வெற்றிலை**
தாம்பூலம், வெறு இலை.

**வேங்கை**
ஒரு மிருகம், ஒரு மரம், வேகின்ற கை.

**வேங்கைக்கோடு**
வேங்கை மரத்தின் கொம்பு, வேங்கைப் புலிமீதுள்ள வரி, வேங்கையின் பொருட்டு ஓடுவாய்.

**வேசிகை**
வாயில், வேசியின் கை.

**வேட்கை**
ஆசை, மன்மதனின் கை (வேள் + கை).

**வேதகந்தரத்து முக்கண்ணன்**
பிரமன்தலை தரித்த சிவன், வேதமாகிய குகைக்குள்ளுறையுஞ் சிவன்.

**வேதங்கணால்வளரும்**
வேதங்கள் நான்கும் விருத்தியாகும் (வேதங்கள் + நால் + வளரும்), மூங்கில்மரங்கள் தமது கணுக்களால் வளர்ச்சியடையும் (வேய் + தம் + கண்ணால் + வளரும்).

**வேதனுக்கு மைந்தன்**
பிரமாவின் புத்திரன், (திருநெல்வேலியிலோர்) மூங்கிலிற்றோன்றிய சிவபிரான், வேவு அல்லது தூதுபேசுபவனுக்குப் புத்திரன்.

**வேதனையளித்தான்**
வருத்தத்தை உண்டாக்கினான் (வேதனை - வருத்தம்), பிரமாவை உந்திக்கமலத்தில் படைத்த ஸ்ரீ மந் நாராயணன் (வேதன் - பிரமன்).

**வேதாவினால்**
பிரமனால் (வேதா-பிரமன்), மூங்கில்மரமொன்று பிறிதொரு மரத்தோடு தாவினால்.

**வேரகம்**
வேரினிடம், கருப்பூரம்.

**வேள்விக்கினமாற்றும்**
யாகத்துக்கு இனமானதை மாற்றச்செய்யும், யாகத்துக்கு இனமானதைச் செய்யும், மன்மதனாலுண்டான தீங்கை ஒழிக்கும், மன்மதனானவன் (மக்களுக்குத்) தீங்கைச் செய்யும் (ஆற்றுதல் - செய்தல்).

**வேறுபாடு**
வேற்றுமை, மற்றையதொழில், மற்றொன்று பாடு.

**வேற்றுமணாளன்**
அன்னிய புருஷன், அயல்நிலத்தை ஆள்பவன்.

**வைகுந்தர்**
வைகுண்டபதவியளிக்குந் திருமால், கூர்மையுடைய குந்தமென்னும் ஆயுதத்தை யுடையவர் (வை - கூர்மை).

**வைகை**
மதுரையிலோடும் ஒரு யாறு, வை (நினது) கையை.

**வைசூரி**
அம்மைநோய், கூரிய மடக்குக்கத்தி.

# List of words that are used as Nouns and Verbs

## பெயரும் வினையுமாக வழங்கிவருகின்ற தமிழ்ச்சொற்கள்

அசி

அவமதிச்சிரிப்பு, வாள், மிருகவதை செய்வதிற் பிரயோகிக்கப்படும் ஆயுதம். (வி) நகை 'அசிப்பபோன்று' (சிந்தா. நாந்த. 167); பரிகாசம் பண்ணு 'முசுக்கள் போலொளித் திருந்த முநிவராவி தன்னையும் - அசிக்க வீரன்விட்ட சூலமள்ளிமள்ளி யுண்டதே' (அருணாசலபு. திருவவ. 22).

அசை

அசைநிலை, இசைப்பிரிவு accent, செய்யுளுறுப்பாறனு ளொன்று. (வி) ஆடு, கட்டு, ஓசையெடு, தள்ளாடு, உலாவு, கலங்கு, சஞ்சரி.

அஞ்சு

ஐந்து (வி) பயப்படு.

அடர்

செறிவு, தகடு, (வி) நெருங்கு, போர்புரி.

அடி

கால், பாதம், ஆதி, மரத்தினடி, வமிசவழி, 12 அங்குலங் கொண்ட ஓரளவு, கீழ், (வி) அறை, மோது, கொல்லு.

அடை

அப்பவருக்கத்து ளொன்று, இலை, கனம், சும்மாடு, கரை, அடைமொழி அல்லது விசேடணம். (வி) சேர், பெறு, சரண்புகு.

அணங்கு

தெய்வப்பெண், பெண், அழகு, ஆசை, வருத்தம், நோய், கொலை, அச்சம், தேவர்க்காடுங் கூத்து. (வி) கொல், அஞ்சு, வருத்து, விரும்பு.

அணி

அலங்காரம், ஆபரணம், அழகு, படைவகுப்பு, மாலை, நிரை, அணியிலக்கண நூல். (வி) பூண், அலங்கரி, தரி.

அணை

வரம்பு, மெத்தை, அணைக்கட்டு. (வி) சேர், சார், புணர்.

அண்ணா

உண்ணாக்கு noula, அண்ணன் என்பதின் விளிவேற்றுமை. (வி) நிமிர்ந்து நில் (உ-ம்.) 'அண்ணாந்த வனமுலை' (கல். 28).

அத்து

சிவப்பு, செவ்வை, அரைப்பட்டிகை, எல்லை. (வி) மருந்தொற்று (உ-ம்.) மருந்தைக் காயத்தின்மேலத்தி வைத்தான், சார் அல்லது துணைப்பற்று (உ-ம்.) என் தோளை யத்திக்கொண்டு வரலாகாதா?

அநுபவி

ஞானி. (வி) ஐம்பொறியால் நுகர்.

அநுமதி

சம்மதி. (வி) சம்மதஞ் செய்.

அந்தி

மாலைக்காலம், இரா, முச்தெருக் கூடுமிடம், சூரியாஸ்தமனத்தில் தோன்றும் செவ்வானம், தில்லைமரம், முடிவு. (வி) பொருந்து, சந்தி.

அப்பி

அக்காள். (வி) பூசி, கௌவி.

அப்பு

நீர், கடல் அம்பு. (வி) ஒற்று, பூசு, கௌ.

அமர்

போர், விருப்பம். (வி) உட்காரு, அடங்கு, பொருந்து

அமை

மூங்கில். (வி) அடங்கு, நிறைவுறு, பொருந்து.

அயர்

வாட்டம். (வி) உணர் வழி, தளர்.

அயிர்

நுண்மை, சந்தேகம், நுண்மணல், கண்டசருக்கரை. (வி) சந்தேகி, மறை 'உயிரனையா யயிராம லுரை யெனக்கே' (வாண : 303).

அயில்

கூர்மை, வேற்படை, கலப்பை, இரும்பு, கோரைப்புல் (வி) உண்.

அரக்கு

சிவப்பு, ஓர்வகைமெழுகு (வி) அழி, தேய் 'அரக்கனீரைந்து வாயுமலறவே யரக்கி னானடியாலும்' (தேவா - திருவை : 10 திருநாவு).

**அரங்கு**
இடம், அறை, யாற்றிடைக்குறை, நாடகசாலை, சபை. (வி) மனங்கலங்கு 'கோடரங்கிட வெழுங்குவி தடங்கொங்கையார்' (இராமா.பால. எதிர் : 33); அழி 'பிணியரங்க வினையகல' (இராமா. குலமுறைகிள : 2).

**அரி**
மகாவிஷ்ணு, பகை, பகைவன், வாயு, அரிசி, அழகு, ஐம்மை, கண்வரி, செவ்வரி, பன்றி, மூங்கில், வண்டு, கடல், தகடு, சோலை, தேர், உள்ளிடுமணி, பருக்கை, நெற்கதிர், யாழின் நரம்பு, இந்திரன், அக்கினி, யமன், சூரியன், சிங்கம், குதிரை, குரங்கு, கிளி, மயில், தவளை, மரகதம், நெற்கதிர், பொன், மலை, கள், சக்கரம், பச்சைநிறம், சந்திரன், பாம்பு, கூர்மை, அரிப்பிடி. (வி) கத்தி முதலிய ஆயுதங்களாலறு, கொழி.

**அருகு**
சமீபம், ஓரம். (வி) குறை அல்லது சுருங்கு (உ-ம்.) 'அருகலிலாய பெருஞ்சீ ரமரர்கள்' (நாலாயி 1 : 9 : 3).

**அருத்தி**
ஆசை, பாதம், கூத்து. (வி) உண்பித்து.

**அரும்பு**
பூவரும்பு, பொன் முதலியவற்றிற்செய்த அரும்பு, மெல்லிய மயிர். (வி) சிறிதாகத்தோன்று (முகிழ்).

**அரை**
பாதி, இடை. (வி) தேய்.

**அலர்**
மலர்ந்த பூ, நீர், பலரறிந்து பழிதூற்றுகை. (வி) மலர், விரி (உ-ம்.) 'அலர்தலை மாறிலம் புரக்கும்' (நைட-சிறப்பு).

**அலை**
திரை, கடல், கருமணல். (வி) ஆடு, திரி, சோம்பு, தள்ளாடு, வருந்து.

**அவி**
தேவருணவு, சோறு, நெய். (வி) வேகு, கெடு, தணி, வருந்து.

**அவிர்**
பிரகாசம், புல்லு. (வி) பிரகாசி, பீறு.

**அவிழ்**
சோறு. (வி) கட்டவிழ், நெகிழ், மலர், உதிர்.

**அழல்**
நெருப்பு, வெப்பம், நரகம், கேட்டை. (வி) எரி, கோபங்கொள்.

**அழுந்து**
நீராழம், வெற்றிலை நடுவரம்பு. (வி) அமுங்கு, வருந்து.

**அளறு**
சேறு, நரகம். (வி) சிதறிவெடி, பிள, தொனி (இரைச்சலிடு).

**அளி**
வண்டு, மது, கொடை, அருள், அன்பு, எளிமை. (வி) கா, ஈ, கையளி, பங்கிடு, நெருங்கு.

**அளை**
வளை, குழி, தயிர், புற்று. (வி) கல, புரள், குழை.

**அறை**
சொல், வகுத்த இடம், கற்பாறை, எழுத்தினோசை, முழைஞ்சு. (வி) அடி, சொல், ஒலி.

**ஆகுலி**
ஆவிரைச்செடி. (வி) துன்புறு, அழு, ஆரவாரி.

**ஆய்**
தாய், அழகு, இடையராகிய ஆய்ச்சாதி, நுட்பம், வருத்தம், ஒரு வள்ளல். (வி) ஆராய், தெரிந்தெடு.

**ஆர்**
ஆத்திமலர், ஐந்துருவாணி, கூர்மை, நிறைவு, யார், வண்டியிலை, பூமி, அருமை. (வி) பொருந்து, சாப்பிடு, நிறைவுறு, அனுபவி.

**ஆலு**
நீர்க்குடம். (வி) ஆடு, தொங்கு, ஒலி.

**ஆவலி**
ஒழுங்கு, வரிசை. (வி) ஆசைப்படு, புலம்பு, கொட்டாவி விடு.

இகல்
பகை, போர், வலி. (வி) பகை, எதிர், சமர்புரி, மாறுபடு.

இகழ்
நிந்தை. (வி) நிந்தி.

இசை
ஒலி, புகழ், சொல், சங்கீதம், முத்தமிழி லொன்று. (வி) இணை, பொருந்து, உடன்படு.

இடறு
தடை, ஆபத்து. (வி) கால்தடக்கு, மோது, மீறு.

இடார்
இறைகூடை, எலி முதலியன பிடிக்கும் பொறி. (வி) ஈயார், அணியார்.

இடறி
யானை. (வி) காலினாலெற்றி.

இடி
அசனி thunder, உறுதிச் சொல், ஒலி, தினை, அரிசி முதலியவற்றை இடித்தெடுத்தமா. (வி) தூளாக்கு, உடை, வெடி, சரி.

இடுக்கி
குறடு, உலோபி. (வி) அணைத்து, நெருக்கி.

இடுக்கு
சந்து, ஒடுங்கிய இடம். (வி) நெருக்கு, இடுக்கிப்பிடி, குறடு முதலியவற்றா விடுக்கு.

இணங்கி
தோழி. (வி) சம்மதித்து.

இணங்கு
பிசாசம், இணக்கம் 'உள்ளப்பெறாரிணங்கை யொழிவேனோ' (திருப்பு. 288). (வி) உடன்படு.

இணாப்பு
வஞ்சகம். (வி) ஏய்.

இணை
ஒப்பு, இரண்டு, துணைவன். (வி) இசை, பொருந்து.

இமிழ்
ஒலி, கயிறு, இனிமை, பறை. (வி) ஒலி, முழங்கு.

இமை
கண்ணிதழ், இமைப்பொழுது, அற்பம். (வி) இமை கொட்டு.

இயக்கு
அசைவு, செலவு 'நீரியக்கன்ன நிரைசெல னெடுந்தேர்' (மலைபடு-571), (வி) செலுத்து, பழக்கு, நடத்து.

இயங்கு
ஓர் முட்செடி. (வி) நட, உலாவு, அசை, தங்கு.

இரை
உணவு. (வி) ஒலி.

இரைத்து
உப்பிலி, புலித்தொடக்கி, வெண்கலம். (வி) ஒலித்து.

இலகு
இலேசு, நுண்மை. (வி) ஒளிசெய்.

இலக்கு
குறி, குறிப்பு, எண்ணம், ஏது, சமயம். (வி) அடையாளமிடு 'அது தன்னிலிரேகை - யிலக்குக' (சைவச. பொதுவி-274), சொலிப்பி.

இலங்கு
குளம் (வி) ஒளிசெய்.

இவர்
இவர்கள்; அது: பலர் பாற் படர்க்கையிலே அண்மையிடத்தாரைக்கருதுமொரு சுட்டுப்பெயர். (வி) உலாவு, எழும்பு, ஏறு, கல, செல், விரும்பு.

இழை
ஆபரணம், நூல்கயிறு, பஞ்சிநூல். (வி) உட்குழை, கல, உராய்.

இளி
இகழ்ச்சிக்குறிப்பு, இழிவு, யாழினோர் நரம்பு. (வி) பரிகாசஞ்செய், களகளவெனச் சிரி.

இளை
இலக்குமி, இளமை, காவற்காடு, பசு, வேலி, புதனுடைய மனைவி, மேகம். (வி) தளர், மெலி.

இறக்காது
செய்தி. (வி) பெயர்த்துச்செல்லாது, சாகாது.

இறைஞ்சி
மரவுரி. (வி) குனிந்து, வணங்கி.

**ஈட்டி**
குந்தம். (வி) தொகுத்து.

**ஈண்டு**
இவ்விடம், புலித்தொடக்கிச்செடி, இவ்வண்ணம். (வி) நெருங்கு, நிறை, கூடு.

**ஈர்**
ஈர்க்குமரம், ஈரம், நெய்ப்பு, பேன்குஞ்சு, (வி) அறு 'உயிரீரும் வாளது' (வள் - 334), இழு, உரி.

**உஞற்று**
ஊக்கம், முயற்சி. (வி) செய், முயல்.

**உட்கு**
அச்சம், நாணம். (வி) அஞ்சு, நாணு.

**உண்ணா**
உண்ணாக்கு. (வி) *தின்னாவாம்.*

**உதவி**
சகாயம், ஈகை. (வி) கொடுத்து.

**உதி**
ஒதியமரம் (தொல்-எழுத்-243), உலைத்துருத்தி. (வி) உதயமாகு, அவதரி, காலந்தொடங்கு.

**உதிர்**
துகள், முத்தக்காசு, கோரைக்கிழங்கு. (வி) சிதறு, சிந்து, பிதிர்.

**உந்தி**
கொப்பூழ், தேர்த்தட்டு, நீர்ச்சுழி, மகளிர் விளையாட்டினொன்று, நடு, உயர்ச்சி. (வி) தள்ளி, செலுத்தி, எழும்பி.

**உந்து**
கச்சோலம். (வி) தள்ளு, செலுத்து, எழும்பு, ஏறு.

**உப்பு**
இலவணம், இனிமை, விளையாட்டு மணற்குலியல். (வி) வளர், நிமிர், வீங்கு, பொங்கு.

**உயர்**
குன்றிச்செடி, வருத்தம் (வி) வளர், நிமிர், மேன்மையுறு.

**உரி**
அரைப்படி, தோல், கொத்துமல்லி, உரிமை. (வி) களை, கழற்று.

**உருக்கு**
எஃகு 'உருக்கார வீரவயில் விழியாய்' (மறைசையந். 21). (வி) உருகச்செய், வாட்டு.

**உருள்**
தேருருள், உரோகிணி, (வி) அழி, புரளு.

**உரை**
மொழி, பேச்சு, வியாக்கியானம், விடை, ஒலி. (வி) தேய், பேசு.

**உலை**
கொல்லனுலை, நெருப்பு மூட்டப்பட்ட அடுப்பு, பாகஞ் செய்யலைக்கும் நீருலை. (வி) அலை, கெடு, *சீரழி, மனங்குலை.*

**உவர்**
உவர்ப்பு, உப்பு. (வி) உப்புக்கரி, துவர், அரோசி.

**உவனி**
வான். (வி) ஈரமாகு.

**உழக்கு**
காற்படி. (வி) *மிதி,* கலக்கு, கொன்றுதிரி.

**உழை**
மான், யாழினோர் நரம்பு, உவர்மண், பக்கம், இடம். (வி) பிரயாசப்படு, வேலை செய், வருந்து.

**உளர்**
உடையவர், ஏது liability. (வி) சிறகுகோது, அசை, கழல், யாழினரம்பு தடவு.

**உளை**
ஒலி, சேறு, தலை, மயிர், குதிரையின் கழுத்துமயிர். (வி) வருந்து.

**உள்**
உள்ளிடம். (வி) நினையென்னேவல்.

**உறங்கி**
புளியமரம். (வி) *நித்திரைசெய்து.*

**உறண்டு**
*முரட்டுக்குணம்.* (வி) *வறளு.*

**உறை**
படைக்கூடு, இடம், பாவிடுபிரை, கிணற்றுறை, வாழ்நாள், மருந்து, துளி, மழை. (வி) வாசஞ்செய், சஞ்சரி, இறுகு, செறி.

**உன்னி**
குதிரை. (வி) நினைந்து.

**ஊக்கு**
முயற்சி. (வி) முயல், அசை, ஆட்டு, எழுப்பு.

ஊடு

நடு, தார்நூல். (வி) பிணங்கு, வெறு, விரோதி.

ஊட்டி

பறவையுணவு, தொண்டை. (வி) உண்பித்து, அகிற்புகை முதலிய ஊட்டி.

ஊர்

நகர். (வி) தவழ், பரவு, தினவுறு, ஏறு.

ஊழ்

விதி, பழமை, முறை (வி) முதிர், வாடு, பதனழி, நினை, மலர்.

ஊறு

இடையூறு, காயம், கொலை, தீமை, குற்றம், துன்பம், தீண்டுகை. (வி) நீருறு, கசி, பால்முதலியன சுர, சாரமேறு.

ஊற்று

நீரூற்று, ஊன்றுகோல். (வி) சிந்து, சொரி.

ஊன்றி

பாம்பு. (வி) பதித்து.

எஃகு

கூர்மை, உருக்கு, மதிநுட்பம், வேற்படை. (வி) நெகிழ், நீள், தாழ்ந்தெழும்பு, எட்டு, உதைந்தேறு, பஞ்சு முதலிய கொட்டு.

எட்டு

ஒரெண், ஆசை, இறந்த எட்டாம் நாட் சடங்கு. (வி) தாவியுயர், தொடு, கைக்கு அகப்படு.

எண்

கணிதம், இலக்கம், எண்ணம், சோதிடம், எள்ளு, மதிப்பு. (வி) நினை, ஆலோசி, மதி.

எதிர்

முன், முரண், ஒப்பு. (வி) சந்தி, தோன்று, மாறுபடு.

எய்

முட்பன்றி, அம்பு. (வி) அம்பு முதலியன எய்.

எரி

நெருப்பு, நரகம், கேட்டை, புனர்பூசம். (வி) பிரகாசி, அழல், கோபங்கொள், வயிறெரி.

எருக்கு

ஒரு செடி. (வி) கொல், வெட்டு.

எழு

கம்பம் வளைதடி, உருக்கு. (வி) நித்திரைவிட்டெழு, எழும்பு, தோன்று.

எள்

ஒரு தானியம் sesamum. (வி) இழிவாகப்பேசு, தள்ளு.

ஏசு

குற்றம், இகழ்ச்சி. (வி) இகழ்.

ஏவு

உயர்ச்சி, அம்பு 'தனாது கையிருந்த கார்முகம் வளைஇ மாறிலேவு பூட்டி' (கந்தபு-காமதகன 66). (வி) கட்டளையிடு, தூண்டு.

ஏறு

உயர்ச்சி, பசு சிங்கம் மரைமான் முதலியவற்றினாண், இடபராசி, ஆண் சுறா, ஆண் சங்கு, இடி, அச்சுவினி நாள். (வி) இவர், தொகை முதலிய அதிகரி.

ஒட்டு

இணைக்கப்பட்டது, படைவகுப்பு, சபதம், ஓரலங்காரம். (வி) பொருந்து, சேர், சுருங்கு, வற்று, பந்தயம் வை.

ஒதுக்கு

மறைவு, மறைவிடம். (வி) ஒதுங்கச்செய், வஸ்திரத்தையொதுக்கு, சேர், கடன்தீர்.

ஒத்து

ஒத்திசை, ஒருதுகுழல். (வி) விலகு.

ஒப்பு

சமானம், தகுதி, இசைவு, அழகு, ஒப்பாரி, உடன்படிக்கை. (வி) சம்மதி.

ஒலி

இடி, எழுத்தொலி, காற்று, ஓசை. (வி) ஆரவாரி, தழை.

ஒழுக்கு

ஒழுகுகை, நீர் முதலியவோடுகை, நன்னடை. (வி) ஒழுகச்செய், நடத்து.

ஒளி

பிரகாசம், புகழ், சூரியன், பார்வை, சந்திரன். (வி) மறை, மனத்திலடக்கு, பதுங்கியிரு.

ஒற்று
மெய்யெழுத்து, வேவுகாரன். (வி) அணை, அப்பு, விலகு.

ஒன்று
ஏகம். (வி) இணங்கு, பொருந்து, ஐக்கியப்படு, ஒடுங்கு.

ஓடு
ஆமை முதலியவற்றினோடு, வீடுவேயும் ஓடு, உடைந்த பானையோடு, இரப்போர் கலம், மூன்றனுருபு. (வி) நீர் முதலிய ஓடு, கெடு, குலை.

ஓதி
ஒந்தி, கல்வி, பெண்மயிர், மலை, ஞானம். (வி) படித்து, சொல்லி, மந்திரமுச்சரித்து.

ஓர்
ஒரு. (வி) ஆராய், தெளி.

கசங்கு
ஓலை நீங்கிய ஈச்சமரத்தின் மட்டை, ஈச்சமரம். (வி) குழை, மனம்நோகு, வேலையினா லிளை.

கடி
மணம், காவல், கூர்மை, சீக்கிரம், கலியாணம், ஒளி, அச்சம், நீக்கம், மிகுதி, கரிப்பு, சிறப்பு, இன்பம், புதுமை, ஓசை, விளக்கம், இரப்போர் கலம், இடுப்பு. (வி) கோபி, தண்டி, நீக்கு, விலக்கு, ஓட்டு, ஒன்றைப் பல்லால் கடி.

கடுகு
ஐயவி, குன்றிச்செடி, எண்ணெய்க் கடுகு. (வி) வேகமாய்ப் போ, சமீபி.

கடை
முடிவு, அங்காடி, கீழ்மை, வாயில், பக்கம். (வி) தயிர் கடை, மரம் லோகம் முதலியவைகளிலே சில செயற்கை வடிவமுடைய பொருள்களைச் செய்.

கட்டு
கட்டிய கட்டு, யாக்கை, காவல், மூட்டை, உறுதி, வரம்பு, கட்டுப்பாடு. (வி) பிணி, வீடு முதலிய கட்டு, விவாகஞ்செய்.

கணி
வேங்கைமரம், கையாந்தகரை, வினாடி, மருதநிலம், சோதிடன். (வி) எண்ணு, நன்குமதி.

கண்டனை
தள்ளுதல். (வி) பார்த்தாய்.

கண்டி
இலங்கைத் தீவிலுள்ள ஒரு நகர், கழுத்தணியி லொன்று, இருபது பறை. (வி) கடிந்துகொள், தறி, வெட்டு.

கண்ணுதல்
சிவபிரான். (வி) கருதுதல்.

கத்தரி
கத்தரிக்கோல், வழுதுணை, brinjal, அக்கினி நட்சத்திரம். (வி) கத்தரியால் வெட்டு, புழுவரி, எண்ணம் வேறுபடு.

கப்பு
கவர்க்கொம்பு, கிளை, மயிர்க்கூட்டுஞ் சாயம். (வி) மூடிக்கொள், உண்.

கம்பி
இரும்பு முதலியவற்றின் கம்பி, காதணியி லொன்று, சித்திரக் கம்பி. (வி) அசை, நடுங்கு.

கரி
யானை, நிலக்கரி, கருமை, மரவைரம், சாட்சி. (வி) உப்புக்கரி, கருகு, காந்து.

கருக்கு
ஆயுதத்தின் கூர், பனை மட்டை முதலியவற்றின் கூர். (வி) கருகச்செய், கறுப்போட வாட்டு.

கரை
விளிம்பு, எல்லை, ஏரி முதலிய வற்றின் கரை. (வி) நீரிற் கரையச் செய், அழு, உருகு, இளை.

கலி
கலியுகம், கலிப்பா, வறுமை, துன்பம், வலி. (வி) தழை, ஒலி, மகிழ்.

கலை
சந்திரன் பங்கு, சீலை, ஆண்மான், காலநுட்பம், கல்வி, நூல், வைரம். (வி) குலை, நீக்கு, பிரி.

கல்
சிலை, அரதனம், மலை. (வி) பயில், தோண்டு.

கவர்
இரண்டாகப் பிரிகை 'கவரில் குடை விளங்குமாமணி' (சேதுபுரா. சேதுவந். 15), வாழைமரம் 'கவரிலாயு கந்த ராயணன்' (சேதுபு.விதூம. 118),

மரக்கப்பு 'கவர்க்கண் வைகிடும் வானரங்கள்' (சேதுபு-கவிதீர். 3). (வி) பறி, கிரகி, திருடு.

கவி
சுக்கிரன், புலவன், குரங்கு, பாட்டு. (வி) வளை, விரும்பு.

கவ்வு
பெருமை. (வி) வாயினாற் பற்று 'கவ்வு நாயுங் கழுகு முச்சிப்போதொடுதாள் சுழன்று' (திருவாய்மொழி).

கழல்
வீரகண்டாமணி, கால் கழற்சிக்கொடி. (வி) நெகிழ்ந்துபோ, பொருத்து விலகு.

கழி
உப்பளம், உப்பாறு, கொம்பு, மிகுதி. (வி) கட, செல்.

களி
மகிழ்ச்சி, மாவாற் கிண்டிய களி. (வி) மகிழ்.

களை
பயிர்க்களை, அயர்வு, அழகு. (வி) விலக்கு, கொல்லு.

கள்
மது, தேன், களவு. (வி) திருடு.

கறங்கு
காற்றாடி, சுழற்சி. (வி) சுழல், ஒலி.

கறி
மிளகு, கறியுணவு (வி) கடி, புசி.

கறுவு
அகங்காரம் 'கறுவொடும் பிரகலாதன் சுதழ்சினற் தலைக்கொண்டானே' (கூர்மபு. அந்தகா. 12), சினக்குறிப்பு, முனிவு 'கறுவொடு மயங்கிக் கண்சிவந்தன்று' (புறப்பொ. பெருந்திணை.11). (வி) உள் வைரங்கொள்ளு, சினக்குறிப்புக்காட்டு.

கனி
பழம். (வி) பழு.

கனை
ஒலி, செறிவு, நிறைவு. (வி) ஒலி, குதிரை முதலிய கனை.

கன்று
எருமை, மான், யானை, பசு முதலியவற்றின் கன்று, கைவளை. (வி) விசனப்படு, பதனழி.

கா
காவடி, துலாக்கோல், சோலை, பூந்தோட்டம். (வி) பாதுகா, காப்பாற்று, காவல் செய், விரதங்கா.

காண்
அழகு 'காண்வர விளங்கும்' (கந்தபு. திருநகர. 42), ஓரசை 'கற்பனை யத்தனை காணச் சரவணப்பொய்கை' (மருதூரந். 55). (வி) பார், தெரி, உணர், ஆராய், பெறு, உண்மையறி, பலன்படு.

காதலி
தோழி 'காதலிமாரொடும் பெருகுங் காதலைப் பேசுகின்றார் சிலர்' (கந்தபு. திருக்கல்.21), மகள், மனைவி. (வி) அன்புகூர், விரும்பு.

காது
செவி. (வி) கொல்லு, தறி.

காமி
காமாதுரன், உவர்மண், பொன்னி மிளை. (வி) விரும்பு, மோகமுறு.

காய்
மரத்தின்காய், காய்ப்பரு, சொக்கட்டான் காய். (வி) உலர், வெறு, எரி.

காறு
அளவு, கொழு (கலப்பையிரும்பு). (வி) நெய் முதலிய காறு.

கிட்டி
இடுக்குத்தடி, கைத்தாளம், தலையீற்றுப்பசு, தேய்ந்த கலப்பை, நுகக்கிட்டி, பன்றி. (வி) மருவி, நெருங்கி.

கிரீடி
அரசன், அருச்சுநன். (வி) புணர், விளையாடு.

கிளை
மரக்கிளை, தளிர், சுற்றம், யாழினோர் நரம்பு 'முரசம் படகந்துடி தண்ணுமை யாழ் முழவங்கிளை துந்துபி' (பெரியபு-திருநா. 76), மூங்கில். (வி) பெருகு, கிளறு.

**கிள்ளி**
சோழன். (வி) நுள்ளி.

**கிறுக்கு**
பைத்தியம், நேர்மையில்லாத எழுத்து. (வி) கிறுக்கித்தள்ளு.

**கீறு**
அடையாளம், எழுத்துக்கீற்று, பிளவு, வரி. (வி) கிழி, கிறுக்கு, தேய்.

**குடவு**
குகை, குமரனாடல், வளைவு. (வி) வளை.

**குடி**
குடும்பம், குடியானவன். (வி) பருகு.

**குடை**
உடைவேல், கவிகை. (வி) துளை.

**குணி**
குணத்தையுடையது, முடம் (வி) மதி, கணி.

**குதி**
அடிப்புறத்துமூலை, காற்குதி, முயற்சி. (வி) பாய், துள்ளு.

**குதிர்**
நெல் முதலியன வைக்குங்கூடு. (வி) செவ்வைப்படு.

**குத்து**
சணல், நேர், வாயுக்குத்து. (வி) உலக்கை முதலியவற்றாற் குற்று.

**குந்தி**
ஒரு சிட்டுக்குருவி, கள், பாண்டவர் தாய். (வி) நிற்றலினின்று ஒரிடத்தமர்ந்து.

**குந்து**
தும்பு. (வி) உட்கார் அல்லது அமர்.

**குமட்டு**
ஒக்காளம். (வி) குடலைப்புரட்டு.

**குயில்**
ஒரு பறவை, சொல், துளையுடைப்பொருள். (வி) சொல்லு, துளை, நெருங்கு, இரத்தினம்பதி.

**குரங்கு**
வானரம். (வி) தாழ், வணங்கு, குனி.

**குலை**
கொத்து, அம்பின்குதை, செய்கரை. (வி) கட்டவிழ், கலை, தளர், கற்பழி, மனந்தடுமாறு; அழிந்துபோ.

**குவவு**
திரட்சி, பெருமை, கூட்டம், மேடு. (வி) திரட்டு (சேர்).

**குழம்பு**
குழம்பலான பதார்த்தம், கஞ்சி, குழைசேறு. (வி) கலங்கு, மனந்தளும்பு, தத்தளி.

**குழை**
தளிர், சேறு, குண்டலம், துளையுடைப் பொருள். (வி) மனமிளகு, தைரியங்குறை, வளை, வாடு.

**குளிறு**
ஒலி. (வி) பேரொலி செய், ஒலி.

**குறி**
அடையாளம், இலக்கு, தரம். (வி) கருது, மதி.

**குறுக்கு**
விட்டம் diameter, திரியக்கு that which is across. (வி) குறுகப்பண்ணு.

**குறை**
நிறைவில்லாதது, குற்றம், தவறு, சேடம், தரித்திரம். (வி) கெடு, சுருக்கு.

**குற்றி**
தறி 'இவ்வுருக் குற்றி கொல் மகன்கொல்' (நன். 435. உரை). (வி) இடித்து, நெரித்து, தறித்து.

**குன்று**
சிறுமலை, சதயநாள். (வி) குறை, கெடு, மெலி.

**கூடு**
உடம்பு, பறவைக்கூடு, மீன்பறி. (வி) சேர். சித்தியாகு, தகுதியாகு, இணங்கு, பொருந்து.

**கூட்டு**
சேர்க்கை, உறவு, பங்கு, சம்பந்தம். (வி) அதிகப்படுத்து, உடன்சேர், சேகரி, பெருக்கு, கல.

**கூம்பு**
பாய்மரம், தேர்க்கொடிஞ்சி. (வி) குவி, ஒடுங்கு.

**கூறு**
பங்கு, பகுதி, கூறுபாடு, தன்மை, பிரிவு, எள்ளு. (வி) சொல்லு.

**கெம்பு**
பதுமராகக்கல். (வி) ஆரவாரஞ்செய், இரத்தங்கொதி.

**கேள்**
உறவு, சிநேகம், சுற்றம், கணவன். (வி) செவியாற் கேள். வினாவு, கண்டி, விலை கேள்.

**கைத்து**
பொன். (வி) வெறுத்து.

**கைப்பிடி**
கைபிடித்தபடி, கலியாணம். (வி) உறுதியாகக் கொள்.

**கொஞ்சி**
ஒரு செடி: அதைக் கிஞ்ஞா என்பர். (வி) மழலை மொழிந்து, செல்லங்கொஞ்சி.

**கொடுப்பை**
பொன்னாங்காணி. (வி) தருவாய்.

**கொட்டு**
மண்வெட்டி, சரீரம், பறைமுழக்கம். (வி) அடி, கைதட்டு, சிந்து, தேள் முதலியன கொட்டு, பறையடி.

**கொதி**
சூடு, கோபம், வெப்பம், நீர்க்கொதி. (வி) பொங்கு, சுடு, சுரங்காய்.

**கொத்து**
பூ முதலியவற்றின் கொத்து, குடும்பம், கொத்துதல், உணவு. (வி) தறி, இரை கொத்தியெடு, வெட்டு.

**கொந்து**
பூங்கொத்து. (வி) பழமுதலியன கொந்து, மூர்க்கங்கொள்ளு.

**கொய்**
ஒரு மீன். (வி) அறு, கத்தரி.

**கொல்**
ஐயக்கிளவி, 'அணங்கு கொலாய்மயில்கொல்' (திருக்கு), வருத்தம், கொல்லன். (வி) கொலைசெய்.

**கொழு**
மழு, கலப்பையிரும்பு, கொழுப்பு. (வி) மதர்த்துத் தழை, தழைத்துச்செழி.

**கொள்**
காணம் (ஒரு தானியம்). (வி) வாங்கிக்கொள், அடங்கு.

**கொறி**
செம்மறியாடு. (வி) சிறிது சிறிதாகவுண், பல்லாற் கொறி.

**கோ**
அரசன், பசு, பூமி, நீர், அம்பு, ஆகாயம், சூரியன், சந்திரன். (வி) கோவைசெய், கயிறு முதலியன கோ.

**கோடி**
நூறு லட்சம், முனை, மூலை. (வி) பிரார்த்தி.

**கோடு**
கீற்று, வளைவு, சங்கம், விலங்கின்கொம்பு முதலியன. (வி) வளை, நடுவுநிலைகோணு.

**கோது**
குற்றம், சக்கை. (வி) மயிர்வகிர்.

**கோபி**
இடைச்சி, ஒரு மண், சினமுள்ளோன். (வி) வெகுள், சின.

**கோம்பி**
பச்சோந்தி. (வி) சினந்து.

**சகி**
தோழி. (வி) பொறு, மன்னி.

**சங்கரி**
பார்வதி. (வி) அழி.

**சடை**
மயிர்ப்பின்னல். (வி) கிளைத்து நெருங்கி 'சடைச் செந்நெல் பொன்விளையுந் தன்னாடு' (நளவெண்பா).

**சட்டி**
பாண்டம், அறுபது, ஆறாந்திதி. (வி) அழி, கொல்.

**சந்தி**
இசைப்பு, மாலைநேரம், மூங்கில்மரம். (வி) எதிர்ப்படு, கண்டுகொள்.

**சமி**
அருகன், வன்னிமரம், தணக்குமரம் (மலையக). (வி) சீரணி, சகி.

**சமை**
அந்தக்கரண நிக்கிரகம், பொறுமை, வருடம் 'சமையாடிற் சேகரஞ் சகத்தைக் கண்டோர்' (தைல. தைலவ. 134). (வி) உண்டுபண்ணு, உணவுசமை, பருவமடை.

**சம்பாதி**
அருணன்மகன் (ஒரு கழுகரசன்). (வி) பொருள்தேடு.

சம்மதி
அங்கீகரிப்பு. (வி) உடன்படு.

சல்லரி
கைத்தாளம், திமிலைப்பறை. (வி) துண்டு துண்டாக நறுக்கு.

சனி
குளிர், கோளழை, சலதோஷம். (வி) பதனழி.

சறுக்கு
சறுக்குக்கட்டை, நெம்புதடி, வழுக்கு. (வி) வழுக்கு, நழுவு, தத்து.

சனி
ஒரு கிரகம், ஒரு வாரம். (வி) கருப்படு, உதி.

சா
மரணம், பேய். (வி) இற.

சாடி
தாழி, கும்பவிராசி, சீலை, ஆண்மயிர். (வி) இருபுடையுமசைத்து, நொறுக்கி, தண்டித்து.

சாடு
பண்டி, ஒரு பெரிய கூடை, மணிமுற்றாத சோளம். (வி) ஒருபுறஞ்சாய், கிளைசாய்ந்தாடு, மோதியடி.

சாட்டு
குற்றஞ்சாட்டுகை, ஒப்பிக்கை. (வி) போக்குச்சொல்லு, அடி.

சாதி
குலம், இனம், பிரம்பு, தேக்கமரம், கள், சண்பகமரம், தாளப்பிரமாணம் பத்திலொன்று. (வி) கொல் 'மந்திரத்தாற் சாதியாவகை தொடுத்தான்' (பெரியபு - திருநாவு. 107), வெல்லு, செய்துமுடி.

சாத்து
அப்புதல், குதிரைச்சேவகன், வாணிகஞ்செய்வோர் திரள். (வி) அணி, அப்பு, கதவு முதலிய மூடு, அடி, ஒன்றின்மேற் சார்த்து.

சாம்பு
பறை, சீலை. (வி) கூம்பு, ஒடுங்கு, சோர்.

சார்
திண்ணை, தாழ்வாரம், பக்கம், இடம், அழகு, இளவோலை. (வி) அடை, கிட்டு, அணுகு, ஒருபாற்சார், பொருந்து, சாய்.

சிக்கு
நூல் முதலியவற்றின் சிக்கு, தடை, கண்ணி, மாசு, எண்ணெய்ப்பற்று முதலியன. (வி) அகப்படு, மாட்டிக்கொள்ளு.

சிதர்
மழைத்துளி, உறி, வண்டு, பூந்தாது, கந்தைத்துணி. (வி) சிந்து.

சிதை
ஈமவிறகு, வெண்துளசி, கீழ்மை. (வி) கெடு, அழி.

சித்தி
நிறைவேற்றம். (வி) கை கூடு, சம்பவி.

சிந்து
கடல், ஆறு, சிந்துதேசம், யானை, முச்சீரடி, பதினெண் பாடையினொன்று (வி) ஒழுகு, கெடு.

சிருட்டி
படைப்பு. (வி) படை create.

சிரை
நரம்பு. (வி) மயிர்சுழி.

சிலம்பு
ஒலி, காற்சிலம்பு, மலை. (வி) ஒலி.

சிலுப்பு
அசைத்தல், நடுக்கம். (வி) மயிர் நெறிக்கச்செய், தயிர்கடை, கலக்கு.

சிலை
ஒலி, வில், கல், மலை, மூலவிக்கிரகம், மனோசிலை, சூதபாஷாணம். (வி) ஒலி.

சிறாம்பு
சிராய் splinter. (வி) பிறாண்டு, உராய்ஞ்சு.

சினை
கருப்பம், மரக்கொம்பு, மூங்கில், மீன்சினை, உறுப்பு. (வி) சிரங்குசினை, பரு, கருக்கொண்டிரு.

சீ
இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குமி, சம்பத்து. (வி) காலினாற் கிளறு.

சீரணி
காடு, கூத்தின் விகற்பம், ஓமச்செடி (மலையக). (வி) உண்டது செரி.

சீவி
அழிஞ்சில், சீவனுடையது. (வி) உயிர்வாழ், சஞ்சரி.

சீறு
கோபம் 'சீறார் சண்டன் பூசைசெய்' (சைவச. பொது. 554). (வி) பாம்பு முதலியன சீறு, சினங்கொள்.

சுகி
நோயிலான், காசிபன் மனைவி. (வி) இன்பமனுபவி.

சுகிர்
உட்டுளைப்பொருள். (வி) மயிர்முதலிய வகிர்.

சுக்கு
திரிபலாதியி னொன்று, (வி) செய், புணர்.

சுடர்
அக்கினி, ஒளி, சூரியன், சந்திரன். (வி) ஒளிசெய் 'ஞானச்சுடர் விளக்கேற்றினே னாரணர்க்கு, (பேயாழ்வார்).

சுட்டு
குறிப்பு, எண்ணம், சுட்டெழுத்து. (வி) காட்டு, மதி.

சுணங்கு
தேமல், பசலை, மெலிவு. (வி) தாமதி, சோர்வடை.

சுண்டு
அடிப்பற்றியது, பொடுகு, அற்பம். (வி) வற்று.

சுரி
முறுக்கு, ஆணரி, சேறு (வி) சுழி, சுருங்கு.

சுருக்கு
நெய்த்துடுப்பு, கயிற்றுச்சுருக்கு, மடிப்பு, கண்ணி. (வி) ஒடுக்கு, சிறுகப்பண்ணு.

சுருங்கு
சலதாரை gutter. (வி) ஒடுங்கு, குறை, இறுகு.

சுருட்டு
புகையிலைச்சுருட்டு, சுருள். (வி) சுருளச்செய், மடக்கு.

சுவை
உருசி, இனிமை, இன்பம் (வி) உருசிபார், முலை உண் 'இல்லிதூர்ந்த, பொல்லாவறுமுலை சுவைத்தொறும் பால்காணாது' (புறநானூறு).

சுழல்
சுழிநீர் முதலியன, வளைவு, வஞ்சனை. (வி) மனங்கலங்கு, சுற்று, உருள்.

சுளி
புளியாரை. (வி) கோபக்குறி காட்டு.

சுற்று
சுழற்சி, வட்டம், சுற்று வழி. (வி) சுற்றிப்போ, அலை, வட்டமாயோடு.

சூட்டு
நுதலணி, பாம்புமயில் முதலியவற்றின் சூட்டு, மாலை. (வி) மலர்மாலை முதலிய சூட்டு 'மையினாற் கண்ணெழுதி மாலைசூட்டி மயானத்திலிடு வதன்முன்' (தேவாரம்.திருநாவு.).

சூர்
வனதேவதை, தெய்வப்பெண், சூரன், நோய், துன்பம், மிளகு. (வி) மயிர்வகிர், பஞ்சுசூர் pick or prepare cotton.

செதுக்கு
சேறு, பூதம், வாடல், உடற்றழும்பு. (வி) புல் முதலியன செதுக்கு, மரஞ்செதுக்கு.

செப்பு
கின்னம், விடை, (வி) சொல்லு.

செயிர்
சினம், குற்றம். (வி) சின.

செய்
வயல். (வி) ஒரு காரியத்தை இயற்று.

செய்யாள்
இலக்குமி. (வி) செய்யமாட்டாள்.

செய்யான்
செம்பூரான் (வி) செய்யமாட்டான்.

செல்
கறையான், இடி, மேகம், பற்று. (வி) போ, வழங்கு.

செறு
பாத்தி, வயல். (வி) கொல்லு.

**சேகரி**
நாயுருவிச்செடி. (வி) சேர், சம்பாதி.

**சேதி**
செய்தி, ஒரு நாடு. (வி) வெட்டு, அரி, அழி.

**சேந்து**
சிவப்பு, தீ, அசோக மரம், (வி) கிணற்றிலிருந்து நீர்மொள்ளு.

**சேர்**
ஒரு முகத்தலளவை, ஓர் நிறையளவு, திரட்சி. (வி) கூடு, இணங்கு, அடை, பொருந்து.

**சொக்கு**
அழகு, பொன், மயக்கம். (வி) மயங்கு.

**சொட்டு**
துளி, குற்றம். (வி)மழைத்திவலை துளி.

**சொல்**
மொழி, புகழ், கள், நெல். (வி) பேசு.

**சொறி**
தினவு, காஞ்சொறிச் செடி. (வி) பறாண்டு (சுறண்டு).

**சோகி**
பலகறை, பிடாரன் (வி) துன்பமுறு.

**சோடி**
இரட்டை. (வி) அலங்கரி.

**சோதி**
ஒளி, சிவன், அருகன், சூரியன், சுவாதிநாள். (வி) ஆராய், பரீட்சி.

**சோம்பு**
மந்தம், சோம்பல், நட்சத்திரசீரகம். (வி) தாமதி, வாட்டங்கொள்.

**தகர்**
செம்மறிக்கடா, மேட்டு நிலம், பலாசமரம். (வி) உடை, நொறுங்கு.

**தங்காள்**
தங்கை. (வி) தங்கமாட்டாள்.

**தங்கான்**
அரையென்னு மெண்ணின் குறி. (வி) தங்கமாட்டான்.

**தடவு**
பெருமை, வளைவு, தூபக்கால், சுனை. (வி) பூசு, வீணை வாசி.

**தடாரி**
பம்பை, உடுக்கை, மத்தளம். (ஊடுருவு).

**தடித்து**
மின்னல். (வி) வீங்கி, கனத்து.

**தடுக்கு**
சிறுபாய், தவிசு. (வி) தடைசெய், விலக்கு.

**தட்டு**
தேர்நடு, தட்டம், பரிசை, குற்றம், அடுக்கு. (வி) கொட்டு, அறை, முட்டு.

**தண்டி**
ஓர் புலவன், சண்டேசுர நாயனார். (வி) தண்டனை செய், வெட்டு.

**தண்டு**
தண்டாயுதம், வீணை, துளையுடைப்பொருள், மூங்கில். (வி) வரிப்பணம் முதலியன சேகரி.

**தப்பு**
குற்றம், தவறு, தப்பு வாத்தியம். (வி) அபாயத்தினீங்கு, விலகு, துணிதுவை.

**தவறு**
பிழை, நெறிகடக்கை, விலகுகை, குற்றம். (வி) பிசகு, மீறு, விலகு, குற்றமுறு.

**தவ்வி**
சட்டுவம். (வி) கெடுத்து, ஒடுங்கி.

**தழல்**
அழல், கார்த்திகைநாள், கிளிகடிகோல். (வி) அழல்.

**தழை**
தளிர், இலை, பீலிக்குடை, மயிற்றோகை. (வி) செழி, வாழ்.

**தளம்பு**
மதகு. (வி) நீர் ததும்பு, அசை, நிலைகுலை.

**தளர்**
தளர்ச்சி. (வி) கட்டவிழ், பலவீனப்படு சோம்பு.

**தளை**
கால்விலங்கு, வரம்பு (வி) கட்டு, பிணி.

**தறி**
நெய்வார் கருவி, தூண், கட்டுத்தறி. (வி) சேதி, முறி, துண்டி.

தா
பகை, வருத்தம், கேடு, குற்றம். (வி) கொடு, பயன்தரு, மகவைப்பெறு, நூல் செய்.

தாக்கு
அடி, எதிர்தாக்குகை, நெல்வயல், உரம், வேகம். (வி) அடி, முட்டு, அமுத்து, மோது.

தாவு
குதிரைநடை, பாய்ச்சல், ஒதுக்கிடம், வருத்தம், வலி. (வி) எட்டிப்பிடி, பரவு, தாண்டு.

தாழ்
தாழக்கோல், சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம். (வி) தாழச்செய், தாமதி, வணங்கு, சீர்கெடு, தொங்கு.

தாளி
ஓர் படர்கொடி, அனுட நாள், பனைமரம். (வி) தாளிதஞ்செய், சுண்ணாம்பைக் குழையச் செய்.

திகை
திசை, தேமல். (வி) பிரமி, மயங்கு.

திட்டு
வசை 'உன் திட்டெல்லாம் குப்பையிலே தள்ளு' (வழக்கு), ஆற்றிடைக் குறை, கணையச்சுவர். (வி) நிந்தி, சபி.

திணி
திண்மை 'அன்னான்றிணியுடல் சிதைப்ப' (திருவிளை. அங்க. 19). (வி) துறு, நிறை.

தித்தி
ஒருதுகுழல், வேள்விக்குண்டம், தித்திப்பு, குரவம். (வி) தித்தியென்னேவல்.

திமிர்
விறைப்பு, பரிசமின்மை, மயக்கம். (வி) பூசு.

திரங்கல்
மிளகு. (வி) திரைதல், உலர்தல்.

திரட்டு
சேர்த்து ஒன்றாக்கியிருப்பது as தேவாரத்திரட்டு, திரளை. (வி) உருண்டையாகக் கடை, சேர், உருட்டு.

திரி
விளக்குத்திரி, மூன்று 'திரிமூர்த்திகள்'. (வி) உழல், மனங்கோணு, மாறுபடு.

திருப்பு
வளைப்பு (வழக்கு). (வி) திரும்பச்செய்.

திரை
அலை, உடற்றிரை, திரைச்சீலை. (வி) சுருங்கு, பால் முதலிய உறை.

தீ
நெருப்பு. (வி) தீயச்செய்.

தீட்டு
மகளிர்சூதகம், ஆசூசம் (அசுத்தம்). (வி) கூராக்கு, அரிசிதீட்டு, பல்துலக்கு, எழுது.

துடி
குமரனாடல், உடுக்கை, மேன்மை, அகில், ஏலம். (வி) தத்தளி, பசியினால் வருந்து, அசை.

துடை
சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், அரசமரம், தொடை, (வி) பெருக்கு, அழி, நீக்கு, வடுவகற்று.

துணர்
பூங்கொத்து. (வி) முகை to form as buds.

துணி
சீலை, துண்டு, சோதி நாள், ஒளி, தேரிடக்கியம். (வி) முயலு, திடன்கொள், வெட்டு.

துதி
தோத்திரம். (வி) வழுத்து.

துதை
நெருக்கம், செறிவு. (வி) நெருங்கு.

துப்பு
உணவு, அனுபவம், சுத்தம், அறிவு, சிவப்பு, பவளம், ஆராய்ச்சி, வலி, நெய். (வி) உமிழ்.

துமி
சிறுதிவலை, மழைத்துளி. (வி) அறு, வெட்டு.

துயில்
நித்திரை. (வி) உறங்கு.

துய்
உணவு, பஞ்சிற்றொடர் நுனி, சிம்பு (சிந்தாமணி). (வி) உண், அநுபவி.

துலங்கு
தொழுமரம். (வி) நடுங்கு, பிரகாசி.

துவக்கு
தோல், உடல், கட்டு, பிணக்கு, சம்பந்தம், (வி) ஆரம்பி.

துவை
இறைச்சி, ஒலி, துளசி, பிண்ணாக்கு, புளிங்கறி. (வி) ஒலி, துவை, மிதி.

துவ்வு
உணவு, அநுபவம், ஐம்பொறிநுகர்ச்சி. (வி) புசி, அநுபவி.

துழாய்
துளசி. (வி) துழாவி.

துளிர்
தளிர். (வி) தளிர்விடு.

துளை
துவாரம், மூங்கில். (வி) துளைசெய்.

துள்ளல்
ஆடு, கலிப்பாவினோசை, கொசுகு. (வி) துள்ளுதல்.

தூக்கு
உறி, நிறை, துலாராசி, செய்யுள், உயர்ச்சி, ஆராய்ச்சி, கூத்து. (வி) ஆராய்ச்சி செய், உயர்த்து, எடுத்துவிடு.

தூங்கல்
யானை, வஞ்சிப்பாவினோசை, தராசு. (வி) அழுந்தல், உறங்கல், ஆடுதல், தாழ்தல்.

தூர்
வேர், சேறு, அடிப்பக்கம், 'நுனி நீக்கித்தூரிற்றின்றன்னதகைத்து' (நாலடி-கல்வி-8) (வி) நிரப்பு, உட்செலுத்து.

தூவி
இறகு, 'தூவிசேரன்னம் துணையொடு புணரும் சூழ்புனல் குடந்தை' (திருவாய்), மயிலிறகு 'தூவியமுந்திரிகை' (தைல-தைலவ-6). தெளித்து.

தெருள்
தெளிவு, அறிவு. (வி) ஐயமற்றறி.

தெள்
தெள்ளுப்பூச்சி. (வி) கொழி, தெளிவி.

தெள்ளி
யானை, (இ) கொழித்து.

தெறி
அங்கி முதலியவற்றின் கடைப்பூட்டு. (வி) சிதறு.

தெற்றி
சித்திரகூடம் 'சித்திர நிரைத்த பீடிகை மறுகுதெற்றிகள்' [திருவிளை திருநகர். 39], திண்ணை, வாசற்படி. (வி) பிணங்கி.

தெற்று
தெற்றல் (இடறல்), பின்னல். (வி) இடறு, தடை செய், மாறுபடு.

தேக்கு
ஓர் மரம், நிறைவு, தித்திப்பு. (வி) தெவிட்டு, நிறை, உண்ணு.

தேர்
இரதம், உரோகணி. (வி) ஆராய், தெளி, அறி.

தேறு
இஞ்சி, மஞ்சள் முதலியவற்றின் துண்டு. (வி) தைரியங்கொள், அதிகரி.

தை
ஓர் மாதம், மகரவிராசி. (வி) துன்னு, பொருத்து.

தொடர்
கோவை, சங்கிலி, நட்பு, பூமாலை, பஞ்சிநூல். (வி) பின்போ, இடையறாது வா, முயற்சியாயிரு.

தொடு
தோட்டம், மருதநிலம், வஞ்சகம். (வி) தோண்டு, எய், செலுத்து, தீண்டு.

தொத்து
அடிமை, ஒட்டு, கட்டு, பூங்கொத்து, சார்பு, (வி) ஒட்டு, நோய்தொடர், படர்.

தொந்தி
தொப்பை, வயிறு. (வி) பிசகாகு, தொடர்.

தொய்
குற்றம். (வி) இளை, சோர்.

தொலை

துரம், எல்லை, ஒப்பு. (வி) அழி, ஒழி, தோற்கச்செய்.

தொழு

பசுக்கொட்டில், தொழுமரம், இரேவதிநாள். (வி) வணங்கு.

தொனி

ஒலி. (வி) ஒலி (சப்தி).

தோண்டி

கரந்தை, தண்ணீரிறைக்குமொரு பாத்திரம், வறட்சுண்டி. (வி) அகழ்ந்து.

தோன்றி

காந்தள், இரத்தம். (வி) வெளிப்பட்டு.

நகர்

பட்டணம், மருதநிலத்தூர். (வி) ஊர், மறைவாய்ப்போ.

நகை

ஆபரணம், சிரிப்பு, இகழ்ச்சி, பிரகாசம், களிப்பு, (வி) சிரி, பரிகசி.

நசை

ஆசை, அன்பு. (வி) விரும்பு அல்லது அன்புறு.

நச்சு

ஆசை, சிறுமை, நஞ்சு 'நச்சுநீர் குடித்துயிர் நீத்த நால்வரில்' (பாரத. நச்சுப்பொய்-60). (வி) விரும்பு.

நடி

நாடகக்கணிகை. (வி) கூத்தாடு, நாகரிகம் பண்ணு.

நடு

இடுப்பு, மத்தி, நீதி, மிதம். (வி) நாற்றுநடு, நாட்டு.

நத்து

ஒரு பறவை, சங்கு, மூக்கணி (வி) விரும்பு.

நந்து

சங்கு, நத்தை, (வி) கெடு, விருத்தியாகு.

நமை

தினவு, ஒரு மரம் (வி) சொறி, சூடு, (அணி).

நம்பி

ஒரு வேடுவராசன், புருடரிற் சிறந்தோன். (வி) விரும்பி 'வாயார நின்னிசை நம்பி' (புறநா - 136).

நரை

வெண்மை, ரிஷபம், இடப விராசி, சாமரை, நாரை. (வி) மயிர்வெளு.

நலங்கு

அரைத்தகுழம்பு, ஒரு கலியாணச் சடங்கு. (வி) கசங்கச்செய், அழுக்காக்கு.

நலி

நோய். (வி) வருந்து, மெலி.

நளி

குளிர்ச்சி, கூட்டம், செறிவு, தேள், பெருமை. (வி) செறி.

நறுக்கு

துண்டு. (வி) தறி, துண்டி.

நனை

கள், தேன், பூமொட்டு. (வி) ஈரமாக்கு.

நாடி

தாது, நரம்பு, வீட்டினுறுப்பு, மூக்கு 'நுதல்விழி நாடி வள்ளடி நாக்களங்களினும்' (தைல. தைலவ. 97). (வி) ஆராய்ந்து 'நாடி நான்கண்டு கொண்டேன் நாராயணா வென்னு நாமம்' (நாலா. திவ்விய. பிரபந்).

நாடு

இராச்சியம், கண்டம், மென்புலம், நானிலத்துக்கும் பொதுப்பெயர். (வி) தேடு, விசாரி, நினை.

நாட்டு

நிலை (சிந்தாமணி). (வி) ஸ்தாபி, நிறுத்து.

நாணி

நாணமுடையாள், வின்னாரி. (வி) வெட்கமுற்று.

நாவு

நாக்கு. (வி) நோம்பு.

நாறு

நாற்று அல்லது பயிர் முளை 'நறவுபாய்ந்திட நாறு வளர்ந்தவே' (அரிச். நாட்டு. 39). (வி) தோன்று, முளை, மணங்கமழ்.

நாற்று

பயிர்முளை, (வி) தூக்கு 'மலையருவி வீழ்வதுபோனாற்றுவீரால்' (சிவரக. சிவமுனி. 12)

நிகர்
உவமை, சமானம் (வி) ஒப்பாகு.

நிரப்பு
வறுமை, குறைபாடு. (வி) நிறை, பரப்பு, பூர்த்தி செய்.

நிரை
ஒழுங்கு, வரிசை, படை வகுப்பு, பசுக்கூட்டம், ஓரசை. (வி) அணியணியாக நிறுத்து.

நிலவு
ஒளி, சந்திரன், சந்திரப்பிரபை. (வி) ஒளிசெய், விசாலி, கீர்த்தி முதலிய பரவு.

நிலை
குணம், உறுதி, ஆதனம், வசிக்குமிடம், பூமி. (வி) வளராதுநில், நிலைப்படு.

நிவிர்த்தி
துறவு, ஒழிப்பு, பிராயச்சித்தம். (வி) விலக்கு.

நிறை
மிகுதி, நிறைவு, மாட்சிமை, அழிவின்மை, நியாயம், கற்பு, மனவுறுதி, தராசு, (வி) பூரணப்படுத்து, பெருகச்செய்.

நீக்கு
விலக்கு. (வி) அகற்று, ஒழி, தடு, பிரி, மாற்று.

நீட்டு
நீளம். (வி) நீடிக்கச்செய், அடித்துநீட்டு, ஈ.

நீவி
கொய்சகம், சீலை. (வி) தடவி, பூசி.

நுங்கு
பனையிளங்காய். (வி) விழுங்கு.

நுணங்கு
நுண்மை, தேமல். (வி) வாடு, தேய், நுண்மையாகு.

நுவல்
சொல். (வி) சொல்லு.

நுழை
சிறுவாசல், நுண்மை. (வி) உட்செல், புகு.

நுராங்கு
மிகுதி, பெருமை. (வி) மிகுதியாயிரு.

நூறு
நூறென்னுமெண். (வி) அழி, நசுக்கு.

நெட்டு
காம்பு, குலை, இறுக்கு. (வி) தள்ளு.

நெம்பு
ஏணிப்பழு, உலுக்கு மரம், விலாவெலும்பு. (வி) கிளப்பு.

நெய்
உருக்கின வெண்ணெய், நேயம், புழுகு, இரத்தம், சித்திரைநாள். (வி) நெய்யென்னேவல்.

நெருடு
இழையின் பொருத்து, சொற்சங்கடம், வஞ்சனை, (வி) தடவு, இழைபொருத்து.

நெளி
ஒருவகை மோதிரம் (வி) புரளு, நகர்.

நேர்
செவ்வை, ஒழுங்கு, உவமை, நீளம், வரிசை, எதிர், தகுதி, கற்பு. (வி) சந்தி, சம்பவி, சம்மதி, ஈ, எதிர், சண்டை செய்.

நொடி
கைந்நொடி, காலநுட்பம், பள்ளம், சொல். (வி) சொல்லு.

பகட்டு
வெளிவேடம். (வி) மயக்கு.

பகை
வெறுப்பு, விரோதம், பகைஞன். (வி) விரோதி.

பசி
பசித்தல் இது உயிர்வேதனையினொன்று. (வி) பசியெடு.

படர்
வழி, செலவு, நினைவு, துக்கம், பகை. (வி) செல், பெருகு, நினை.

படி
சோபானம், நிலை, குணம், பூமி, நாழி one measure, ஒப்பு. (வி) கைபழகு, குளி, கீழ்ப்படி, வாசி, பழகு.

படை
அடுக்கு, சேனை, திரள், ஆயுதம், கலப்பை. (வி) சிருட்டிசெய், பரிமாறு, நிவேதி.

பணி
தொழில், ஆபரணம், ஊழியம், கட்டளை, பாம்பு. (வி) தாழ், வணங்கு.

பதி
ஊர், அரசன், கடவுள், கொழுநன், தலைவன், காப்பவன். (வி) ஊன்று, அழுத்து.

பந்தி
வரிசை, குதிரை முதலியவற்றின் பந்தி. (வி) பிணை அல்லது கட்டு.

பயில்
பழக்கம், சைகை, சொல். (வி) பழகு, சொல்.

பரசு
கோடாலி, மழுவாயுதம். (வி) துதி.

பரப்பு
அகலம், கடல், மிகுதி, அளவு. /(வி) பரவச்செய், ஒழுங்கின்றி வை.

பரம்பு
கழனி திருத்தும் பலகை, வரம்பு. (வி) பெருகு, விசாலி.

பரி
குதிரை, சுமை, அன்பு, வருத்தம், விரைவு. (வி) சும, தரி, அன்போடு பேசு.

பலி
சோறு, பிச்சை, பூசை, ஓர் சக்கரவர்த்தி. (வி) செழித்து வளர், சித்தியாகு.

பழி
நிந்தை, குற்றம், குறை, பொய். (வி) இகழ், நிந்தி.

பழு
ஏணிப்பழு Round of a ladder, விலாவெலும்பு rib bone. (வி) பக்குவமாகு.

பறி
பொன், மீன் படுக்குங் கருவி. (வி) கொய், பிடுங்கு.

பறை
வாச்சியம், ஓர் சாதி, ஓரளவு (5 மரக்கால் கொண்டது, இறகு. (வி) சொல்லு.

பற்று
ஆசை, அன்பு, சம்பந்தம், பிடிக்கை, உலோகங்களைப் பொருத்துங்கூட்டு. (வி) பிடி, தொடர், ஒட்டு.

பனி
இமம், அச்சம், குளிர், நடுக்கம், துன்பம். (வி) நடுங்கு, வருந்து.

பாடு
வருத்தம், வேலை, கடமை, பக்கம், குணம், பெருமை, ஓசை. (வி) இசை பாடு, கவிபாடு, வாசி.

பாணி
கை, கள், நீர், இசைப்பாட்டு, தாமதம், நாடு, பல பண்டம், கூத்து. (வி) தாமதி.

பாய்
படுக்கும் பாய், கப்பற் பாய். (வி) குதி, தாவு, பரவு, ஓடு.

பார்
பூமி, அடுக்கு, தேரின் பரப்பு, உரோகிணிநாள். (வி) காண், தேடு, கவனி.

பாலி
ஓர் பாஷை, ஓர் யாறு, கள், செம்பருத்தி. (வி) கா, அருளு.

பாவி
பாவஞ்செய்தவன். (வி) எண்ணு, பாவனைசெய்.

பிடி
பெண்யானை, அள்ளு நாலு விரல் கவிழ்ந்த அளவு. (வி) பற்று, மனத்துக்கிணங்கு.

பிணி
கட்டு, நோய். (வி) கட்டு.

பிண்டி
அசோகமரம், பிண்ணாக்கு, கூட்டம், புனர்பூசம். (வி) குவி, தொகு.

பிதற்று
மயக்க வார்த்தை. (வி) உளறு.

பிதிர்
தந்தை வழியார், யாகம் ஐந்தினொன்று, காலநுட்பம், திவலை. (வி) உதிர், சிதறு.

பிந்து
சத்திதத்துவம், சுத்த மாயை, புள்ளி. (வி) பின்போ, தாமதி.

பிரமி
பிரமிப்பூண்டு. (வி) ஏங்கு, திகை.

பிழி
கள். (வி) சாறுபிழி.

பிழை
குற்றம், தவறு, பொய். (வி) சீவனம்பண்ணு, மோசத்திற்கு விலகு.

பிளிறு
ஆரவாரம், எழுத்திலாவோசை. (வி) ஆரவாரி.

பிறங்கல்
உயர்வு, நெருக்கம், மலை, மிகுதி. (வி) ஒளிர்தல்.

புகல்
விருப்பம், சொல், தஞ்சம், வெற்றி. (வி) சொல்லு.

புகழ்
கீர்த்தி. (வி) துதி, பாராட்டு.

புகை
தூபம், நீராவி. (வி) புகைகிளம்பு, ஆவியெழு.

புடை
பக்கம், இடம், பாம்பு முதலியவற்றின் வளை. (வி) அடி, குத்து, முறத்தாற்புடை, வீங்கு, அசை.

புணர்
புதுமை. (வி) இணங்கு, கல.

புணை
தெப்பம், மூங்கில், விலங்கு. (வி) கட்டு.

புதை
அம்பின்கூடு, புதுமை, மறைவிடம், அறிவுடைமை, (வி) மறை, சேமி, மூடு.

புரட்டு
புரட்சி, மாறுபாடு, பொய். (வி) திருப்பு, சுருட்டு, வஞ்சி.

புரி
கயிறு, ஆசை, கட்டு, ஊர், சங்கு. (வி) செய், விரும்பு.

புலம்பு
தனிமை, புலம்பல், வருத்தம். (வி) அழு, பிதற்று.

புளுகு
பொய். (வி) பொய் பேசு.

புனை
அழகு, சீலை, புதுமை, கால்விலங்கு. (வி) அணி, அலங்கரி.

பூ
மலர், அழகு, பூமி. (வி) மலர்.

பூட்டு
கொளுவி, வில்நாண், பொருத்து. (வி) விலங்கு மாட்டு, பிணை, அணி, நாணேற்று.

பூண்
உலக்கை முதலியவற்றின் பூண், ஆபரணம், கிம்புரி. (வி) தரி.

பூண்டு
பச்சிலைப்பூடு, பதினெண்கணத் தொருவரான பூதர், உள்ளிப்பூடு. (வி) உடுத்தி, அணிந்து.

பெயர்
நாமம், கீர்த்தி. (வி) இடமாறு, பிடுங்கு, அப்புறப்படுத்து.

பெருகு
தயிர். (வி) விருத்தியாகு.

பெருக்கு
வெள்ளம், செல்வ மிகுதி, கணக்கில் பெருக்கம். (வி) அதிகப்படுத்து, குப்பை கூட்டு.

பேதி
பிரிப்பது, கழிச்சல். (வி) வேறுபடுத்து.

பொதி
மூட்டை, அம்பலம், கரிக்காடு, கட்டு. (வி) திணி, அடை, மறை.

பொத்து
துளை, குற்றம், பொய் (வி) மூடு, புதை, அடி.

பொரி
நெல் முதலியவற்றின் பொரி, யானைக்காடு. (வி) பொரியச் செய், வறு, குஞ்சு பொரி.

பொலி
நூற்றா நெற்குவியல். (வி) பெருகு, செழி, புணர்.

பொளி
துளை, வரம்பு, (வி) துளைசெய், கல் முதலிய கொத்து.

பொறி
அடையாளம், அறிவு, எழுத்து, அனற்பொறி, முத்திரை, தோணி, இலக்குமி, இயந்திரம், செல்வம். (வி) எழுது.

போகி

இந்திரன், ஒரு பண்டிகைநாள், பாம்பு, அநுபவிப்போன். (வி) அநுபவி, புணர்.

போக்கு

வழிநடை, பழக்கம், நூல்நடை, நீரோட்டம், இளமரக்கன்று. (அ) போகச்செய், நடத்து, கழி.

போதி

அரசமரம், மலை, ஞானம், (வி) கல்விபயிற்று.

மகிழ்

மகிழமரம், களிப்பு. (வி) களி.

மடக்கு

முடக்கு, ஓர் மட்பாத்திரம், மடக்கலங்காரம், தடை. (வி) மடி, திருப்பு, தடு, உடற்கட்டுக் குலை.

மடங்கு

அளவு, பங்கு. (வி) முடங்கு, கோணு, சாய், தாழ்.

மடி

வயிறு, பசுவின்மடி, பொய், சோம்பல். (வி) கொல்லு.

மண்

அணு 'மண்டிணிந்த நிலனும்' (புறநா - 2), ஒப்பனை, கழுவுதல் (முதனிலைத் தொழிற்பெயர்), சுதைமண், பூமி, முழவின் மார்ச்சனை. (வி) கழுவு 'உன்னுமடியா ருளத்துக்கறையை மண்ண' (தணிகைப். காப்பு - 2).

மண்டலி

பாம்பு, பூனை, நாய், பூமி. (வி) வட்டமிடு.

மதர்

மிகுதி, களிப்பு, செருக்கு. (வி) செழி, களி, செருக்குறு.

மதி

சந்திரன், அறிவு, மாதம், மிருகசீரிடம், அதிமதுரம். (வி) கணி.

மத்தி

நடு. (வி) கடை 'பாற்சமுத்திரத்தை மத்தித்த திருமால்' (கூர்மபு. திருக்கல் - 48).

மலர்

பூ. (வி) அலர்.

மலை

பருப்பதம். (வி) மயங்கு, பொருது, மாறுபடு.

மறி

ஆடு, மான், குதிரை இவற்றின் குட்டி, மேடவிராசி. (வி) தடு, திருப்பு.

மறு

வேறு, மச்சம், மாசு, குற்றம். (வி) இல்லையெனச் சொல், தடு.

மறுகு

தெரு, குறுந்தெரு. (வி) சுழலு, மனங்குழம்பு.

மறை

வேதம், மந்திரம், இரகசியம், திருகுமறை. (வி) மறையச்செய், மூடு, ஒளி.

மன்

அரசன், நிலைபேறு, மிகுதி, ஓரசை நிலை, ஆக்கம். (வி) நிலைபேறு.

மாழ்கு

மிருகசீரிடம், மயக்கம். (வி) நிலைபேறு.

மிசை

மேடு, மேல், சோறு, உயர்ச்சி. (வி) உண்ணு.

மிடை

தூறு. (வி) நெருங்கு, வருந்து.

மிளிர்

பெருமை, ஒளி. (வி) ஒளிசெய், விளங்கு, புரள், பிறழ்.

மிறை

அச்சம், குற்றம், வருத்தம். (வி) துன்பப்படு, துன்பஞ்செய்.

மினுக்கு

பகட்டு, ஒளி. (வி) ஒளிதோன்றச்செய்.

மின்

ஒளி, மின்னல். (வி) ஒளிசெய்.

முகிழ்

மலரும் பருவத்தரும்பு (வி) குவி, சிலிர்.

முகை

மிடா, கூட்டம், முகிழ் opening bud blossom. (வி) மலரரும்பு 'மெல்லிதழ் குயிற்றியதென முகைத்தலர்ந்த கோங்கமே'. (தணிகை நாட்டு 53).

முக்கு
பிரயாசம். (வி) முட்டுப்பட்டனுங்கு 'மெல்வியலே முக்குகின்ற தூல வழறணிக்கும்' (பதார்த்தகுண. 838).

முக்குளி
கோழிமுளையான் (மலையக). (வி) நீரில் மூழ்கு. (வழக்கு).

மூங்கி
குரங்கு. (வி) உண்டு.

முடக்கு
மடக்கு, முடக்கறை, (புறப்பொ - வெண்). (வி) மடக்கு, வளை.

முடி
கிரீடம், குடுமி, நாற்று முடி, முடிச்சு, தேங்காயிற் பாதி. (வி) கட்டு, முற்றுவி, அழி.

முடுகு
முடுகியல் (கலிப்பாவினோருறுப்பு - அது அராகம்). பிங்கல - 208. (வி) எதிர், நெருங்கு, வலிமையாகு.

முடுக்கு
கோண்(வளைவு), கோணத்தெரு, மூலை. (வி) கடாவு, துரத்து.

முடை
புலானாற்றம், புலால், தவிடு. (வி) பின்னு.

முந்து
பழமை (சூ.நிக. 8 : 45). (வி) முற்படு.

முயல்
போர், முசல் இது வடகீழ்த்திசைப் பாலன்குறி. (வி) முயற்சிசெய்.

முருக்கு
எலுமிச்சை (தைல-தைலவதை-73, முருக்கமரம் (வைத்திய பரி). (வி) அழி 'முன் மலைவாரை முருக்கினனே' (சிவதரு - செனன மரண 99).

முளி
செம்முள்ளி (தைல-தைலவ. 72), மரக்கணு. (வி) காய் 'முளி தயிர்பிசைந்த காந்தள்மெல் விரல்' (பத்துப்பாட்டு).

முளை
அங்குரம், ஆப்பு, தறி peg, தண்டாயுதம், மூங்கில். (வி) வெளிப்படத்தோன்று, உண்டாகு.

முறி
உயர்ந்த வெண்கலம், இலை, தளிர், துண்டு, எழுது முறி. (வி) துண்டி, முறியச் செய், ஒடி.

முற்று
முடிவு. (வி) முதிர், முடி.

முனி
ஞானி, தவத்தோன், அகத்திமரம், வில், யானைக்கன்று. (வி) வெறு, சின.

மெழுகு
அரக்கு Beerwax. (வி) தரைமெழுகு.

மொய்
கூட்டம், பெருமை, போர், யானை, வண்டு. (வி) நெருங்கு.

வக்கு
வழி. (வி) வதக்கு, "கொழுப்பரிந்து - வக்குவன வக்குவித்து". (பெரியபு-கண்ணப்ப-145).

வசி
கூர்மை, கழுமுள், சூலம், வாள், வசியம். (வி) தங்கு அல்லது வாசஞ்செய்.

வஞ்சி
படர்கொடிப்பொது, சீந்திற்கொடி, கருவூர், பெண், அஷ்ட வெற்றிலைமாலையிலொன்று, வஞ்சித்தளை. (வி) வஞ்சனைசெய்.

வடி
கள், கூர்மை as வடிவேல், மாவடு. (வி) ஒழுகு, வற்று, கூராக்கு, வடியச்செய், தெளித்தெடு.

வதி
சேறு, வழி. (வி) தங்கு.

வதை
கொலை. (வி) கொல்லு, துன்புறுத்து.

வரி
விரலிறை, சங்கு, குடியிறை. (வி) எழுது, பூசு, கட்டு.

வரை
அளவு, மலை, மூங்கில். (வி) எழுது, நீக்கு, விவாகஞ் செய்.

வலி
வல்லமை, ஓர் நோய். (வி) இழு.

வழி
நடை, இடம், பழமை, முறைமை. (வி) துடைத்தெடு.

வழுக்கு
தவறு, மறதி, நிணம் (வி) சறுக்கு.

வளை
நுழைவளை, கங்கணம், சங்கு, சக்கரம், கைவளை. (வி) சூழ்.

வன்னி
நெருப்பு, தணக்குமரம், வன்னிமரம். (வி) வருணி (சிறப்பி).

வாக்கு
சொல், முப்பொறியினொன்று. (வி) வடிகட்டு 'வாக்குதேனுகர் மாக்களை மானுமே' (கம்பரா-ஆற்றுப்பட)

வாசி
மாமரம், குதிரை, சௌக்கியம், சுவாசம், அச்சுவினி நட்சத்திரம். (வி) வீணை முதலியன வாசி, வித்தைகல்.

வாடி
அடைப்புள்ள இடம் (வழக்கு), தொட்டால்வாடி (வைத்திய பரி), ஓர் ஊர். (வி) மெலிந்து, வதங்கி.

வாட்டு
வதக்கிய பதார்த்தம் 'வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்' (ஔவை. தனிப்பாடல்). (வி) துன்புறுவி, வாடப்பண்ணு.

வாதி
வாதவித்தை செய்பவன், தர்க்கஞ் செய்பவன், முறைப்பாடுகாரன் the plaintiff, கெந்தியுரிபாஷாணம். (வி) வருதப்படுத்து.

வார்
கச்சு, கடைகயிறு (சிந்தாமணி), தோல்வார் (வழக்கு), நீர், நீளம், நேர்மை, (வி) பெய்.

விசுவாசி
வேங்கைமரம் (வைத்திய. பரி). (வி) நம்பு.

விதந்து
மங்கலியமிழந்தவள் (வழக்கு). (வி) சிறப்பு விதியாக எடுத்துச் சொல்லி (நன்னூ. விருத்தி. பதலிய. 10. உரை).

விதி
ஊழ், கட்டளை, நியமிப்பு, பிரமன். (வி) நியமி, உண்டாக்கு, சொல்லு.

விரோதி
சத்துரு, ஓர் வருஷம். (வி) பகை, வேற்றுமைப்படுத்து.

விலங்கு
காற்றளை (கால் விலங்கு), குறுக்கு, மிருகத்தின் பொது, பறவை 'தீவினையே னண்பினின்றும், விலங்கானே னாதலினால் விலங்கினே, னின்னுமுயிர் விட்டி லேனால்' (ஆரணிய. சடாயுகாண். 22). (வி) எதிர்நின்று தடு (புறநா), குறுக்கிடு (ஐங்குறுநூ), விலக்கு.

வில்
ஒளி, தனு, மூலநாள். (வி) விற்பனைசெய்.

விளக்கு
ஒளி, சோதிநட்சத்திரம், தீபம். (வி) தெளிவி, அழுக்கை நீக்கிப் பிரகாசிப்பி.

விளி
இசைப்பாட்டு, ஓசை, கொக்கரிப்பு. (வி) அழை.

விளை
ஓர் மீன், கொல்லை. (வி) உண்டாகு.

வீங்கி
சேங்கொட்டை (வைத்தியபரி). (வி) வீக்கமுற்று.

வீழ்
மரத்தின் விழுது (நாலடி.தாளாண்மை. 7). (வி) விழு.

வெடி
துப்பாக்கி முதலியவற்றிற் பிறக்கு மொலி, அச்சம், வெளி, இடி, கள், நறும்புகை. (வி) பிளவென்னேவல்.

வே
ஓரெழுத்து, வேவு (ஒற்று). (வி) வேவென்னேவல்.

வேதி
ஓமகுண்டம், திண்ணை, கேட்டைநாள், மதில். (வி) வேறாக்கு, விகாரப்படுத்து.

வேய்
உட்டுளைப்பொருள், மூங்கில். (வி) மூடு, சூடு, அலங்கரி, அணி.

வை
கூர்மை, புல், வைக்கோல், பூமி. (வி) வையென்னேவல்.

வௌவி
மான். (வி) கொள்ளையிட்டு, திருடி, பிடித்து.

# List of the Names of Groups

## கூட்டப் பெயர்களின் அட்டவணை

அகக்கூத்து-2.
சாந்திக்கூத்து, விநோதக்கூத்து. "சாந்திக்கூத்தும் விநோதக்கூத்துமென் றாய்ந்துற வகுத்தன னகத்தியன்றானே" என்றாராகலின். அவற்றுள் சாந்திக்கூத்தாவது நாயகன் சாந்தமாக ஆடிய நடனம். விநோதக் கூத்தாவது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை யென்பனவாம்.

அகத்திணை - 7.
கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை.

அகப்பகை - 6.
காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

அகிற்கூட்டு - 5.
சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி - 3.
ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினியம்.

அங்கம் - 4.
தேர், கரி, பரி, காலாள்; இவை சதுரங்கமெனப்படும்.

அங்கம் - 5.
திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்; இவை பஞ்சாங்க மெனப்படும்.

அங்கம் - 10.
மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல்; இவை மன்னர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம் - 8.
இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; இவற்றுள் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்பவை யோகத்திற்சரியை; பிரத்தியாகாரம், தாரணை என்னு மிரண்டும் யோகத்திற் கிரியை; தியானம் யோகத்தில் யோகம்; சமாதி யோகத்தில் ஞானம்.

அடியவர்
வைணவருள் ஆழ்வார்கள் பன்னிருவரும், சைவருள் அறுபத்து மூன்று நாயன்மாரு மாவர்.

அந்தணர் தொழில் - 6.
ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

அமுதவெழுத்துக்கள் - 11.
அ, இ, உ, எ, க, ச, த, ந, ப, ம, வ என்பனவாம்.

அரசசின்னம் - 21.
முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசர் - 3.
சோழன், சேரன், பாண்டியன்.

அரசர்க்குக்குழு - 5.
அமைச்சர், புரோகிதர், சேனாதிபர், ஒற்றர், தூதர்.

அரசியல் - 6.
படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரண் - 4.
மலை; காடு, மதில், கடல்.

அவத்தை - 5.
சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு - 4.
எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்.

அறப்பகுதி - 2.
இல்லறம், துறவறம்.

அறம் - 32.
ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தாருக்கு உண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம்,

பிணிக்கு மருந்து, வண்ணார்,
நாவிதர், கண்ணாடி, காதோலை,
கண்மருந்து, தலைக்கெண்ணெய்,
பெண்போகம், பிறர்துயர் போக்கல்,
தண்ணீர்ப்பந்தல், மடம், தடம்,
சோலை, ஆவுறிஞ்சுதறி,
விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல்,
விலை கொடுத்து உயிர்நோய்
தீர்த்தல், கன்னிகாதானம்.

ஆச்சிரமம் - 4.
பிரமசரியம், கிருகஸ்தம்,
வானப்பிரஸ்தம், சந்நியாசம்.

ஆடவர் குணம் - 4.
அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி.

ஆதாரதலம் - 6.
(மூலாதாரம்) திருவாரூர், (சுவாதிட்டானம்) திருவானைக்கா, (மணிபூரகம்) திருவண்ணாமலை, (அநாகதம்) சிதம்பரம், (விசுத்தி) திருக்காளத்தி, (ஆக்கினை) காசி. இவற்றிற்கு முறையே இடம் : குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி; இவற்றிற்குரிய தேவதைகள்; விநாயகர்-மூலாதாரம். பிரமன்-சுவாதிட்டானம், விட்டுணு-மணிபூரகம், உருத்திரன்-அநாகதம், மகேசுரன்-விசுத்தி, சதாசிவன்-ஆக்கினை.

ஆன்மசரீரம் - 3.
தூலசரீரம், சூக்குமசரீரம்,
காரணசரீரம்.

ஆன்மதத்துவம் - 24.
பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

ஆன்மவறிவு - 6.
சுவையறிவு, ஒளியுணர்வு,
ஊறுணர்தல், ஓசையுணர்வு,
கந்தவறிவு, பகுத்தறிவு.

இசைக்கருவி - 5.
தோற்கருவி, துளைக்கருவி,
நரம்புக்கருவி, கஞ்சக்கருவி,
மிடற்றுக்கருவி.

இசைப்பிறப்பிடம் - 7.
நெஞ்சால் விளரி, மிடற்றால் குரல்,
நாவினாற் றுத்தம், மூக்காற் றாரம்,
அண்ணத்தாற் கைக்கிளை,
சிரத்தால் உழை, நெற்றியால் இளி.

இடம் - 3.
தன்மை, முன்னிலை, படர்க்கை.

இடைவள்ளல் - 7.
அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன்,
கண்ணன், சந்திமான், சிசுபாலன்,
தந்தவக்கிரன்.

இதிகாசம்
பாரதம், இராமாயணம், சிவரகசியம்.

இந்திரன் தருக்கள் - 5.
அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம்,
பாரிசாதம், மந்தாரம்.

இந்திரியங்கள் - 10.
வாக்கு, பாதம், பாணி, பாயு,
உபத்தம், சுரோத்திரம், தொக்கு,
சக்கு, சிங்குவை, ஆக்கிராணம்.

இரசம் - 9.
சிருங்காரம், வீரம், பெருநகை,
கருணை, இரௌத்திரம், (பெருங்
கோபம்), குற்சை, (அருவருப்பு),
சாந்தம், அற்புதம், அச்சம்.

இரத்தினம் - 9.
கோமேதகம், நீலம், பவளம்,
புட்பராகம், மரகதம், மாணிக்கம்,
முத்து, வைடூரியம், வைரம்.

இராகம் - 32.
பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி,
குறிஞ்சி, பூபாளம், வேளாவளி,
மலகரி, பௌளி, சீராகம்,
இந்தோளம், பல்லதி, சாவேரி,
படமஞ்சரி, தேசி, இல்லிதை,
தோடி, வசந்தம், இராமக்கிரியை,
வராளி, கைசிகம், மாளவி,
நாராயணி, குண்டக்கிரியை,
கூர்ச்சரி, பங்காளம், தந்நியாசி,
காம்போதி, கௌளி, நாட்டை,
தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம்.

இராசி - 12.
மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம்,
சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம்,
தனுசு, மகரம், கும்பம், மீனம்.

இருமை - 2.
இம்மை, மறுமை.

இலக்கணம் - 5.
எழுத்து, சொல், பொருள், யாப்பு,
அணி.

**இலிங்கம் - 5.**
பிருதிவி (காஞ்சி), அப்பு (திருவானைக்கா), தேயு (திருவண்ணாமலை), வாயு (சீகாளத்தி), ஆகாயம் (சிதம்பரம்), இவையே பஞ்சபூத வடிவங்களான பஞ்சலிங்கமாம்.

**இலிங்கவகை - 7.**
பராத்தலிங்கம் அல்லது திரலிங்கம் சிவபிரான் சங்காரகாலம் வரையும் சமீபத்திருந்து ஆன்மாக்களுக்கு (அருள்புரிவது), சுயம்புலிங்கம் (தானே தோன்றியது), காணலிங்கம் (கரிமுகன், அறுமுகன் முதலிய கணங்களால் தாபிக்கப்பட்டது), தைவிகலிங்கம் (தேவர்களால் தாபிக்கப்பட்டது), ஆரிடலிங்கம் (முனிவர், அசுரர் முதலாயினோரால் தாபிக்கப்பெற்றது), மானுடலிங்கம் (மக்களால் ஏற்பட்டது), க்ஷணிகலிங்கம் (மண், மணல், கோமயம், அன்னம், சந்தனம், பூ, சர்க்கரை, மா, முதலியபொருளால் லிங்கமாக்கிப் பூசித்ததும் விடப்படுவது.

**இழிசொல் - 4.**
குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.

**இறைவன் தொழில் - 5.**
படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், இதுவே பஞ்சகிருத்தியமெனப்படும்.

**ஈச்சுரபேதம் 9.**
சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், விட்டுணு, பிரமன்.

**ஈச்சுரன் குணம் 8.**
தன்வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கையுணர் வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை.

**ஈச்சுரன் முகம் - 5.**
ஈசானம் (அனைத்தும் ஆளுதல்), தற்புருடம் (காத்தல்), அகோரம் (அழித்தல்), வாமம் (விளக்கல்), சத்தியோசாதம் (தோற்றுவித்தல்).

**உட்பகை - 6.**
அகப்பகை யென்பதைக் காண்க.

**உண்டி - 4.**
உண்டல், தின்றல், நக்கல், பருகல்.

**உபசாரம் - 16.**
தவிசளித்தல், கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடிநீர் தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல் தரல், தேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திரமலரா னருச்சித்தல்.

**உபநிடதம் - 108.**
ஐதரேயம், கௌஷீதகி, நாதவிந்து, ஆத்மப் பிரபோதம், நிருவாணம், முற்கலை, அக்ஷமாலிகை, திருபுரை, சௌபாக்கியம், வக்விருட்சானை (இப்பத்தும் இருக்குவேத உபநிடதம்); கடவள்ளி தைத்திரீயம், பிரம்மம், கைவல்லியம், சுவேதாச்சுவதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்னி ருத்திரம், க்ஷுரிகம், சர்வசாரம், சுதரகஸ்யம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தட்க்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாநீரகம், யோகசிகை, ஏகாட்சரம், அட்சியம், அவதூதம், கரம், உருத்திர விருதயம், யோககுண்டலினி, பஞ்சப் பிரமம், பிராணாக்கினி, தோத்திரம், வராகம், கலிசந்தராணம், சரசுவதி, ஈசாவாசியம், பிருகதாரண்யம், சாபாலம், ஹம்ஸம், பரமஹம்ஸம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகி, மண்டலம், அத்துவயதாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், அத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞுவல்கியம், சாட்டியாயனி, முத்தீகம், (இவ்வைம்பத்தொன்றும் யசுர்வேத உபநிடதங்கள்; கேணம், சாந்தோக்கியம், ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி,

வட்சிரசூசிகம், யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியத்தம், குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்க சாபாலம், தரிசனம், சாபாலம் (இப்பதினாறும் சாமவேத உபநிடதங்களாம்); பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகச்சாபாலம், நிருசிம்ஹதாபனி, நாரதபரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்விய மகாநாராயணம், இராமரகஸ்யம், இராமதாபனி, சாண்டில்யம், பரமகம்சபரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம், திரிபுராதபினி, தேவி, பாவனை பஸ் மசாபாலம், கணபதி, மகாவாக்கியம், கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்கிரீவம், தத்தாத்திரேயம், காருடம் (இம் முப்பத்தொன்றும் அதர்வணவேத உபநிடதங்களாம்).

உபநிடதம் - 32.

சீருத்திரம், பிருகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வார்சியாயநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம்.

உபாயம் - 4.

சாமம், தானம், பேதம், தண்டம்.

உயிர்த்தோற்றம் - 4.

கருப்பை, முட்டை, நிலம், வியர்வை, இவற்றை வடநூலார் சராயுசம், அண்டசம், உற்பீசம், சுவேதசம் என்பர்.

உயிர்வேதனை - 12.

அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவறாமை.

உலகம் - 14.

மேலுலகமாவன ஏழு. அவை: பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோகம்; கீழேழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

உலோகம் - 5.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் (இவையே பஞ்சலோகம்), இவையன்றிப் பதுகம் (தரா), இரதி (பித்தளை), நாகம் (காரியம்), கஞ்சமு (வெண்கலம்) முண்டு.

ஊழ்வகை - 3.

பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம்.

ஊறு - 8.

வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சருச்சரை. இவையே தொடப்படும் பொருளுக்கு எண்குணம்.

ஐசுவரியம் - 8.

இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புலநுகர்ச்சியி னிறப்பன - 5.

சுவையாலிறப்பது மீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால் யானை, ஓசையால் அசுணம், ஒளியால் விட்டில்.

கடல் - 7.

உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடல்படு திரவியம் - 5

பவளம், முத்து, சங்கு, உப்பு, ஓக்கொலை.

கடன் - 3.

தேவர்கடன், பிதிர்கடன், முனிவர்கடன்.

கடுகம் - 3.

சுக்கு, திப்பிலி, மிளகு.

கடைவள்ளல் - 7.

பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி.

கணம் - 18.

அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போக பூமியர்.

கதி - 4.
தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கரணம் - 3.
மனம், வாக்கு, காயம்.

கருமேந்திரியம் - 5.
வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்.

கருவுள் வாதனை - 5.
கருப்பாசயப்பையுறுத்தல், சலம் பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு முறித்துத் தள்ளுதல், யோனித்துவாரத்தால் நெருக்குண்டல்.

கலைஞானம் - 64.
அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனகலை, மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம்.

கவி - 4.
ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

கன்னிகை-5.
அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி.

காடுபடு திரவியம் - 5.
அரக்கு, இறால், தேன், மயிற்பீலி, நாவி.

காப்பியம் - 5.
சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி.

காரணம் - 3.
முதற்காரணம்(மாயை), துணைக்காரணம் (சிவசத்தி), நிமித்தகாரணம் (ஈசன்).

காலம் - 3.
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

கிரகம் - 9.
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது.

கிரகதானியம் - 9.
கோதுமை, பச்சையரிசி, துவரை, பச்சைப்பயறு, கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்.

குணம் - 3.
சத்துவம், இராசதம், தாமதம்.

குரவர் - 5.
அரசன், உபாத்தியாயர், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம் - 3.
காமம், வெகுளி, மயக்கம்.

கூந்தற்பால் - 5.
முடி (உச்சியில் மயிரை முடித்தல்), குழல் (சுருட்டி முடித்தல்), தொங்கல் (முடிந்து விடுதல்), பனிச்சை (பின்னி விடுதல்), சுருள் (பின்னே செருகல்).

கோசம் - 5.
அன்னமயகோசம் (உடல்), பிராணமயகோசம் (கருமேந்திரியமும் பிராணனும்), மனோமயகோசம் (கருமேந்திரியமும்மனமும்), விஞ்ஞானமயகோசம் (ஞானேந்திரியமும் புத்தியும்), ஆநந்தமயகோசம் (அவித்தை).

சக்கரவர்த்திகள் - 6.
அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன். (இவர்கள் மற்றொருவனைப் பணியாது அரசுபுரிந்தார்கள்.)

சத்தி - 3.
இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி.

சத்தி - 5.
ஆதிசத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி.

சந்தனாசாரியர் - 4.
மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியர்.

சபை - 5.
திருவாலங்காடு (இரத்தினசபை), சிதம்பரம் (கனக சபை), மதுரை (வெள்ளிச்சபை), திருநெல்வேலி (தாமிரசபை), திருக்குற்றாலம் (சித்திரசபை).

சமயகுரவர் - 4
திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்.

சமயம் - 6.
சைவம், வைணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் (வைதிகமதம்).

சயனம் - 5.
இலவம்பஞ்சி, செம்பஞ்சி, வெண்பஞ்சி, இறகு, அன்னத்தூவி.

சாதி - 4.
ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகாராட்டிரம்.

சாத்திரம் - 6.
வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சித்தர் - 9.
சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அயாதிநாதர், வருனிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்.

சித்தாந்த சாத்திரம் - 14.
திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்பநிராகரணம்.

சித்தி - 8.
அணிமா (ஆன்மாப்போலாதல்), மகிமா (மகத்துவமாதல்), கரிமா (தன்னுடல் இருப்புமலையினுங் கனமாதல்), இலகிமா (இலகுத்து வமாதல்), பிராத்தி (வேண்டுவன அடைதல்), பிராகாமியம் (நினைத்த போகம் பெறுதல்), ஈசத்துவம் (ஆட்சி யுளனாதல்), வசித்துவம் (அனைத்தும் தன்வசமாக்க வல்லனாதல்).

சிரஞ்சீவியர் - 7.
அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமான், விபீடணன், கிருபாசாரியன், பரசுராமன்.

சிவதத்துவம் - 5.
சுத்தவித்தை, (ஞானமேறிக் கிரியை குறைந்தது), ஈச்சுரம் (ஞானங்குன்றிக் கிரியையுயர்தல்), சதாக்கியம் (ஞானங் கிரியையொத்தது), சத்தி, (கிரியைநாடல்), சிவம் (ஞானமொன்றல்).

சுடர் - 3.
சூரியன், சந்திரன், அக்கினி.

சுவை - 6.
கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூரியர் - 12.
தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டா. (இப்பெயர் சித்திரைமாத மேடவிராசி முதல் ஒவ்வொரு மாதத் தொவ்வோ ரிராசியிற் புகுந்த சூரியனுக்கு முறையே ஆகும்).

சொல்லின் பாகுபாடு - 3.
உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல்.

ஞானவகை - 4.
கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்.

தத்துவம் - 96.
ஆன்மதத்துவம்-24, நாடி-10, அவத்தை-5, மலம்-3, குணம்-3, மண்டலம்-3, பிணி-3, விகாரம்-8, ஆதாரம்-6, தாது-7, வாயு-10, கோசம்-5, வாயில்-9.

தந்தையர் - 5.
பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந் தந்தோன், ஆபத்துக்கு உதவினோன்.

**தமிழ் - 3.**
இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

**தருமநூல் - 18.**
மநு, அத்திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபத்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிருகற்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம்.

**தாது - 7.**
இரதம், (உமிழ்நீர்), இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

**தாயர் - 5.**
தன்னையீன்றாள், அரசன்தேவி, குருவின்தேவி, அண்ணன் தேவி, தன்தேவியை யீன்றாள்.

**திக்கு - 10.**
கிழக்கு (கருடதிசை), தென்கிழக்கு (பூனைத்திசை), தெற்கு (சிங்கத்திசை), தென்மேற்கு (சுனகன்திசை), மேற்கு (நாகத்திசை), வடமேற்கு (எலித்திசை), வடக்கு (யானைத்திசை), வடகிழக்கு (முயற்றிசை), விசும்புத்திசை (மேல்), பாதாளதிசை (கீழ்.).

**திக்குப்பாலகர் - 8.**
இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

**திக்குயானைகள் - 8.**
கிழக்காதி முறையே: ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம்.

**திணை - 5.**
குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.

**திதி - 15.**
பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சட்டி, சத்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசியை.

**திருமாலவதாரம் - 10.**
மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், சீராமன், பலபத்திரன், கிருஷ்ணன், கற்கி.

**திருமாலாயுதம் - 5.**
சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

**தீவு - 7.**
நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. (இவ் வெழுவகைப் பொருளும் அவ்வத்தீவில் மிக்கன வாகையா லிவற்றாற் பெயர்பெற்றன.).

**தேசம் - 56.**
அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னாடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம் மலையாளம், மாளவம், யுகந்தரம் வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

**தேவராடல் - 11.**
கொடுகொட்டி (எந்தையாங் கந்தவேளின் தந்தை தன்னொடு பொருத அவுணரோடு அன்னாரது திரிபுரமும் தீமடுத் தெரியக்கண்ட வெற்றிக்களிப்பால் கைகொட்டி நின்றாடியது), பாண்டரங்கம் (திசைமுகன் பொருட்டுச் சங்கரன் பாரதி வடிவமெய்தி ஆடியது), குடை (முருகவேள் அவுணரை யொழிப்பான் தம் குடையை முன்னேசாய்த்து அதுவே ஒருமுகவெழுனியாக நின்றாடியது), துடி (செங்கதிரைவேலன் வஞ்ச நெஞ்சினனான சூரபன்மனை அழிக்கத் துடிகொட்டி ஆடியருளியது), அல்லியம் (கண்ணபிரான் கஞ்சன் விடுத்த குவலயா பீடமென்னும் யானையின் கொம்பை ஒசித்தற்கு

நின்றாடியது), மல் (நெடுமால் வாணாசுரனின் உயிர்போக நெரித்துத் தொலைத்தற்கு ஆடியது), குடம் (வாணாசுரனால் சிறைநின்ற அநிருத்தனை மீட்பதற்குத் திருமால் பஞ்சலோகங் களாலும் மண்ணாலுமாயக் குடங்கொண்டாடியது), பாவை (அவுணர் மோகித்து வீழச்செய்யவள் கொல்லிப்பாவை வடிவெய்தி ஆடியது), மரக்கால் (மாயவளாகிய துர்க்காதேவி அவுணரது மாயமெல்லாம் நீங்க மரக்கால் கொண்டாடியது), பேடி (காமன் தனது மகன் அநிருத்தனைச் சிறைமீட்டற்கு ஆண்மைத்தன்மையிற் றிரிந்த பெண்மைக்கோல மெய்தி ஆடியது), கடையம் (வாணனகத்து வடவாயிற் கணுளதாய வயலில் நின்று இந்திராணி ஆடியது).

தொழில் - 5.
ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

நட்சத்திரம் - 27.
அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி.

நதி - 7.
கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி.

நாடி - 10.
சுழிமுனை (ஆதாரமாறினு மூடுருவி நிற்பது), இடை, பிங்கலை (இவ்விரண்டுங் கத்திரிகைக் கால்போற் பின்னி நிற்பன), காந்தாரி (நாபியிற்றோன்றிச் சத்தத்துக்கு ஆதரவாய்க் கண்டத்துறுவது), அத்தி, சிகுவை (இவ்விரண்டும் செவியில் 120 நரம்புற்றிருப்பன), குரு (குய்யம்பற்றி நிற்பது), சங்கினி (உபத்தத்தைப்பற்றி நிற்பது).

நியமம் - 10.
தவம், மனமுவந்திருத்தல், கடவுளுண்டென்பதில் நம்பிக்கை, நியாயவழியில் தேடிய பொருளைத் தக்கார்க்கு ஈதல், உயிர்க்குறுதி பயக்கு முண்மைநூல்களைக் கேட்டல், குலம் செல்வம் அதிகாரங்களாலே செருக்கின்றி அடங்கி யொழுகுதல், நல்லது பொல்லதைப் பகுத்தறிதல், செபம், விரதம்.

நிலம் - 5.
குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.

நூல் - 3.
முதனூல், வழிநூல், சார்புநூல்.

பஞ்சமூலம் - 5.
செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

பட்சி - 5.
வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். இவற்றிற்கு முறையே எழுத்து அ, இ, உ, எ, ஒ- இவற்றிற்குத் தொழில் உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு, சாவு தூக்கமில்லாத பொழுதறிந்து செய்யுள் முதலியன இயற்றவேண்டும்.

பண் - 4.
பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி - 4.
சாலோகம் (கடவுளுலகத்தில் வாழ்தல்), சாமீபம் (கடவுள் சமீபத்து வாழ்தல்), சாரூபம் (கடவுளுருப் பெற்று வாழ்தல்), சாயுச்சியம் (கடவுளோடு அத்துவிதமுற்று வாழ்தல்).

பருவகாலம் - 6.
கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில், இவை ஆவணிமுதலாக இரண்டிரண்டுமாக ஒவ்வொன்றாம்.

பருவம் - 4.
பாலை, தருணி, பிரவிடை, விருத்தை.

பருவம் - 7.
பேதை (5 முதல் 7 ஆண்டு அளவு), பெதும்பை (8-11), மங்கை (12-13), மடந்தை (14-19), அரிவை (20-25), தெரிவை (26-31), பேரிளம்பெண் (32-40).

பழம் - 3.
பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம்.

பா - 5.
வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா.

பாதகம் - 5.
கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை.

பிணி - 3.
வாதம், பித்தம், சிலேத்துமம்.

பிரபந்தம் - 96.
பிரபந்தம் தொண்ணூற்றாறும் அகலக்கவியெனவும் வித்தாரகவி யெனவும் பெயர்பெறும். பிள்ளைக் கவி (இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைத்து), பரணி, கலம்பகம், அகப்பொருட் கோவை, ஐந்திணைச் செய்யுள், வருக்கக் கோவை, மும்மணிக் கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அநுராகமாலை, இரட்டைமணிமாலை, இணைமணி மாலை, நவமணிமாலை, நான்மணி மாலை, நாமமாலை, பலசந்தமாலை, பன்மணிமாலை, மணிமாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சிமாலை, வருக்கமாலை, மெய்க்கீர்த்திமாலை, காப்புமாலை, வேனின்மாலை, வசந்தமாலை, தாரகைமாலை, உற்பவமாலை, தானைமாலை, மும்மணிமாலை, தண்டகமாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக் கரந்தைமஞ்சரி, போர்க்கெழுவஞ்சி, வரலாற்றுவஞ்சி, செருக்களவஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பைமாலை, வாகைமாலை, தோரணமஞ்சரி, எண்செய்யுள், தொகைநிலைச் செய்யுள், ஒலியலந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, உலா, உலாமடல், வளமடல், ஒருபாவொருபஃது, இருபாவிருபஃது, ஆற்றுப்படை, கண்படை நிலை, துயிலெடைநிலை, பெயரின்னிசை, ஊரின்னிசை, பெயர்நேரிசை, ஊர்நேரிசை, ஊர்வெண்பா, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், அரசன் விருத்தம், நயனப்பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம், கேசாதிபாதம், அலங்கார பஞ்சகம், கைக்கிளை, மங்கலவள்ளை, தூது, நாற்பது, குழமகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறிவுறூஉ, வாயுறைவாழ்த்து, புறநிலைவாழ்த்து, பவனிக்காதல், குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு, ஊசல், எழுகூற்றிருக்கை, கடிகைவெண்பா, சின்னப்பூ, விருத்தவிலக்கணம், முதுகாஞ்சி, இயன்மொழிவாழ்த்து, பெருமங்கலம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.

புரம் - 3.
இருப்புமதில், வெள்ளி மதில், பொன்மதில்.

புராணம் - 18.
வைணவம், சைவம், சாகவதம், பிரமம், பதுமம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பவிடியம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், வாயவியம்.

புரி - 7.
அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புருடார்த்தம் - 4.
அறம், பொருள், இன்பம், வீடு.

புலன் - 5.
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

பூ - 4.
கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ.

பூதம் - 5.
அனல், புனல், கால், மண், விண்.

பெண்வகை - 4.
பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பொருள் - 2.
கல்விப்பொருள், செல்வப்பொருள்.

பொழுது - 6.
மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு. (இவை அத்தம காலமுதல் ஒவ்வொன்று பப்பத்து நாழிகையாக முறையே வரும்).

பொறி - 5.
மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொன்வகை - 4.
ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போகம் - 8.
பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

மங்கலம் - 8.
சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்.

மணம் - 8.
பிரமம் (பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது), பிரசாபத்தியம் (தலைமகளினத்தார் இணங்கித் தீ முன்னதாகக் கன்னிகையைத் தருவது), ஆரிடம் (ஒன்றிரண்டு பசுவு மெருதும் பெற்று அதற்கீடாய்க் கன்னியைத் தீ முன்னே தருதல்), தெய்வம் (வேள்வியால் வந்த கன்னியைத் தீ முன்னர் ஈதல்) காந்தருவம் (கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவரும் தனியிடத்தே எதிர்ப் பட்டுத் தாமே கூடுவது), அசுரம் (பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் பொன் தந்து கொள்வது), இராக்கதம் (பெண்ணும் பெண்ணைச் சார்ந்தவரும் உடன்படாதகாலை வலிதிற் கொள்வது), பைசாசம் (துயின்றாளைச் சென்று அணைதல்).

மருந்து - 4.
சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருத சஞ்சீவினி.

மலம் - 3.
ஆணவம், மாயை, கன்மம்.

மன்மதன் கணை - 5.
தாமரை (சொல்லும் நினைவும் தடுமாறல்), மாமலர் (வெய்துயிர்த் திரங்கல்), அசோகு (வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும்), முல்லை (அழுங்கலு மொழிபல பிதற்றலும்), சீலம் (அயர்ப்பும் மயக்கமும்).

மாதம் - 12.
சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி: இவற்றிற்கு முறையே உரிய நட்சத்திரம் - சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

முதலெழு வள்ளல் - 6.
குமணன், சகரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி.

மும்மை - 3.
உம்மை, இம்மை, மறுமை.

முனிவர் - 7.
அகத்தியன், ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன்.

மூலம் - 10.
கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சிவேர் (இவை சிறுபஞ்ச மூலமென்ப), வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழை வேர், பாதிரிவேர், வாகைவேர் (இவை பெரும்பஞ்ச மூலமென்ப).

மேகம் - 7.
சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், கங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், (இவை முறையே பொழிவன: மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ).

யாகம் - 5.
பிரமயாகம் (வேதமோதல்), தெய்வயாகம் (ஓமம் வளர்த்தல்), பூதயாகம் (பலியீதல்), பிதிர்யாகம் (தர்ப்பண முடித்தல்), மானுடயாகம் (இரப்போர்க்கு உணவுமுதலிய ஈதல்).

யாழ்வகை - 4
பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ். (இவற்றிற்கு முறையே நரம்புகள் - 7, 16, 17, 21).

யுகம் - 4.
கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

வசுக்கள் - 8.
அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

வண்டு வகை - 4.
சுரும்பு, தேன், ஞிமிறு, வண்டு.

வண்ணம் - 5.
வெண்மை, கறுமை, செம்மை, பொன்மை, பசுமை.

வருடம் - 60.
பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கீரச, சீமுக, பவ, யுவ, தாது, ஈசுவர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய(இவ் விருபதும் உத்தமவருடம்), சருவசித்து, சருவதாரி, விரோதி, விக்குருதி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி விசுவாவசு, பராபவ (இவ்விருபதும் மத்திம வருடம்), பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சச, நள, பிங்கள, காளயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துபி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய (இவ்விருபதும் அதமவருடம்).

வாசம் - 5.
இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாயில் - 9.
கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.

வாரம் - 7.
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

வித்தைகள் - 14.
வேதம்-4, வேதாங்கம்-6, மீமாஞ்சை, தருக்கம், புராணம், தருமநூல்.

விநாயகர் சத்திகள் - 3.
சித்தி, புத்தி, வல்லபை.

வினை - 2.
நல்வினை, தீவினை.

வெற்றி - 8.
பகைநிரைகவர்தல், பகைவர் கவர்ந்த தன்நிரை மீட்டல், பகைமேற் செல்லல், வரும்பகைமுன் னெதிரூன்றல், தன்னரண் காத்தல், பகையரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல். (இவற்றிற்கு முறையே வெற்றிமாலையாவன; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை).

வேதம் - 4.
இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம்.

வேதாங்கம் - 6.
சிக்ஷை (வேதத்தின் உச்சாரண இலக்கணத்தைக் கூறுதல்), வியாகரணம் (வேதத்தின் பதலக்கணத்தை விவரிப்பது), நிருத்தம் (வேதத்தின் பதங்களுக்கு விவரணங்கூறுவது), சோதிடம் (இலக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணமுதலியவற்றால் வைதிக கருமங்களை இயற்றுதற்குரிய காலத்தை அறிவித்தல்), கற்பம் (ஆபத்தம்பம் முதலிய சூத்திரங்களிலிருந்து வைதிக கருமங்களைப் பிரயோகிக்கும் முறைகளைக் கூறுதல்), சந்தோபிசிதம் (வேதங்களின் உக்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்கரசங்கியைக் கற்பிப்பது).

வைணவாகமம் - 2.
பாஞ்சராத்திரம், வைகாநசம்.

நோக்கு

4/1083 நேரு நகர்

2 ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம்

சென்னை 600 096

செல்: 9380626448